விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 புரட்டாதி 05 ஞாயிற்றுக்கிழமை (21.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 276

# தமிழரின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு அவசியம்

## பா.ஜ.க தலைவர்கள் மகிந்தவிடம் வலியுறுத்து

(கொழும்பு)


***இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு உள்நாட்டு அரசியல் சாசன விதிகளுக்கு உட்பட்டு தீர்வு காண இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதற்கென தமிழர்களின் பிரதான அரசியல் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசு பேச வேண்டும் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பாரதிய ஜனதா கட்சியின் மூத்த தலைவர்கள் இருவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்தியுள்ளனர்.***

பா.ஜ.க. தேசிய செயலாளர் பி.முரளிதர் ராவ் மற்றும் வெளிநாட்டு விவகாரங்களுக்கு பொறுப்பான விஜய் ஜாலி ஆகிய இருவரும் நேற்று சனிக்கிழமை ஜனாதிபதி மகிந்தவை அவரது வாசஸ்தலத்தில் சந்தித்தனர். சுமார் 45 நிமிடங்கள் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இருதரப்பு உறவுகள் மற்றும் இலங்கைப் பிரச்சினைகள் குறித்து விரிவாகப் பேசினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸைச் சந்தித்த இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சை ஆரம்பிக்கவேண்டும் என்று வலியுறுத்தியிருந்தனர். இந்த விடயத்தை இருவரும் ஜனாதிபதியிடமும் மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கையில் நீண்ட காலமாக இழுபறியிலுள்ள

23ஆம் பக்கம் பார்க்க....



### அதிவேக புகையிரத பரீட்சார்த்த பயணம்

யாழ்.மக்களுக்கு இலங்கைப் புகையிரத திணைக்களத்தினர் அவசர வேண்டுகோள் ஒன்றினை விடுத்துள்ளனர்.

பளைக்கும்-யாழ்ப்பாணத்திற்குமிடையே புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புகையிரதப் பாதையில் அதிவேகமான புகையிரத பரீட்சார்த்த பயணம் இடம்பெறவுள்ளது.

புகையிரத பரீட்சார்த்த நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளதால் புகையிரதப் பாதையின் அருகில் செல்லும் போது, அவதானத்துடன் செல்லுமாறும், மக்களின் கால் நடைகளின் நடமாட்டத்தை புகையிரதப் பாதையருகில் கட்டுப்படுத்தும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இவ் அறிவித்தல்களை புகையிரத திணைக்களத்தினர் ஒலிபெருக்கியில் அறிவிபதுடன் துண்டுப்பிரசுரங்களும் யாழ் நகரில் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நாளை திங்கட்கிழமை பளையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு நேரடியான பரீட்சார்த்த பயணம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(செ-11)

## தமிழருக்கான அதிகார பகிர்வில் மகிந்த நிறைய பேசியாயிற்று

### இனி அவற்றை செயலில் காட்டட்டும்-இந்து

(கொழும்பு)

இலங்கைத் தமிழருக்கான அதிகாரங்களை பகிரும் விடயங்களில் நீங்கள் நிறையப் பேசிவிட்டீர்கள். இனி அவற்றை செயலில் காட்டுங்கள் என இலங்கை ஜனாதிபதி மகிந்தவை சாடி இந்து நாளிதழ் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

"இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கப் பேச்சுவார்த்தை நடத்தத்தயார்" என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சமீபத்தில் கூறியிருப்பதை எந்த வ்கையில் எடுத்துக்கொள்வதென்றே தெரியவில்லை.

இந்த விடயம் குறித்து முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி, அப்போதைய இலங்கை ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன ஆகியோர் 1987-ல் பேசி முடிவுசெய்து கையெழுத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம், இன்றுவரை அமல்படுத்தப்படாமலேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கிறது. விடுதலைப் புலிகளுடனான போர் முடிவுக்கு வந்துவிட்டதால்

02ஆம் பக்கம் பார்க்க....

### மண்சரிவில் சிக்கி 4 இராணுவத்தினர் பலி

மண்சரிவொன்றில் சிக்கி நான்கு இராணுவத்தினர் உயிரிழந்துள்ளதாக இராணுவ ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வரக்காபொலை அம்பேபுஸ்ஸயில் அமைந்துள்ள சிங்க படையணி தலைமையகத்தில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இது பற்றி மேலும் தெரிய வருவதாவது,

அம்பேபுஸ்ஸை இராணுவ முகாமை அண்மித்த மலைப்பகுதியில் நேற்று திடீ

02ஆம் பக்கம் பார்க்க....

### ஊவா மாகாண சபைத் தேர்தல் 2014

ஊவா மாகாண சபைத் தேர்தலில், நேற்று நள்ளிரவு முதல் வெளியான தபால்மூலமான வாக்குப்பதிவில் மொனராகலை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு முன்னிலையில் உள்ளது.

வாக்குப் பதிவு 60%

| மாவட்டம் | கட்சிகள் | பெற்ற வாக்குகள் | வீதம் |
|---|---|---|---|
| மொனராகலை | ஐ.ம.சு.கூ | 5632 | 57.31 |
| | ஐ.தே.க | 2800 | 28.49 |
| | ஜே.வி.பி | 1001 | 10.19 |

(இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை வெளியான முடிவுகள்)

## புரட்சிக்கு அஞ்சிய ஜே.ஆர் இந்தியாவை நாடினார்

### நட்வர் சிங்

(சென்னை)

இலங்கையில் சதிப்புரட்சி இடம்பெறலாம் என அஞ்சிய இலங்கையின் முன்னாள ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன இந்தியாவின் உதவியை நாடினார் என இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் இலங்கையில் காணப்படும் குழப்பங்களைத் தவிர்த்திருக்க முடியுமா என்ற கேள்விக்கு பதிலளித்தபோதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில்

24ஆம் பக்கம் பார்க்க....

### புலிகளின் சின்னம்; ஒருவர் கைது

தமிழீழ விடுதலை புலிகளின் சின்னம் பொறித்த கழுத்துப் பட்டியை அணிந்திருந்ததாக குற்றஞ்சாட்டி கிளிநொச்சி மாவட்ட விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில மேலும் தெரிய வருவதாவது,

ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெற்ற விளையாட்டு நிகழ்வில் கலந்து கொண்டிருந்த எஸ்.சதீஷ்குமார் என்ற பயி

24ஆம் பக்கம் பார்க்க....

## வெளி. ஆலோசனை நிபுணர்களுடன் ஜனாதிபதி ஆணைக்குழு சந்திப்பு

(கொழும்பு)

இலங்கையில் செயற்பட்டு வரும் போரில் காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு நேற்று முன்தினம் அந்தக் குழுவுக்காக ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்டுள்ள வெளிநாட்டு நிபுணர்களை முதல் தடவையாக சந்தித்தது.

இந்த சந்திப்பு கொழும்பில் உள்ள காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இதுவரை ஜனாதிபதி ஆணைக்குழு மேற்கொண்ட அமர்வுகள் உள்ளிட்ட பல விடயங்கள் ஆராயப்பட்டன. எனினும் இந்த சந்திப்பின் போது நிபுணர்கள் கூறிய ஆலோசனைகள் அல்லது கருத்துக்கள் தொடர்பில் தகவல்கள் வெளியாகவில்லை.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பணிகள முடிவடைந்தபோதும் அதனை நீடித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதற்கு ஆலோசனை வழங்க வெளிநாட்டவர்களை கொண்ட குழு ஒன்றையும் நியமித்தார். இந்த நிபுணர் குழுவினரே நேற்று முன்தினம் ஜனாதிபதி ஆணைக குழுவினரை சந்தித்துள்ளனர். (செ-11)

## சர்வதேசம் தலையிட்டிருந்தால் உயிரிழப்புகளை தடுத்திருக்கலாம்

### அமெரிக்கா சுட்டிக்காட்டு

தேவையான சந்தர்ப்பத்தில் சர்வதேச தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தால், இலங்கை போன்ற சில நாடுகளில் போர் நடைபெற்ற காலத்தில் ஏற்பட்ட பல உயிரிழப்புகளை தடுத்திருக்க முடியும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை, ருவாண்டா, சிரியா உள்ளிட்ட நாடுகள் குறித்து சர்வதேச சமூகத்தின் கவனமானது தாமதமாகி திரும்பியதால், பல உயிர்கள் இழக்கப்பட்டதாக அமெரிக்கா

24ஆம் பக்கம் பார்க்க....

அமைதியே மானிடரின் மிகப்பெரிய சாதனையாகும்
- பிரேம் ராவத்

சர்வதேச அமைதி தினம்

SEPTEMBER 21st

நீங்கள் அமைதியைத் தேடிக் கொண்டிருந்தால் அது வேறு எங்கும் கிடைக்காது. அமைதி ஒவ்வொரு மனிதர் உள்ளேயும் உள்ள ஒரு உணர்வு.

அமைதியின் சொற்கள் சர்வதேச விருதுபெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி இப்பொழுது
வர்ணம் TV யில் பிரதி சனி, ஞாயிறு தினங்களில
காலை 7:00 முதல் 7:30 வரையும் ஒளிபரப்பப்படும்
நேத்ரா TV யில் பிரதி ஞாயிறு தோறும்
மாலை 5:30 முதல் 6:00 வரையும் ஒளிபரப்பப்படும்

011 725 0001
www.wopg.org
WORDS OF PEACE

(7796)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## தமிழருக்கான...

இனி சமரசம் ஏற்பட்டுவிடும் என்ற நடுநிலையாளர்களின் நம்பிக்கை ஐந்து ஆண்டுகள் கடந்த பிறகும் இதுவரை பலிக்கவில்லை.

இலங்கையின் அரசியல் சட்டத்திலேயே சேர்க்கப்பட்டுவிட்ட 13-வது திருத்தம் என்பது ஒன்றுபட்ட இலங்கை என்ற அரசியல் கட்டமைப்பைக் காப்பதுடன் தமிழர்களைச் சம உரிமையுள்ள இலங்கைக் குடிமக்களாக அங்கீகரிக்கும் தன்மையைக் கொண்டது. ஆனால், அந்தச் சட்டத் திருத்தத்தை மேற்கொள்வதில் இலங்கை அரசுக்கு ஈடுபாடு துளியும் இல்லை என்பதுதான் உண்மை.

போரின்போது அப்பாவி மக்களின் மனித உரிமைகள் அப்பட்டமாக மீறப்பட்டது தொடர்பாக ஏராளமான குற்றச்சாட்டுகள், புகார்கள் தெரிவிக்கப்பட்டபோதிலும் விசாரணை என்பது கண்துடைப்பாகவே இருக்கிறது. ஐ.நா-வின் சர்வதேச விசாரணைக் குழுவையும் அனுமதிக்க முடியாது, அது இலங்கையின் இறையாண்மைக்கு எதிரானது என்றும் இலங்கை அரசு கூறி விட்டது.

போர்க் குற்றங்கள்குறித்தும் மனித உரிமைகள் மீறல் குறித்தும் கேட்டபோதுகூட, அந்தக் குற்றங்களுக்குக் காரணமே விடுதலைப் புலிகள்தான் என்றும், காணாமல போனவர்களில் இலங்கை இராணுவத்தினரும் அவர்களுடைய குடும்பத்தவரும்கூட இருப்பதால், அதுபற்றியும் உள்நாட்டில் முதலில் விசாரிக்கப்பட வேண்டும் என்று கூறி, அந்தக் கோரிக்கையையே திசை திருப்பியிருக்கிறார் மகிந்த.

இவையெல்லாம் ஒருபுறம் இருக்க, தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு ஆட்சியில் முக்கியமான அதிகாரங்களுமம பொறுப்பும் தராமல், அலங்காரப் பதவியாக மாகாண முதல்வரை ஆக்கிவிட்டதை என்னவென்று சொல்வது? இதுபற்றிய கேள்விக்குத்தான், பேசத் தயாராக இருக்கிறோம், பேச அவர்களதான் வர வேண்டும் என்றிருக்கிறார் மகிந்த

பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று மகிந்த ஒருபுறம் சொல்கிறார். மறுபுறம், தமிழர் பகுதிகளில் காணப்படும் இராணுவ ஆக்கிரமிப்பு, தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றங்கள், இலங்கையின் மத்திய அரசிடமே நீடிக்கும் பொலிஸ் நிர்வாகம் ஆகிய நிலைப்பாடுகள். அவருடைய அரசுக்குக் கொஞ்சமும பரிசீலிக்கும் மனம் இல்லை என்றால் அந்தப் பேச்சுவார்த்தையால் பயன்தான் என்ன?

மகிந்த அவர்களே, நிறையப் பேசியாயிற்று. உங்கள் அக்கறையை இனி செயலில் காட்டுங்கள். தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளிப்பதென்பது பாகப்பிரிவினையோ கூடுதல் சலுகையோ அல்ல. உங்கள் குடிமக்களில் ஒரு பகுதியினருக்கு நீங்கள் அளிக்கும் சம உரிமை.

இலங்கை அரசு தன்னுடைய அக்கறையின் நம்பகத்தன்மையை வெளிப்படுத்த ஒரேயொரு வழிதான் இருக்கிறது. 13-வது சட்டத்திருத்தத்தை அமுலாக்க நடவடிக்கை எடுங்கள் என இந்து ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)


தொடர்ந்தும் உங்கள் சேவையில்....

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-8545)



மாணவர் உள்வாங்குகை : கல்வியாண்டு 2014, செ[illegible]ம்பர்

BCAS Campus - Jaffna

தனியார் உயர் கல்வித்துறையில் 15 வருட அனுபவத்தையும் நம்பிக்[illegible]யும் கொண்ட BCAS Campus யாழ் வளாகத்தில் புதிய கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

உயர் தேசிய டிப்ளோமா கற்கை நெறிகள் (BTEC Pearson edexcel HNDs)

கற்கை நெறிகள்

- Civil Engineering
- Biomedical Science
- Quantity Surveying
- Computing & System Development
- Business Management
- Business Marketing
- HR Management

காலம் : நான்கு கல்வி அரையாண்டுகள் (1வருடம் 6 மாத கற்கை காலம் +6 மாதகால தொழில்சார் பயிற்சி)
கட்டணம் : கற்கை நெறிக்கேற்ப வேறுபடும்
மொழிமூலம் : ஆங்கிலம்
அனுமதி : க.பொ.த உயர் தரம் (பெறுபேறுகளை எதிர்பார்த்து நிற்கும் மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்)



மேற்கூறப்பட்ட கற்கைநெறிகள் நான்கு கல்வி அரையாண்டுகள் கொண்டதாகவும், இக்கற்கை நெறிகளில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் (UGC) சர்வதேசத்தினாலும் அங்கீகரிக்கப்பட்ட இளமாணி பட்டப்படிப்பை பூர்த்தி செய்வதற்கு மேலதிக ஒருவருட / இறுதியாண்டு (Top-Up) கற்கையை 105 க்கு மேற்பட்ட சர்வதேச பல்கலைக்கழகங்களிலோ அல்லது எமது நிறுவனத்தின் கொழும்பு வளாகத்திலோ தொடர்ந்து பட்டத்தை பெற முடியும்.

டிப்ளோமா கற்கை (Diploma)



கற்கை நெறிகள்

- CAD & BS

க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற க.பொ.த உயர் தரத்துடன் கட்டிட நிர்மாணத் துறையில் 6 மாதகால படவரைஞர் பயிற்சி நெறியின் இறுதியில் UK edexcel அங்கீகாரம் பெற்ற டிப்ளோமா சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியும்.

- BTEC edexcel National Diploma in Engineering (IEF)

Engineering துறையில் க.பொ.த சாதாரண தரம் அல்லது முழுமையற்ற கா.பொ.த உயர் தரத்துடன் சர்வதேச இளமாணி பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கான 1 வருட (2 கல்வி அரையாண்டுகள்) அடிப்படை கற்கை நெறி UK edexcel அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.

(சி-8546)

கணனி மற்றும் ஆங்கில பயிற்சி பாடநெறிகள் (UK edexcel)

கற்கை நெறிகள்

- English

நான்கு மாத காலம் கொண்ட ஆங்கில பாடநெறி ஆங்கிலத்தில் பேச எழுத வாசிப்பதற்குரிய முழுமையான பயிற்சி அளிக்கப்படுவதுடன் சர்வதேச சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- Information Technology (IT)

Concept of Information Technology, Computer Maintenance & File Management, Microsoft Office, Information & Communication, Website Development, Computer Programming & Hardware & Networking போன்ற பிரிவுகளில் முழுமையாக பயிற்சியளிப்பதுடன் சர்வதேச அங்கீகாரம் கொண்ட சான்றிதழையும் பெற்றுக்கொடுக்கிறது.

- IELTS

சர்வதேச ஆங்கில மொழித் தகைமைகளை உத்தரவாதப்படுத்தும் இப்பாட நெறியில் Speaking, Listening, Reading and Writing போன்ற பிரிவுகளில் முழுமையானதும் தனிப்பட்ட கவனமும் செலுத்தப்படுகிறது.

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

மேலதிக தகவல்களுக்கு:
077 710 2131
16, Point Pedro Road, Jaffna, Sri Lanka.
T: 021 2219910

15 YEARS of Trust & Excellence in Higher Education

Design @ www.MacroAdz.com


## மண்...

ரென்று மண்சரிவொன்று ஏற்பட்டுள்ளது. அப்பகுதியில் கடமையில் இருந்த ஐந்து இராணுவத்தினர் இதில் சிக்கிக் கொண்டுள்ளனர்.

ஏனைய இராணுவத்தினர் விரைந்து வந்து மீட்புப் பணிகளை மேற்கொண்டபோது நான்கு பேர் உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

ஒருவர் மட்டும் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, மருத்துவமனை தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அம்பேபுஸ்ஸ இராணுவ முகாமில ஏற்பட்ட மண்மேடு சரிவில் மேலும் 8 இராணுவத்தினர் சிக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அவர்களை தேடும் பணிகள் முனனெடுக்கப்பட்டு வருகின்றன. சம்பவம் நடைபெற்ற இடத்தில் 13 இராணுவத்தினர் பணியாற்றிகொண்டிருந்தாக கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் இந்த சம்பவத்தில் கொல்லப்பட்ட 4 இராணுவத்தினரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் ஏனையவர்களை தேடும் பணிகள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (செ-11)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 321 0815
021 567 1532


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் தயாரிப்பாளருக்கு விண்ணப்பம்கோரல்

(யாழ்ப்பாணம்)

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நிறைவேற்று சேவைத்தரத்தில் தயாரிப்பாளர் பதவி ச்ம்பந்தமாக குறிப்பிட்ட தகைமையுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பதாரிகளின் தகைமைகளாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் I ஆம் தர பதவியில் சேவை புரிபவராக இருத்தல் வேண்டும்.

அரசாங்க திரைப்படப்பிரிவில் வீடியோ படம் பிடித்தல், பகுப்பாளர் மற்றும் ஒலி, தொழில்நுட்பம் ஆகிய துறைகள் அடங்கிய பிரிவில் குறைந்த பட்சம் 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதிற்கு குறையாதவர்களாக இருத்தல் வேண்டும். அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்கள/நிறுவனத் தலைமைத்துவத்தினூடாக அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளிடையே அரசசேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கிணங்க அதிக புள்ளிகளை பெற்ற விண்ணப்பதாரிகள் பதவிக்கு இணைத்துக்கொள்ளப்படுவர்.

விண்ணப்பிக்கதகுதியுள்ள விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தை முழுமையாக பூரணப்படுத்தி ஒக்டோபர் மாதம் 13 திகதிக்கு முன்னர் செயலாளர், வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சு, அசிதிசி, இல.163, கிருலப்பன அவெனியூ, கொழும்பு-5 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (இ

# ஜனாதிபதி மிகவும் நல்லவர்





## மேர்வின் சில்வா கூறுகின்றார். ஆளும் கட்சியில் தனக்கு அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரிப்பதாகவும் ஆதங்கம்

(கொழும்பு)

ஆளும் கட்சியில் எனக்கு எதிரான அழுத்தங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து செல்கின்றது என அமைச்சர் மேர்வின் சில்வா கவலை தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சியைச் சேர்நத சில தரப்பினர் பல்வேறு வழிகளில் என் மீது நெருக் கடிகளை பிரயோகிக்கின்றனர்.

நான் இந்த அழுத்தங்களை பொறுத்துக்கொண்டிருக்கின்றேன்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மிகவும் நல்லவர். அவரை நான் நேசிக்கின்றேன். அவரால் எனக்கு எவ்வித பிரச்சினைகளும் கிடையாது.

அழுத்தங்கள் அநீதிகளை பொறுத்து பொறுத்து பார்த்து முடியாத பட்சத்தில் நிச்சயமாக நான் என்ன செய்ய வேண்டும் என்பதனை தீர்மானிப்பேன் என அமைச்சர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

விரைவில் அரசியல் ரீதியான முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்கவுள்ளதாக அறிந்தோம் என சிங்கள ஊடகமொன்று அமைச்சரிடம் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

# தமிழருக்கு நிரந்தரத்தீர்வு மோடி அரசு வலியுறுத்தும்

## கொழும்பில் முரளிதர்ராவ் தெரிவிப்பு


(கொழும்பு)

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு கிடைக்க இந்திய பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு இலங்கை அரசை வலியுறுத்தும் என்று தமிழக பாஜக மேலிடப் பொறுப்பாளரும், அக்கட்சியின் தேசிய பொதுச் செயலருமான முரளிதர்ராவ் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தலைநகர் கொழுமபில் கடந்த 18 முதல் இன்றுவரை நடைபெறும் ஆசிய நாடுகளின் அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்கேற்க பாஜக சார்பில் முரளிதர் ராவும், அக்கட்சியின் வெளியுறவுப் பிரிவு அமைப்பாளர் விஜய் ஜாலியும் வருகை தந்துள்ளனர்.

இதையொட்டி கொழும்பில் செய்தியாளர்களிடம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முரளிதர் ராவ் கூறியதாவது,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்று இந்திய பிரதமராக பொறுப்பேற்றவுடனேயே தன்னைச் சந்தித்த இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நரேந்திர மோடி



வலியுறுத்தினார்.

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு இலங்கையின் அரசியல் சாசன கட்டமைப்புக்கு உட்பட்ட சமவுரிமை, மதிப்பு, நீதி, சுய மரியாதை ஆகியவை கிடைக்க வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

இதை இலங்கையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களிடம் பிரதமர் நரேந்திர மோடி தெளிவுபடுத்தியுள்ளார்.

இந்த நோக்கத்தை வலியுறுத்தும் வகையில், எங்கள் இலங்கைப் பயணத்தை பயன்படுத்தி வருகிறோம்.

கொழும்பில் இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல் பீரிஸையும் இதே நோக்குடன்தான் நாங்கள் சந்தித்துப் பேசினோம்.

இதைத் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சித் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வு, மீள் குடியேற்றத்துக்காக இலங்கை அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் ஆகியவற்றை இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளும் உன்னிப்பாகக் கவனித்து வருகின்றன.

இலங்கையில் மேலும் சில நாட்கள் தங்கியிருந்து பல்வேறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சமூக இயக்கங்களின் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளோம் என முரளிதர் ராவ் மேலும் தெரிவித்தார். (இ)

# இராசி பலன்

**21.09.2014**

**(புரட்டாதி 5, ஞாயிற்றுக்கிழமை**
**சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு**
**துவாதசி காலை 6.40 மணிவரை**
**ஆயிலியம் முற்பகல் 11.42 மணிவரை**
**இராகுகாலம் 4.32-6.02 மணிவரை**
**சுபநேரம் 9.02-10.32 மணிவரை**
**பிரதோச விரதம்**

வளவன்

**மேடம்** – பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முற்படுவீர்கள்.

**இடபம்** – பெற்றோரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், விருந்தினர் வருகையுண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும்.

**மிதுனம்** – பொதுப் பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** – உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும், நன்மைகள் நடைபெறும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு, சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**சிம்மம்** – குடும்ப பொறுப்புக்கள் கூடும், திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் ஒழிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** – வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும், பயணங்களால் அலைச்சல் காணப்பட்டாலும் சிறு ஆதாயமும் பெறுவீர்கள்.

**துலாம்** – எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், வழிபாடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** – உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், செய்தொழில் மேன்மையுண்டு, போசன நன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு** – புதிய திட்டங்கள் கைகூடும், குடும்பத்தில் ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு, உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம்.

**மகரம்** – எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், முயற்சிகள் தாமதமாகும், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கும்பம்** – கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், முயற்சிகள் எளிதில் கைகூடும், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்** – உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருப்பீர்கள், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட விரோத மின்சாரப் பாவனை நெல்லியடிப் பகுதியில் அதிகரிப்பு

யாழ்.வடமராட்சி பகுதியில் சட்ட விரோத மின்சார பாவனையில் ஈடுபடுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

இந்த வகையில் கடந்த 3 நாட்களுக்கு முன்னர் 10 சந்தேக நபர்கள் நெல்லியடிப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


குறித்த் சந்தேக நபர்கள் அல்வாய், கரணவாய், கரவெட்டி போன்ற பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர். வடமராட்சியின் சில பகுதியில் சட்ட விரோத மின்சார பாவனை நடைபெற்று வருவதாக இலங்கை மின்சார சபைக்கு அப் பிரதேசங்களில் உள்ளவர்கள் சிலரால் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து மின்சார சபையினர் வடமராட்சிப் பகுதிகளில் அண்மையில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போதே அல்வாய், கரணவாய், கரவெட்டி போன்ற பிரதேசங்களில் குறித்த 10 சந்தேக நபர்களும் சட்ட விரோத மின்சார பாவனையில் ஈடுபட்டமை தெரியவந்தது.

இதனையடுத்து மின்சார சபையினரின் வேண்டுகோளுக்கு அமைய நெல்லியடிப் பொலிஸார் மேற்குறித்த பிரதேசங்களுக்கு சென்று 10 சந்தேக நபர்களை கைது செய்து நேற்று முன்தினம் பருத்தித்துறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

இதன்போது 10 சந்தேக நபர்களுக்கும் தலா 10 ஆயிரம்ரூபா வீதம் ஒரு இலட்சம் ரூபா குற்றப்பணமாக அறவிடப்பட்டதுடன் 3 இலட்சத்து 71 ஆயிரத்து 875 ரூபா மின்சார சபைக்கு செலுத்துமாறு பருத்தித்துறை பதில் நீதவான் உத்தரவிட்டார். (இ-60)



நன்றி-மிரர்

# திருட்டுத்தம்பதியினர் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாம்)

திருடிய பொருட்களினை பதுக்கி வைத்திருந்த நபரின் மனைவியினை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ஆறுகால்மடம் பழம் வீதியிலேயே நேற்று முன்தினம் மாலை இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

குறித்த இடத்தில் வீடொன்றினை வாடகைக்கு எடுத்த மனைவியும் கணவனும் திருட்டுப் பொருட்களினை அவ் வீட்டில் பதுக்கி வைத்துள்ளனர்.

இத்திருட்டு கணவன் பொலிஸாரிடம் பிடிபட்டுக் கொண்டதனையடுத்து கணவனால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் தன்னால் திருடப்பட்ட பொருட்களை குறித்த இடத்திலுள்ள வீடொன்றில்பதுக்கி வைத்துள்ளதாக கூறியுள்ளார்.

இதனையடுத்து நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் குறித்த திருடனின் வீட்டினை முற்றுகையிட்ட மானிப்பாய் பொலிஸார் திருடி மறைக்கப்பட்டிருந்த பொருட்களினை மீட்டதோடு திருடனின் மனைவியினையும் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றுள்ளனர்.

குறித்த வீட்டிலிருந்த வீட்டுத் தளபாட பொருட்கள் இலத்திரனியல் சாதனங்கள் எனப் பல பெறுமதி மிக்க பொருட்களையும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை தங்களுடைய வீட்டினை வாடகைக்கு கொடுக்கும்போது வாடகைக்கு வீட்டினை எடுப்பவர்கள் எவ்வாறானவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை அறிந்து வாடகைக்கு வழங்க வேண்டுமென வீட்டு உரிமையாளர்களிற்கு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

இதேவேளை குறித்த கைதுச் சம்பவம் இடம்பெறுவதற்கு சில நாட்களிற்கு முன்னர் அப்பகுதி வீடொன்றில் இடம்பெறவிருந்த திருட்டு முயற்சியொன்றும் அப்பகுதி இளைஞர்களினால் முறியடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-4)

# தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகள் ஒக்டோபர் மாதம் நடைபெறும்

அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தில் தேசிய வாசிப்பு மாதம் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வருடமும் ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா கொண்டாடப்படவுள்ளது.

வாசிப்பு மற்றும் தகவல் ஆகியவற்றை ஒன்று சேர்த்தல் தொடர்பில் கவனம் எடுப்போம் எனும் தொனிப் பொருளில் கொண்டாடப் படவுள்ளது.

அத்துடன் இவ் விழாவில் பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துமாறு அனைத்து நூலகங்களையும் தேசிய நூலக ஆவணமயமாக்கல் சேவைகள் சபை கேட்டுள்ளது.

எதிர்காலத்தில் சிறந்த சமுதாயம் ஒன்றினை உருவாக்கும் மகிழ்ந்த சிந்தனையின் அடிப்படையில் செயற்திறன் மிக்க செயற்றிட்டங்களை ஆற்றும் உள்ளூராட்சி சபைகளின் பொது நூலகங்களின் இடையே சிறந்த நூலகங்கள் தெரிவு செய்யப்பட்டு, பெறுமதி மிக்க பரிசில் களும், சான்றிதழ்களும் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-29)





# யாழ் மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

Jaffna District

# Master Bakers Association

இல. 183, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

பதிவு இல:649 TEL:021 222 3814

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## 23 வது ஆண்டு நிறைவு விழா அழைப்பு

மேற்படி எமது சங்கத்தின் 23-வது ஆண்டு நிறைவு விழாவானது இன்று (21.09.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இல.559, நாவலர் வீதியில் அமைந்துள்ள எமது சங்க மண்டபத்தில் வழமை போன்று வெகுவிமர்சையாக நடைபெறவுள்ளது. இந்நிகழ் வில் அங்கத்தவர்கள், முன்னையநாள் அங்கத்தவர்கள் மற்றும் பணியாளர்கள், முன்னையநாள் பணியாளர்கள் நலன்விரும்பிகள் அனைவரும் தங்கள் குடும்பத்தினர் சகிதம் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு"

தலைவர் இ.பேரின்பநாயகம்

செயலாளர் கா.பாஸ்கரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா தேர்தலின் பின்னர் அமைச்சர்கள் ஐ.தே.கவில் இணைந்து கொள்வார்கள்

## ரஞ்சித் மத்தும பண்டார

தேர்தலின் பின்னர் அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மூன்று அமைச்சர்கள் அல்ல கொத்து கொத்தாக அமைச்சர்கள் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வார்கள்.

சில ஆண்டுகளாகவே ஆளும் கட்சி அமைச்சர்கள், ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்வது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர்.

மொனராகல மாவட்ட அமைச்சர் ஒருவரும ஐக்கிய தேசியக் கட்சியில் இணைந்து கொள்ளவுள்ளார் என ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

மூன்று அமைச்சர்கள், ஐக்கிய தேசியக் கடசியின் தேர்தல் வெற்றியின் பின்னர் ஆளும் கட்சியில் இணைந்து கொள்ள உள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்துக்கள் உண்மையானவையா என சிங்கள ஊடகமொன்று ரஞ்சித் மத்தும பண்டாரவிடம் வினவிய போது அவர் இதனைதெரிவித்தார்

இதேவேளை, ஆளும் கட்சியிலிருந்து விலகப் போவதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என அமைச்சர் ஜகத் புஸ்பகுமார தெரிவித்துள்ளார்.

பல்வேறு அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் அரசாங்கத்தை கட்டியெழுப்பினோம். அரசாங்கத்தை விட்டு செல்லும் அளவிற்கு எனக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# அமைச்சர் நிமால் மீது ஜனாதிபதி அதிருப்தி

ஊவா தேர்தலில் அரசாங்கத்திற்கு சாதகமற்ற நிலைமையை அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவே ஏற்படுத்தியதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார்.

ஊவா மாகாண சபைத் தேர்தல் நிலைமைகள் சம்பந்தமாக ஜனாதிபதி செயலகத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் சிலருடன் நேற்று முற்பகல் கலந்துரையாடும் போதே ஜனாதிபதி இதனை தெரிவித்துள்ளார்.

அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா, புதியவர்கள் எவரையும் தேர்தலில் நிறுத்த இடமளிக்கவில்லை.

மேல் மாகாணத்தில் ஹிருணிகாவும் வடமேல் மாகாணத்தில் தயாசிறி ஜயசேகரவும் நிறுத்தப்பட்டனர்.

எனினும் ஊவாவில் போட்டியிடும் நபர்கள் பழையவர்கள், ஐக்கிய தேசியக் கட்சி ஹரின் பெர்ணான்டோவை தேர்தலில் நிறுத்தியதே எமக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. எது எப்படியிருந்தாலும் நாம் இத்தேர்தலில் வெற்றி பெறுவோம் என்பது நிச்சயமானது.

பதுளையில் குறைந்தது 48 வீத வாக்குகள் கிடைக்கும், மொனராகலையில் 58 வீத வாக்குகள் கிடைக்கும், இதனால் பயப்பட வேண்டியதில்லை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (இ)


## கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 4
கி.பா: 33 உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L/ சுவிஸ் PR
தொ.இ: B/3604

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 49 1/2
உயரம்: 5'7"
தகைமை/தொழில் BSC/நோர்வே PR
தொ.இ: B/3605

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 23 சூரி,செவ்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: B/3608

பிறப்பு: 1976 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2
கி.பா: 22 1/2 செவ் 8 இல்
தகைமை/தொழில்: BSC/ சொந்த தொழில்
தொ.இ: B/3609

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி 4
கி.பா: 19 உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2797

பிறப்பு: 1971 இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
கி.பா: 21 1/2
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/2799

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 52 செவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: தாதி உத்தியோகம்
எதிர்பார்ப்பு: கொழும்பில் வேலை செய்பவர் மட்டும்
தொ.இ: G/3601

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: பூசம் 4
கி.பா: 50 1/4 செவ் 8 இல்
உயரம்: 158cm
தொ.இ: G/3602

## கல்யாண மாலை


(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சர் சிறிபால டி சில்வாவிற்கு எதிராக ஆணைக்குழுவில் முறையீடு



(கொழும்பு)

நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு எதிராக ஜே.வி.பி மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளது.

ஜே.வி.பியின் செயற்பாட்டாளர்களில் பெயர் பட்டியலை கோரி, அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா'வின் செயலாளர் ஒருவர் அமைச்சின் கடித தலைப்பில் சமுர்த்தி சங்கங்களுக்கு அனுப்பியிருந்த கடிதம் ஒன்றுக்கு எதிராக இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் மேல் மாகாண சபை உறுப்பினரான சட்டத்தரணி சுனில் வட்டகல உள்ளிட்ட பிரதிநிதிகள் மனித உரிமை ஆணைக்குழுவில் நேற்று முன்தினம் இந்த முறைப்பாட்டை செய்தனர்.

ஊவா மாகாண சபைத் தேர்தல் பிரசார பணிகளில் ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஜே.வி.பிக்கு உதவி வரும் சமுர்த்தி அதிகாரிகள் மற்றும் அபிவிருத்தி உதவி அதிகாரிகளின் பெயர் விபரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு அமைச்சரின் செயலாளர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (இ)

# விபத்தில் ஒருவர் படுகாயம்



மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் ஒன்றுடன்ஒன்று மோதியதில் ஒருவர் படுகாயமடைந்து மன்னார் பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பில் தெரியவருவதாவது,

மன்னார் பஸார் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரும் முச்சக்கரவண்டி ஒன்றும் மோதியதில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டனர். (2)

# ஆளாளுக்கு அடித்துக் கொள்ளும் கட்சி ஐக்கிய தேசியக்கட்சி-ரோஹித கிண்டல்

(கொழும்பு)

கட்சியில் தலைவர் முதற்கொண்டு ஆளாளுக்கு அடித்துக் கொள்ளும் ஒரே கட்சி ஐ.தே.க என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன கிண்டலடித்துள்ளார்.

மவ்பிம பத்திரிகையின் கருத்துக்களம் பகுதிக்கு அவர் அளித்துள்ள குறும்பேட்டியில் இந்தக் கரு த்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

தலைவனுக்கும், இரண்டாம் கட்டத் தலைவர்களும் ஒற்றுமையின்றி ஆளாளுக்கு அடித்துக் கொளளும் ஒரு கட்சி உலகத்தில் இருக்கின்றது என்றால் அது ஐக்கிய தேசியக் கட்சிதான்.

நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த ஹரீன் பெர்னாண் டோவை, ரணில் விக்கிரமசிங்க மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக்கினார்.

இதன் மூலம் ஹரீனின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிபோனது.

தற்போதுள்ள நிலையில் ஊவாவில் அரசாங்கத் தரப்பினரே மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றுவார்கள். ஹரீன் வெறும் மாகாண சபை உறுப்பினராக மட்டுமே இருக்க நேரிடும்.

தனக்கு எதிராக வளரக் கூடிய அனைவருக்கும் ரணில் விக்கிரமசிங்க செய்த துரோகத்தையே ஹரீனின் விடயத்திலும் இழைத்துள்ளார்.

ஹரீனின் அரசியல் எதிர்காலத்தை திட்டமிட்டு அழித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியில் பலருக்கு இந்த தலைவிதியை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

மாகாண சபை வேட்பாளராக்கியதன் மூலம் ஹரீன் பெர்னாண்டோவை ரணில் விக்கிரமசிங்க நட்டாற்றில் தள்ளிவிட்டுள்ளார் என்றும அமைச்சர் ரோஹித தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ளார். (இ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 70 | 100 | 90 | 80 |
| தக்காளி | 40 | 60 | 50 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 50 | 40 | 60 |
| கோவா | 40 | 80 | 60 | 60 |
| கரட் | 60 | 60 | 50 | 100 |
| பூசணி | 20 | 30 | ,30 | 40 |
| புடோல் | 60 | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 70 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 40-90 | 90 | 80 | 70-100 |
| பெரிய வெங்காயம் | 90 | 100 | 90 | 80 |
| பாகற்காய் | 90 | 100 | 70 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 80 | 60 |
| கருணைக் கிழங்கு | 90 | 60 | 60 | 80 |
| பயற்றங்காய் | 40 | 50 | 50 | 80 |
| லீக்ஸ் | 120 | 90 | 100 | 100 |
| பீற்றூட் | 50 | 60 | 50 | 80 |
| கறிமிளகாய் | 60 | 50 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 40 | 50 | 50 | 120 |
| போஞ்சி | 120 | 120 | 90 | 120 |
| கத்தரிதம்புள்ள | 30 | 50 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 120 | 100 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 30 | 30 | 30-35 |
| இராசவள்ளி | 120 | 100 | 110 | 100 |


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 142

Search for people, places and things Nagendram Home

தில்லை அம்பலவாணர் விமலன்




இரத்தினசபாபதி பாலராஜா




சிவசிதம்பரம் மகிழ்நன் சிவநாசிம

ஒரு பையனுக்கு ரொம்ப நாளா சந்தேகம். முதல் மனுசன் எப்படி வந்தான்? அப்படின்னு. அவன் அவனோட அப்பா கிட்டே போய், அப்பா முதல் மனுசன் எப்படி தோன்றினான் அப்படின்னு கேட்டான். அதுக்கு அவர் சொல்றாரு, நாமெல்லாம் ஆதாம் ஏவாள் மூலமா உலகுக்கு வந்தவங்க. அப்படின்னு பதில் சொல்றார். இருந்தாலும் பையனுக்கு குழப்பம் இன்னும் தீரலை.

அவனோட அம்மா கிட்டே போய் கேட்குறான். அதுக்கு அவங்க சொல்றாங்க, நாமெல்லாம் குரங்கிலிருந்து வந்தவங்க அப்படின்னு. இப்போ இன்னும் குழப்பமாயிடுச்சி பையனுக்கு. ரொம்ப யோசனையா உட்கார்ந்து இருக்கான். அதை பார்த்து அவங்க அப்பா, என்னடா சந்தேகம் இன்னும் தீரலையான்னு கேட்குறார். அந்த பையன் அவங்க அம்மா சொன்னதை சொல்றான்.

அப்பா உடனே சொல்றாரு, ரெண்டுமே கரெக்ட் தான்டா. நான் எங்க வம்சாவளியை சொன்னேன். உங்கம்மா அவ வம்சாவளியை சொல்லி இருக்கா அப்படின்னு.

பையன் இப்போ ரொம்ப தெளிவாயிட்டான்.

டொறின் மன்மதநாயகம்




ராஜா தனு




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரம்தான்; மனிதன் மறந்தான்

விதுரன் தன் வீட்டின் முன்றலிலுள்ள வேப்பமரத்தின் நிழலின் கீழ் பந்து விளையாடிக் கொண்டிருந்தான். அப்போது தன்னை யாரோ கூப்பிடுவது போல் விதுரனிற்கு கேட்டது. சுற்று முற்றும் பார்த்தான் யாரையும் காணவில்லை. அப்போது அந்த வேப்பமரத்திலிருந்து தான் சத்தம் வருவது தெரிய வந்தது. என்ன ஆச்சரியம் ! அந்த வேம்புதான் அவனை கூப்பிட்டது. அந்த வேம்பு அவனுடன் கதைக்கத் தெடாங்கியது.




தம்பி நீ இந்த நிழலின் கீழ் விள்ளயாடுவது இன்று தான் கடைசி நாள்.நாளை நான் இவ்விடத்தில் இருக்க மாட்டேன். என்னை வெட்டப்போகின்றார்கள். உனது தந்தை என்னை விலை பேசி ஒரு மர வியாபாரிக்கு விற்று விட்டார். அவர்கள் நாளை என்னை வெட்டிவிடுவார்கள். நீ விளையாடும் இந்த இடம் நிழல் இல்லாமல் போய்விடும். இவ்விடம் குளிர்மை இல்லாத வெயில் சுட்டெரிக்கும் வெட்டவெளியாக ஆகப் போகின்றது...

உனது தாத்தா தனது பள்ளிப் பருவத்தில் என்னை சிறு கன்றாக நட்டு வளர்த்து விட்டார். என் நிழலில் தான் உனது தந்தையும் சிறு பிள்ளையாக இருக்கும் போது விளையாடுவார். இப்போது நீயும் விளையாடுகிறாய். ஆனால் இந்த நிழல், குளிர்மைஎல்லாம் இன்றுடன் இல்லாமல் போகப் போகின்றது. பணத்திற்காக உனது தந்தை என்னை விலை பேசி விட்டார். நாங்கள் சூழலிற்கு செய்யும் நன்மைக்கு கோடி பணம் கொடுத்தாலும் ஈடாகாது. என்ன செய்வது. மனிதர்கள் ஏனோ தங்களின் இருப்பிற்கு எங்களின் இருப்பு எவ்வளவு முக்கியம் என்பதை புரிந்து கொள்ளவேமாட்டார்களாம். எங்களை அழிப்பதன் மூலம் தாங்களாகவே தங்கள் இனத்திற்கு புதை குழி வெட்டுகின்றார்கள் என்பதை புரிகிறார்கள் இல்லை. இந்த வருடம் இவ்வளவு வரட்சி ஏற்பட்டதற்கு மனிதர்கள் எங்கள் இனங்களை வகை தொகை இன்றி அழித்தமையே மூல காரணமாகும். இனியும் அவர்கள் தங்களை திருத்திக் கொள்ளவில்லை எனின் அவர்களை இனி யாராலும் காப்பாற்ற முடியாது.

நீ சிறுவனாக இருக்கின்றமையால் எனது பயன் குறித்து அறிந்திருக்கமாட்டாய். எனவே எங்கள் இனத்தில் எனது பயன் குறித்து உனக்கு கூறுகின்றேன்.

உனது தாத்தா தனது காலத்தில் ஒன்று விட்டு ஒரு நாள் காலையில் எனது குருத்து இலை (வேப்பம் தளிர்) இரண்டை தனது வாயில் போட்டுமென்று கொள்வார். இதை அவர் தனது இறுதிக்காலம் வரை கடைப்பிடித்து வந்தார். இதனால் அவரிற்கு நீரிழிவு நோய் என்ற பேச்சிற்கு இடமிருக்கவில்லை. ஆனால் உனது தந்தை இப்போது என்னை மறந்தமையினால் நீழிவு நோயாளியாக மாறி மாத்திரையும் கையுமாக இருக்கிறார். ஆனால் உன் தாத்தாவின் காலத்தில் தற்போதைய நீரிழிவு நோயாளிகள் பயன்படுத்தும் மெற்போமின், இன்சுலின் போன்ற மருந்துகளை அவர்கள் கண்ணால் கண்டது கூட கிடையாது. மற்றும் நான் பூத்து குலுங்கும் காலத்தில் உனது பாட்டி எனது பூக்களை சேகரித்து வைத்து வேப்பம் பூ வடகம் தயாரிப்பார். அவ் வடகத்தை பொரித்து உணவுடன் சேர்த்து உண்பார்கள். இதனால் அவர்களிற்கு குடற்புண் (அல்சர்) வருத் தம் வந்ததே இல்லை. அத்துடன் ஏதும் காய்ச்சல் வந்தால் எனது பட்டையை சிறிது உரித்து அதை நீரில் இட்டு அவித்து அந்த நீரை மூன்று வேளையும் பருகுவார்கள். மறு நாளே காய்ச்சல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விடும்.

மேலும் எனது விதைகளைப் பொறுக்கி சேகரித்து வைப்பார்கள. மாரி காலங்களில் நுளம்புகளை விரட்டுவதற்கு இவ் விதைகளை பயன்படுத்துவார்கள். சேகரித்து வைத்த விதைகளை இடித்து தூளாக்கி தணலில் போட்டு புகை உண்டாக்குவார்கள். இந்த புகைக்கு ஒரு நுளம்பு கூட வீட்டை அணுகாது. ஆனால் இப்போது இரசாயன நுளம்பு விரட்டிகளை பயன்படுத்துகின்றார்கள். இதனால் சுவாச நோய்கள் ஏற்படுகின்றன. ஆனால் எனது புகை மூலம் எந்த சுவாச நோயும் நெருங்குவதில்லை மற்றும் உனது தாத்தாவும் பாட்டியும் எனது சிறு குச்சியில் தான் பல் துலக்குவார்கள். இப்போது உள்ளதை போல் பற்களின் வெண்மைக்கு ஒன்று, பற்கூத்தைக்கு ஒன்று, கூர் உணர்ச்சிக்கு ஒன்று, வாய் துர்நாற்றத்திற்கு ஒன்று என விதவிதமான பற்பசைகள் என அந்தக்காலத்தில் இருந்ததில்லை. எல்லா பிரச்சினைக்கும் எனது குச்சிதான் மருந்து.

நான் ஒரு வீட்டு வாசலில் நின்றேன் என்றால் அந்த வீடு எப்போதும் குளிர்மை நிறைந்ததாகவே இருக்கும். எனது இலை உதிர் காலமான சித்திரை, வைகாசி மாதங்களில் மட்டுமே அந்த வீடு ஓரளவு வெயிலின் தாக்கத்திற்கு உட்படும். மற்றைய காலமெல்லாம் குளிர்மை தான் இந்தக் காலத்து ஏசி எல்லாம் எனது குளிர்மைக்கு ஈடாகமாட்டாது. இதை அனுபவித்து பார்த்தால் தான் என் குளுமை புரியும். நான் எனது இனத்தை பற்றி தான் உன்னிடம் இவ்வளவு நேரமும் கதைத்தேன். ஆனால்மற்றைய இனத்தாவரங்களும் ஒவ்வொன்றும் எவ்வளவோ பயனை மனிதர்களிற்கு நல்கின்றன.

ஆனால் தற்கால மனிதர்கள் தான் இதை புரிந்து கொள்கின்றார்கள் இல்லை.

முன்னையகாலமனிதர்கள் இயற்கையுடன் இணைந்து வாழ்ந்தார்கள். ஆனால் இப்போது எல்லாம் தலை கீழாக மாறி விட்டது. தற்கால மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையில் பெரியதொரு இடைவெளி வந்து விட்டது.

அவர்களுக்கு இனிஎன்னசொல்லியும் புரியப்போவ தில்லை. கெடுகுடி சொல் கேளாது. இப்போது உள்ளவர்களை திருத்த முடியாது. இனி உங்கள் தலைமுறை என்றாலும் மரங்களை அழிக்காமல் இயற்கையுடன் இணைந்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும். உன் பாடசாலை நண்பர்களிடம் இவற்றை எல்லாம் சொல்லி அவர்களையும் மரங்களை நாட்டி வளர்க்கச் செய்வதுடன் நீயும் மரங்களை நாட்டி வளர்த்தல் வேண்டும். மாணவர் சக்தி மாபெரும் சக்தி. நீங்கள் நினைத்தால் பசுமைப் புரட்சியை உருவாக் கலாம். நீங்கள் எல்லோரும் மரக்கன்றுகளை நட்டு வளர்த்து வந்தால் இயற்கை எழில் கொஞ்சும் பசுமை நிறைந்த ஒரு பிரதேசமாக எங்கள் பிரதேசத்தை மாற்றலாம். இதுவே எனது இறுதி ஆசையாகும்.

வேம்பின் கதையை கேட்ட விதுரனிற்கு மனதில் புது உத்வேகம் பிறந்தது. நான் நாளையே பாடசாலை சென்று எனது நண்பர்களிடம் இவற்றை எல்லாம் கூறி நாங்கள் எல்லோரும் மரங்களை நாட்டி வளர்ப்போம். எமது பிரதேசத்தை மரங்கள் நிறைந்த பசுமையான பிரதேசமாக மாற்றுவோம். அத்துடன் உன்னை தறிக்க வேண்டாம் என்று எனது தந்தையிடம் நான் சொன்னால் அவர் அதை கேட்கப் போவதில்லை. எனவே நீ இறந்த பிறகு நீ இருக்கும் இதே இடத்தில் இரண்டு மரக்கன்றுகளை வைத்து வளர்ப்பேன் என விதுரன் வேம்பிடம் உறுதி அளித்தான். மரங்களை வளர்க்க, பாதுகாக்க ஒரு புதிய தலைமுறை உருவாகப் போகின்றது என்ற மன நிறைவுடன் வேம்பு தனது நாளைய மரணத்தை மகிழ்வுடன் எதிர்கொள்ள தயாராகி விட்டது.

**ம.பகீரதன்**
**(பருத்தித்துறை)**

# நாட்டிற்கு சொந்தமான வளங்களை சீனாவிற்கு விற்கின்றது அரசாங்கம்

## எதிர்க்கட்சி குற்றச்சாட்டு

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தை எக்சிம் வங்கியூடாக சீனாவிற்கு வழங்க இரகசிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளதாக ஐ.தே.க. பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் கொழும்பு துறைமுக நகரத்தை அமைத்து அரசாங்கம் அந்த நிலப்பகுதியினை சீன அரசிற்கே முழுமையாக வழங்கவுள்ளது.

இதற்கமைய இலங்கை நாட்டின் வளங்களை வெளிநாடுகளுக்கு தாரை வார்ப்பதாகவும் அவர் சாடினார்.

ஐ.தே.க.தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீன அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின்நிலையத்தின் முகாமைத்துவப் பணிகளுக்கு சீன நாட்டை சேர்ந்த பொறியியலாளர்களை நியமிக்கவுள்ளனர்.

இதற்கமைவான இரகசிய ஒப்பந்தமொன்று சீன ஜனாதிபதியின் விஜயத்தின் போது கைச்சாத்திடப்பட்டுள்ளது.

நமது நாட்டில் இயங்கி வரும் ஏனைய மின் நிலையங்களில் எமது நாட்டு பொறியியலாளர்கள் பணியாற்றும் போது நுரைச் சோலை அனல் மின் நிலையத்திற்கு மாத்திரம் ஏன் நமது நாட்டு பொறியியலாளர்களை பணிக்கமர்த்த முடியாது.

எனவே முகாமைத்துவ பணிகளை அமர்த்தி சீனாவிற்கு முழுமையாக அனல் மின் நிலையத்தை விற்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்கையில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள கொழும்பு துறைமுக நகரத்தையும் சீனாவிற்கு தாரை வார்த்துள்ளனர்.



தற்போது துறைமுக நகரில் சீன தேசிய கொடியே தொங்கவிடப்பட்டுள்ளது.

அத்தோடு குறித்த துறைமுக நகர திறப்பு விழாவிலும் சீன தூதுவர் வரும்வரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காத்திருந்தமை வேதனையளிக்கிறது.

எனவே இலங்கை நாட்டிற்கு சொந்தமான வளங்களை இவ்வரசாங்கம் சீனாவிற்கு விற்கின்றமை எதிர்காலத்திற்கு நல்லதல்ல.

ஆகவே இதனை மக்கள் நன்கு உணர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# பிரதேச சபைத்தவிசாளரினது தீர்மானத்தை எதிர்த்து மூன்று உறுப்பினர்கள் வெளிநடப்பு

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட வவுனியா தெறகு தமிழ் பிரதேச சபைத் தலைவரின் தன்னிச்சையான தீர்மானத்தை எதிர்த்து உபதவிசாளர் உள்ளிட்ட மூன்று உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபையின் மாதாந்தகூட்டம் தவிசாளர் க.சிவலிங்கம் தலைமையில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற போதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த மாதம் நடைபெற்ற மாதாநத கூட்டத் தொடருக்கு பிரதேச சபைத தவிசாளர் வருகை தரவில்லை. வைத்திய தேவை கருதி அவர் வருகை தராமையால் அன்றைய கூட்டத்தை உப தவிசாளர் து.ரவி தலைமை தாங்கி நடத்தியிருந்தார்.

அப்போது ஊழியர்கள் மற்றும் நிதி தொடர்பில் சில தீர்மானங்கள் சபையினால் எடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தன.

அவை தொடர்பில் கடந்த வியாழக கிழமை நடை பெற்ற கூட்டத்தில் ஆராயப்பட்ட போது அதனை ஏற்றுக கொள்ள முடியாது எனவும் அதனை மாற்ற வேண்டும் எனவும் தவிசாளர் பிடிவாதமாக நின்றுள்ளார்.

இதனையடுத்து உப தவிசாளர் து.ரவி, ஆளுங்கட்சி உறுப்பினர் எஸ்.இராஜசேகர், எதிர்க்கட்சி உறுப்பனர் எஸ்.பிரதீபன் ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.

ஏனைய உறுப்பினர்கள் தலைவரிடம் இது தொடர்பில் தொடர்ந்தும் விவாதித்தனர். இதனால் குழப்ப நிலை தொடர்ந்தது. இதனையடுத்து மதிய போசனம் எனக் கூறி சபை அமர்வு நிறுத்தப்பட்டு எதிர் வரும் 23 ஆம் திகதிக்கு சபைக் கூட டம் ஒத்திவைக்கப்பட்டது. (2-250)

# ஜே.வி.பி.வேட்பாளரின் வீட்டின் மீது தாக்குதல்


(கொழும்பு)

ஜே.வி.பி கட்சியின் முதலமைச்சர் வேட்பாளர் சமந்த வித்யாரட்ன வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை வித்யாரட்னவின் காரியாலயம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் காரியாலயத்திற்கு தீ மூட்டப்பட்டுள்ளது. இனந் தெரியாத குழுவினரே வீட்டின் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திரை விமர்சனம்

தமிழ் சினிமாவையும் காதல் காவியங்களையும் என்றுமே பிரிக்க முடியாது. அந்த வகையில் கல்லூரி காதல், ஒரு தலைக்காதல், பார்த்து வரும் காதல், பார்க்காமலேயே வரும் காதல் என் பல பரிமாணங்களை தமிழ் சினிமா காட்டியுள்ளது.அதே பாணியில் நான் என்ற வித்தியா சமான படத்திற்கு பிறகு ஜீவா சங்கர் இயக்கத்தில் ஆர்யாவின் தம்பி சத்யா நடித்திருக்கும் படம் தான் அமரகாவியம். இதுவரை நாம் பார்த்த பல அழுத்தமான காதல் கதைகளான 7ஜி ரெயின்போ காலனி, காதல் கொண்டேன், மைனா போன்ற படங்களின் வரிசையில் இந்த படமும் இடம்பெறும் என்பதில் எந்த ஒரு மாற்று கருத்து இல்லை.இதை முன்நிறுத்தி ஜீவா கையில் எடுத்திருக்கும் காதல், பள்ளி பருவத்தில் வரும் முதல் காதலை தான். ஆனால் கதை ஆரம்பிக்கும் விதமே நம்மை ஈர்த்து அவர்களிடம் கொண்டு செல்கிறது. தன் நண்பரின் காதலை சொல்ல பயந்து கொண்டே மியா ஜார்ஜிடம் வர, அவர் நான் உன் நணபனை காதலிக்கவில்லை, உன்னை தான் காதலிக்கிறேன் என்று செல்வ ராகவன் பட கதாநாயகி போல் டெம்ப் ஏற்றுகிறார்.பின் வழக்கம் போல் காதல், பாடல் என கதை நகர, திடிரென்று ஏற்படும் திருப்பம் அதை தொடர்ந்து இவர்கள் வாழ்க்கை என்ன ஆகிறது என்பது தான் மீதிக்கதை.படத்தின் பலமே இயக்குனர் அடிப்படையில் ஒரு ஒளிப்பதி வாளர் என்பதால் படத்தின் காட்சியமைப்புகள் மிகவும் அழகாக வந்துள்ளது. அதிலும் குறிப்பாக பள்ளிகளில் எடுக்கப்பட்ட காட்சிகள் கலர் ஃபுல்லாக இருக்கிறது.கதையின் நாயகனாக சத்யா மிக அழகாக நடித்திருக்கிறார், முந்தைய படங்களை விட இதில் நடிப்பிற்கு நிறையவே மெனக்கெட்டுள்ளார். படத்தின் நாயகி மியா ஜார்ஜ், அவரை போலவே நடிப்பும் அழகாக உள்ளது. தமிழ் சினிமாவிற்கு வெல்கம் வாய்ப்புகள் குவியப்போகிறது.இவர்கள் எல்லோ ரையும் விட படத்தை ஒரே ஆளாக தூக்கி செல்பவர் இசையமைப்பாளர் ஜிப்ரான் தான், தன் மெல்லிய மெலடிகளால் ஸ்கோர் செய்கிறார், மேலும் பின்னணி இசையில் கலக்கியுள்ளார்.என்ன தான் அனை த்தும் நன்றாக இருந்தாலும் படத் தின் திரைக்கதை இழுத்து கொண்டு வருவதற்குள் போதும், போதும் என்று ஆகிவிட்டது. இது ஒன்றே படத்தின் முழு பின்னடைவிற்கு ஒரு காரணமாக உள்ளது.சில நாட்களுக்கு முன் இந்த படத்தை பார்த்த நயன்தாரா 2 நாட்கள் கண்ணீர் விட்டு அழுததாக ஒரு செய்தி வந்து படத்தின் ஹைப்பை ஏற்றியது. இதற்காகவே இப்படத திற்கு காதல் ஜோடிகள் மத்தியில் நல்ல ரெஸ்பான்ஸ்.ஆனால் அது முழுவதுமாக அவர்களை சென் றடைந்ததா என்றால் கேள்விக்குறி தான்.மொத்தத்தில் எல்லோரும் தியேட்டரில் 'அமர', 'காவியம்' மிஸ் ஆகிவிட்டது

# பொலிவூட்டில் இலியானா அமிதா பச்சன் பாராட்டு



டோலிவூட்டில் கோடிக் கணக்கில் சம்பளம் வாங்கி கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தார் நடிகை இலியானா. திடீர் என்று ஒரு நாள் நான் பொலி வூட்டில் செட்டிலாகப் போகிறேன் என்று மூட்டை முடிச் சைக் கட்டிக் கொண்டு மும்பைக்கு சென்று விட் டார். அவர் நடிப்பில் வெளியான முதல இந்தி பட மான பர்பியை பார்த்து அமிதாப் பச்சனே இலியானாவை பாராட்டினார். பர்பியை அடுத்து படா போஸ்டர் நிக்லா ஹீரோ படத்திலும், மெய்ன் தேரா ஹேறா படத்திலும் நடித்தார்.

பொலிவூட்டில் நடிக்கும் அனை வருக்கும், யஷ் ராஜ் பிலிம்ஸ் பேனரில் ஒரு படமாவது நடிக்க வேண்டும் என்ற ஆசை இருக்கும். அந்த ஆசை அனை வருக்கும் நிறைவேறிவிடாது. ஹிந்தியில் வளர்ந்து வரும் நடிகையான இலியானா வுக்கு அதிர்ஷ்டம் அடித்துள்ளது. அவர் யஷ் ராஜ் பிலிம்ஸ் ஷாருக்கானை வைத்து எடுக்கும் பேன் படத்தில் நடிக்க உள்ளாராம். பேன் படத்தில் ஷாருக்கான் ஜோடியாக நடிக்க பல முன்னணி நடிகை களின் பெயர்கள் அடிபட்டது. ஆனால் இறுதியில் தேர்வாகியிருப்பது இலியானா என்று கூறப்படுகிறது. மனீஷ் சர்மா 'இயக்கும் பேன் படத்தின் படப்பிடிப்பு வரும் ஒக்டோபர் மாதம் ஆரம்பிக்கிறது.

# மனிதன் பாதி மிருகம் பாதி






# ராஜஸ்தானில் அஜித்

அஜித்தின் திரையுலகப் பய ணத்தில் மிக முக்கியமான திரு ப்பு முனைப்படம் - காதல் கோடடை. அகத்தியன் இயக்கிய இப்படத்தில் அஜித்தும், தேவயானியும் ஒரு வரையொருவர் பார்க்காமலேயே காதலிப்பார்கள். தமிழ் சினிமாவில் புதிய டிரென் ட்டை அறிமுகம் செய்து வைத்த இப்படத்தில் நிறைய காட்சிகளை ராஜஸ்தானில் பட மாக்கியிருந்தார்கள். அஜித் நடிப்பில் கடந்த வருடம் தீபாவளிக்கு வெளியான ஆரம்பம் படத்திலும் ராஜஸ்தானில் படமாக் கப்பட்ட காட்சிகள் இடம் பெற்றி ருந்தன.

ஏற்கனவே ராஜஸ்தானில் படம் பிடிக்கப்பட்ட காதல் கோட் டையும் ஆரம்பமும் பெரிய வெற்றி பெற்றிருப்பதால் இப்படம் வெற்றிபெறும் என்ற நம்பிக்கை காரணமாகவோ என்னவோ... தற்போது கௌதம் மேனன் இயக்கத்தில் அஜித் நடித்து வரும் படத்திலும் சில காட்சிகளில் ராஜஸ்தான் இடம் பெறுகிறது. அதற்கான படப்பிடிப்பு இன்று முதல் ராஜஸ்தானில் உள்ள ஜெய்ப்பூர், ஜோத்பூர் உட்பட பல்வேறு இடங்களில் நடைபெறுகிறது. ஒரு பாடல் மற்றும் சில காட்சிகள் என மொத்தம் 10 நாட்கள் ராஜஸ்தானிலேயே படப்பிடிப்பை நடத்தத் திட்டமிட்டிருக்கிறார் இயக்குநர் கௌதம் வாசுதேவ் மேனன். கௌதம் மேனன் கதை சொல்லும்போது வேறு ஊரை குறிப்பிட் டதாகவும், அஜித்தே ராஜஸ்தானை விபாரிசு செய்ததாகவும் தகவல் அடிபடுகிறது.

# 'பரீட்சைக்கு நேரமாச்சு' மேடை நாடகத்தில் ரஜனி

80களில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்பில் வெளியாகி பெரும் வெற்றி பெற்ற படம் 'பரீட் சைக்கு நேரமாச்சு'.

இந்தப் படத்துக்கு கதை கரு ஒரு நாடகம் தான். அந்த நாடகத்தை எழுதி அரங்கேற்றியவர் ஒய் ஜி பார்த்தசாரதி. 1978ம் ஆண்டு அதே பெயரில் இயக்கி, அதில் நடித்திரு ந்தார் பார்த்தசாரதி.

பல ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த 'பரீட்சைக்கு நேரமாச்சு' நாடகத்தை ஒய்.ஜி.மகேந்திரன் செப்டம்பர் மாதம் 14-ம் தேதி சென்னையில் நடத்த திட்டமிட் டுள்ளார்.

இது தொடர்பான சந்திப்பில் ஒய்ஜி மகேந்திரன் கூறுகையில், என் தந்தை உருவாக்கிய "பரீட் சைக்கு நேரமாச்சு" நாடகம் மக்க ளிடையே பெரும் வரவேற்பு பெற் றது. இந்த நாடகத்தை நான் மீண் டும் மேடையேற்ற ஆசைப்படு கிறேன். தற்போது உள்ள மக்க ளின் ரசனைக்கேற்ப இந்த நாடக த்தை உருவாக்கப் போகிறேன்.

ஒரு சந்திப்பில் ரஜினியை சந் தித்த போது ,நாம் ஒரு நாடகத்தை உருவாக்கலாம் என்று கூறினார். அவருக்காக ஒரு கதையை உரு வாக்கியுள்ளேன்.

தற்போது அவர் 'லிங்கா' படத் தில் பிசியாக இருப்பதால் அதை முடித்து விட்டு நடிப்பார் என்று நினைக்கிறேன்." என்று தெரிவித் துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபா நிதியில் கற்சிலைமடுவில் கால்நடைப்பண்ணை அமைப்பு

(மல்லாவி)

முல்லை.மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கற்சிலைமடு கிராமத்தில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத் தினை எதிர் காலத்தில் ஊக்குவிக்கும் முகமாக ஜேர்மன் நாட்டின் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் மக்களுக்கு நல்லின கறவைப் பசுக்களை வழங்குவதுடன் மாதிரி கால்நடை பண்ணை யொன்றும் அமைக்கப்பட்டு கற்சிலைமடு கிராம அபிவிருத்தி சங்கத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் செயற்பட்டு வருவதாக இலங்கை சேவாலங்கா அமைப்பின் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அவர்கள் தெரிவிக்கையில்,

ஜேர்மன் நாட்டின் நிதியனுசரணையுடன் சேவாலங்கா அமைப்பானது கற்சிலைமடு கிராம சேவையாளர் பிரிவிலுள்ள பெரும் கருவேப்பமுறிப்புக்குளத்திற்கு அண்மையில் காடுகள் துப்புரவு செய்யப்பட்டு 7 ஏக்கர் நிலப் பகுதியில் சுற்றுவேலி அமைக்கப்பட்டு அதில் மாதிரி கால் நடை பண்ணையொன்று அமைக்கப்பட்டுள்ளது.



இக் காணியில் மாட்டுத் தொழுவம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பத்து நல்லின கறவை பசுக்கள் தென்பகுதியிலிருந்து கொண்டு வரப்பட்டு இம் மாதிரி பண்ணையில் வளர்க்கப்படவுள்ளன.

அத்துடன் எதிர்காலத்தில் உற்பத்தியாகும்பசுப்பால்மூலம் பால்கோவா, பால்ரொபி உட்பட பால் சார்ந்த உணவுப் பொருட்களை உற்பத்தி செய் வதற்கு உற்பத்தி நிலையமொ ன்று நவீன இயந்திர வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

இப் பண்ணையில் குடிநீர் தேவையினை நிவர்த்தி செய்யும் முகமாக திறந்த கிணறு ஒன்றும் குழாய் கிணறு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

மேலும் 50 பயிற்சியாளர்கள் பங்கேற்கக்கூடிய வகையில் கால்நடை பயிற்சி நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

இப் பண்ணையின் போக்குவரத்து வசதிகளுக்காக பட்டாரக வாகனம் ஒன்று கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் ஊடாக 30 நல்லின கறவை பசுக்கள் வழங்குவதற்காக பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு 26 பேருக்கு கறவை பசுக்கள் வழங்கப்பட்டுள்ளது.

இப் பசுக்களின் உணவு தேவைக்கு CO-03 இன புல் நாற்றுக்கள்வழங்கப்பட்டுள்ளது.

பண்ணைக்கும் பயனாளிகளுக்குமாக இன்னும் 14 நல்லின கறவைப் பசுக்கள் தென் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் மிக விரைவில் அவை கொண்டு வரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயற்படுத்துவதன் ஊடாக உடனடியாக 30 நல்லின கறவை பசுக்களைப் பெற்றுக்கொள்பவர்களும் மற்றும் பண்ணையுடன் தொடர்புடைய ஏனைய வேலைகளுக்குமென 12 பேருக்குமாக மொத்தம் 42 குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்திற்குரிய வழி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் வாழும் பல நூற்றுக்கணக்கான இளைஞர் மற்றும் யுவதிகள் உட்பட பலபொதுமக்கள்இப்பண்ணை அமைக்கப்பட்டதன் மூலம் பயனடைவார்கள் என்று இலங்கை சேவாலங்கா முகாமைத்துவப் பிரிவினால் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)




## 2015 ஆம் ஆண்டில் 32 ஆயிரம் குடும்பங்களுக்கு உதவியளிக்கப்படும்

### யு.என்.ஹபிராட் நிறுவன அறிக்கையில் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

யு.என்.ஹபிராட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் கனகபுரத்தில் அமைந்துள்ள நண்பர்கள் விடுதியில் ஊடகவியலாளர்களுக்கான சந்திப்பும் செயலமர்வும் அண்மையில் காலை 10 மணிக்கு மேற்படி நிறுவன தேசிய திட்டமிடல் முகாமையாளர் ஐ.ஏ.கமீத் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

வடக்கு கிழக்கு பகுதிகளில் போரினால் பாதிக்கப்பட்டு மீள் திரும்பியோருக்கு அவர்களது சேதமான வீடுகளைத் திருத்துவதற்கும் உட்கட்டமைப்பு வசதிகளை நிர்மாணிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் வாழ்வக ஸ்தாபனம் (UN.Habitat) பன்நாட்டு நிதியுதவியுடன் யுத்தத்திற்கு பின்னரான மீட்சி பெறல் மற்றும் மீள் நிர்மாணச் செயல் திட்டம் மூலம் உதவுகின்றது.

2010 இல் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் வடக்கின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் மக்களினதும் மாவட்டத்தின் நிர்வாகத்தினதும் நெருங்கிய ஒத்துழைப்புடன் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015 ஆம் ஆண்டளவில் வடக்கு கிழக்கில் 32 ஆயிரம் குடும்பங்கள் தங்களது வீடுகளை மீள் நிர்மாணிப்பதற்கும் திருத்துவதற்கும் என உதவியளிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை ஆரம்பிக்கப்பட்ட28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளில் 18 ஆயிரம் வீடுகள் பூர்த்தி அடைந்துள்ளது.

200 கிராமங்களில் உள்ள 2 இலட்சத்து 50 ஆயிரம் பயனாளிகள் பயன்பெறும் பொரு ட்டு முன்பள்ளிகள், சன சமூக நிலையங்கள், குளங்கள், மழை நீர் சேகரிப்பு திட்டம் போன்ற வசதிகளுக்கு உதவி அளிக்கப்பட்டுவருவதுடன் சில தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் சேதமடைந்த உள் வீதிகள், வெள்ள நீர் வடிகாலமைப்பு சீர்திருத்தம் செய்வதற்கு உதவுவதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது இத்திட்டம் சில கிராமங்களில் காலம் தாமதித்து நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் தமது வீடுகளை கூரை போட்டுதிருத்தியவர்களுக்கு திருத்த உதவிகள் கிடைக்கப்படவில்லை எனவும் இதுதொடர்பாக மக்களிடமிருந்து கவலை தெரிவிக்கப்படுவதாகவும் ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு நிறுவன அதிகாரிகள் பதிலளிக்கையில்,

அலுவலர்களின் அனுசரணையுடனேயே இத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் பயன்பெற ஏற்றவகையில் புள்ளியிடல் முறை அமுல்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலர், கிளிநொச்சி மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், யு.என் .ஹபிராட் நிறுவன தலைமை தொழில்நுட்ப ஆலோசகர் ரிம் மக்ரேயர், முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான திட்ட முகாமையாளர்கள் என பல தரப்பினர் கலந்து கொண்டனர்.(2-254)

## மாங்குளம் தபால் கட்டுப்பாட்டு அலுவலக திறப்புவிழா நாளை

மகிந்த சிந்தனை கோட்பாட்டிற்கு அமைவாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் 4 கோடியே 10 இலட்சத்து 53 ஆயிரத்து 395 ரூபா 60 சத நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட மாங்குளம் தபால் கட்டுப்பாட்டு அலுவலகத்தின் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 11 மணிக்கு கைத்தொழில் மற்றும் வணிக அமைச்சர் றிசாத் பதியுதீனினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் அலுவலகத்தினூடாக கருப்பட்டமுறிப்பு, புற்று வெட்டுவான், திருமுறிகண்டி, துணுக்காய், யோகபுரம், வவுனிக்குளம், நெட்டாங்கண்டல் ஆகிய ஏழு உப தபாலகங்களின் அஞ்சல் செயற்பாடுகள் நடைபெறும்.

வன்னியில் நடைபெற்ற யுத்தம் காரணமாக இத்தபாலகத்தின் கட்டடம் அழிவடைந்த காரணத்தால் மாங்குளம் நகர் பகுதியிலுள்ள வர்த்தக நிலையமொன்றில் தற்காலிகமாக இன்றுவரை இயங்கி வந்துள்ளது. இதற்கு அஞ்சல் அதிபர் தரம் 1 இனைச் சேர்ந்தவர் கடமையாற்ற வேண்டிய நிலையில் அவ் அதிபர் பதவி வெற்றிடத்துடனேயே இற்றைவரை இயங்கி வந்துள்ளது.

தற்போது புதிய கட்டடத்திற்கு நகர்கின்ற நிலையிலும் இவ் வெற்றிடம் நிரப்பப்படாது காணப்படுவதாக மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

தற்போது திறக்கப்படும் மாங்குளம் அஞ்சல் தபால் கட்டுப்பாட்டு அலுவலக வளாகத்தினுள் பிராந்திய தபால் தரம் பிரிக்கும் அலுவலகம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

அதன் செயற்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்படமாட்டாது என தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2-15)

# நன்னீர் மீன்பிடிப்பாளர்களின் மேம்பாட்டிற்காக கட்டுக்கரைகுளத்தில் மீன்குஞ்சுகள் விடப்பட்டன

(மன்னார்)

நன்னீர் மீன்பிடியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கிலும் நன்னீர் மீன்வளத்தை அதிகரிக்கும் பொருட்டும் மன்னார் மாவட்டத்திலுள்ள கட்டுக்கரைக் குளத்தில் கடந்த 18 ஆம் திகதி வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் 75 ஆயிரம் மீன்குஞ்சுகளை விட்டார்.

வடமாகாண மீன்பிடி அமைச்சின் நிதி அனுசரணையுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வின் மூலம் கட்டுக்கரைக்குளத்தில் மீன்பிடியை தமது வாழ்வாதாரமாகக் கொண்டு வாழும் ஏழு சங்கங்களைச் சேர்ந்த 634 குடும்பங்கள் நன்மையடைவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன்போது கருத்துத் தெரிவித்த அமைச்சர் பா.டெனீஸ்வரன்,

வடமாகாணத்தில் உள்ள பல குளங்களில் மீன் குஞ்சுகள் வைப்பிலிட வேண்டிய தேவை இருந்த போதிலும் தற்போதைய வறட்சி காரணமாக பல குளங்களில் நீர் மட்டம் வேகமாக குறைவடைந்து வருவதனால் மீன் குஞ்சுகளை வைப்பிலிட முடியாது.

எதிர்வரும் மாதத்தில் பருவ மழை பெய்ய ஆரம்பித்ததும் இவற்றை ஏனைய குளங்களிலும் செயற்படுத்தக் கூடியதாக இருக்கும் என்றார்.


இந்நிகழ்வில் வடமாகாண மீன்பிடி அமைச்சின் செயலாளர் வரதீஸ்வரன், கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாணப் பணியாளர் பெலிசியன், அப்பிரதேசத்தின் கிராம சேவையாளர், NAQDA அதிகாரிகளுடன் மீன்பிடியாளர்களுமென பல தரப்பினர் கலந்து சிறப்பித்தனர். (2-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹிந்தி மொழியைப் பிரபலப்படுத்தும் நோக்கில் இந்திய அரசின் வெளி விவகார அமைச்சின் அனுசரணையுடன் ஹிந்தி தினம் கடந்த 14 ஆம் திகதி யாழ். இந்திய துணைத்தூதரகத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் இந்திய துணைத் தூதரகத்தில் ஹிந்தி தினத்தையொட்டி நடத்தப்பட்ட பேச்சு,கவிதை மற்றும் கட்டுரைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராக யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் பதில் தூதுவர் எஸ்.டி.மூர்த்தி கலந்து சிறப்பித்திருந்தார். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)



அகில இலங்கைவேதாகம வினாவிடைப் போட்டி அண்மையில் கொழும்பு சூசையப்பர் கல்லூரியில் நடைபெற்ற போது யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலையைச் சேர்ந்த மேற்பிரிவு மாணவிகள் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்றனர்.இதன் போது வெற்றியீட்டிய மாணவர்கள் பாடசாலை அதிபர் திருமதி லு.மகேஸ்வரன், உப அதிபர் திருமதி யூ.கு. யூலியஸ், பகுதித்தலைவர் திருமதி த. லோறன்ஸ், உயர்தர கிறிஸ்தவ மன்ற பொறுப் பாசிரியர் திருமதி சு. வெனான்சியஸ் ஆகியோருடன் நிற்பதை படத்தில் காணலாம்.



யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 15 ஆவது அணியினரான புகுமுக முகிழ் தின ஆசிரியர்களின் ஆரம்பநிகழ்வு அண் மையில் கல் லூரியின் வித்தக விநாயகர் ஆலயத்தில் இருந்து தொடங் கியது. இதன்போது கல்லூரியின் பீடாதிபதி எஸ். அமிர்த லிங்கம் மற்றும் விருந்தினர்கள் விரிவுரையாளர்கள் முகிழ் நிலை ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோர் அழை த்து வரப்படுவதை படத்தில் காணலாம்.

நிகழ்வின்
நிழல்கள்






யாழ்.நல்லூர் ஸ்தான சி.சி த.க பாடசாலையில் வறிய மாணவர்களுக்கான உதவி வழங்கும் நிகழ்வு அண்மையில் நடை பெற்றது.இதன் போது தெரிவு செய்யப்பட்ட 17 மாணவ ர்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படுவதையும் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவன் ஒருவருக்கு மடிக் கணனி வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.





சங்கானை -Butterfly International School பண்டத்தரிப்பு Blooming Buds Day Care Centre ஆகிய ஆங்கில மொழி பாடசாலை களின் ஆங்கிலகலை விழாவும் முத்தமிழ் விழா வும் அண்மையில் நடைபெற்றது. இதன் போது வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் உள்ளிட்ட விருந் தினர்கள் வரவேற்கப்படுவதையும் நிகழ்வில் இடம்பெற்ற மாணவர்களின் கலை நிகழ்வுகளை யும் படங்களில் காணலாம்.



யாழ். ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலய வெளியீடாக **அடைக்கலமே தாயே** என்னும் பாடல் இறு வெட்டு வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்ற போது இறுவெட்டின் பாடல் ஆக்கம் மற்றும் இசையமைப்பினை மேற் கொண்ட இசைத் தென்றல் ம்.ஜேசுதாசனுக்கு எஸ். அமய்ராஜ் பொன்னாடை போர்த்தி கௌரவித்ததை படத்தில் காணலாம்.







யா/ கோண்டாவில் சி.சி.த.க பாடசாலை மாணவர்களின் ஆங்கில தின நிகழ்வு யா/ கோண்டாவில் இந்துக்கல்லூரியில் அண்மையில் நடைபெற்றபோது விருந்தினர்கள் வரவேற்கப்படுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

....8 ஆகஸ்ட் 1996 இல் சச்சின் கேப்டனாக மகுடம் சூட்டப்பட்டார். அப்போது சச்சினின் வயது 23 ஆண்டுகள் 4 மாதங்கள். ஃபாஸ்ட் ஃபுட் மாதிரி கிரிக்கெட் வாழ்க்கையில் சச்சினுக்கு எல்லாமே ஃபாஸ்ட்தான். 15 வயதில் ரஞ்சி ஆடத் துவங்கியதிலிருந்து 23 வயதில் டெஸ்ட் கேப்டன் ஆகும் வரை சச்சினுக்கு நடந்தது எல்லாமே ராக்கெட் வேகத்தில்தான். சாதாரணமாக ஒவ்வொரு ஆட்டக்காரனும் முப்பது வயதிற்கு மேல் சாதிக்க வேண்டிய அனைத்தையும் சச்சின் 23 ஆண்டுகளில் சாதித்துவிட்டார். நடுவே திருமணம்-இரண்டு குழந்தைகள். இருப்பினும் உலகிலேயே மிகக் குறைந்த



வயதில் சச்சின் கேப்டனாகிவிட்டார் என்று கூற முடியாது. காரணம் இந்தியாவின் பட்டோடி நவாப் 1962 ஆம் ஆண்டு தனது 21 ஆவது வயதில் கேப்டனானதுதான் இன்றுவரை உலக ரிகார்ட்.

8 ஆகஸ்ட் 1996 இல் இலங்கையில் சிங்கர் கோப்பை மற்றும் கனடாவின் டொரொண்டோவில் சஹாரா கோப்பை போட்டிகளுக்கு சச்சின் முறைப்படி அணியின் கேப்டனாக அறிவிக்கப்பட்டார். முன்னாள் கேப்டனாக கவாஸ்கர் மற்றும் ஸ்ரீகாந்த் ஆகியோர் பேட்ஸ்மேன்களாக இருந்து பின்னர் கேப்டன்களாகவும் ஆனவர்கள். எனவே, கேப்டனாக இருப்பதன் சிரமங்களை உணர்ந்தே இருந்தனர். அவ்வப்போது சச்சினிடம் கேப்டன் பதவி பொறுப்புகள் பற்றி விளக்கி இருந்தார்கள். கேப்டன் பதவி என்பது தலையில் இருக்கும் முள்கிரீடம் போன்றது. சுமைகள் அதிகம். பௌலிங் சரியில்லை என்றால் புத்திசாலித்தனத்துடன் பௌலர்களை மாற்ற வேண்டும். பேட்டிங்கில் தோல்வி அடைந்து வீரர்கள் பெவிலியன் திரும்பினால் கேப்டன்தான் திறமையுடன் விளையாடி அணியைத் தோல்வியிலிருந்து காப்பாற்ற வேண்டும். வீரர்களுக்குள் மனக்கசப்போ, விரோதமோ இருந்தால் அது விளையாட்டைப்

### மணி மகுடம் இல்லை! முள்-கிரீடம்

பாதிக்க விடக்கூடாது. எதிர் அணியினர் விளையாடும்போது ஃபீல்டர்களை எங்கு நிறுத்தினால் அவர்கள் ஆட்டம் இழப்பார்கள் என்று தெரிந்திருக்க வேண்டும். மொத்தத்தில் பழி ஓரிடம் பாவம் ஓரிடம் என்பதுபோல் அணியில் யார் தவறு செய்தாலும் அதற்கான முழுப்பொறுப்பையம் கேப்டன்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். இறுதியில் பலிகடா ஆவதும் கேப்டன்தான். ஜெயித்தால் பூ பொழியும் என்பது உண்மையே. ஆனால், தோற்றால் வசை மழை பொழியும் என்பதையும் மறந்துவிடக் கூடாது என்று கூறியிருந்தார்கள். அவர்கள் கூறிய அனைத்தையும் சச்சின் ஒருமுறை ரீவைண்ட் செய்து மனத்திரையில் ஓட்டிக்கொண்டார். பொறுப்புகள் தேடி வரும்போது அதைத் துணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். எதில்தான் பிரச்சினைகள் இல்லை. பிரச்சினைகளுக்கு பயந்தால் நினைத்ததை சாதிக்க முடியாது. எனவே, துணிவே துணை என்ற நம்பிக்கையுடன் சச்சின் கேப்டன் பதவியை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டார். 28 ஆகஸ்ட் 1996 ஆம் ஆண்டு இலங்கை பிரேமதாச மைதானத்தில் இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா மற்றும் ஜிம்பாவே அணிகள் பங்குபெற்ற சிங்கர் கோப்பைக்கான போட்டிகள் துவங்கின.

(தொடரும்)

கே. ரமேஷ்

கேப்டன் பொறுப்பு ஏற்றதும் சச்சின் ஏனைய ஆட்டக்காரர்களுக்காகவும் கவலைப்பட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானார்.

பேட்டிங்கில் சரிவர கவனம் செலுத்த முடியாமைக்கு இதுவும் ஒரு காரணமோ என்ற எண்ணம் அவரிடம் மெல்ல மெல்ல மேலோங்கத் துவங்கியது. அணியும் ஜெயிக்க வேண்டும். அதே சமயம், பேட்டிங்கும் நன்றாக இருக்க வேண்டும் என ஒரே நேரத்தில் இரண்டு குதிரைகளில் சவாரி செய்ய வேண்டிய கட்டாயத்தையும் அவசியத்தையும் சச்சின் உணர்ந்தார்.

# ஆத்ம ஞானத்தைத் தேடி

## கவனத்தேவையை விட்டுவிடுதல்

...உங்களது எல்லாச் செயல்களும் எல்லா முயற்சிகளும் உங்களைச் சுற்றியுள்ள மற்றவர்களின் கையெழுத்தைப் பெறுவதற்காகவே அமைகிறது. ஒரு பெரிய பதிவேட்டில் நல்ல தந்தை என்பதன் கீழ், நீங்கள் உங்கள் குழந்தைகளுக்குச் செய்ததையெல்லாம் எழுதி, அவர்களது அங்கீகாரக் கையெழுத்தைப் போட வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்! பிறகு உங்கள் மனைவியிடமும் மேலதிகாரியிடமும் நண்பர்களிடமும் செல்கிறீர்கள். நீங்கள் நல்ல கணவன், நல்ல ஊழியர், அதனடியில் அவர்களது கையெழுத்திற்காகக் காத்திருக்கிறீர்கள். நீங்கள் எப்பொழுதும் அங்கீகாரக் கையெழுத்திற்காகவே வேண்டி நிற்கிறீர்கள், அவ்வளவே!

அதேபோல், மற்ற அனைவரும் உங்கள் கையெழுத்திற்காக உங்களை[illegible] வருகின்றனர்! நீங்களும் அவர்களது பதிவேட்டில் உரிய இடத்தில் கையெழுத்திட வேண்டும்! நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து கையெழுத்துவேட்டையிலிருந்துகொண்டிருக்கிறோம். நாம் சமூகத்திலிருந்து எத்தனை முடியுமோ அத்தனை நல்ல- அபிப்பிராயத்தைச்



சேகரித்து நமது மதிப்பை நமக்கும் சமூகத்திற்கும் நிரூபிக்க வேண்டும் என்று செயற்பட்டுக்கொண்டிருக்கிறோம்.

நாம் ஏன் நம்மைப் பற்றிய மற்றவர்களின் அபிப்பிராயத்திற்காக இத்தனை கஷ்டப்பட வேண்டும்? நமது சொந்த சக்தியால், நாமே ஏன் நம்மை மதிப்பிட்டுக்கொண்டு வேலையைத் தொடரக்கூடாது? நாம் ஏன் மற்றவர்களிடமிருந்து ஆற்றலைப் பெற்றுக்கொண்டிருக்கிறோம்? இவற்றிற்கெல்லாம் காரணம் இரண்டு விடயங்கள் தான். ஒன்று நமக்கு நம்மைப் பற்றி எதுவுமே தெரியாது. நமக்கு நம்மைப் பற்றி தெரிந்ததெல்லாம் மற்றவர்களின் அபிப்பிராயங்கள் மற்றும் சான்றிதழ்கள் மூலம்தான். இரண்டாவது: மற்றவர்களெல்லாம் நமக்கு அங்கீகாரத்தையும் கவனத்தையும் தரும் பொழுது உண்மையில் அவர்கள் தருவது மேலே செல்வதற்கான சக்தியைத்தான், கவனமே சக்தி! அதனால் தான் மற்றவர்கள் கவனத்தைத் தரும்

ஆன்மீகம் 23

பொழுது மேலும் ஊக்கமடைவதாக உணர்கிறோம்.

நமக்கு கவனம் எந்த வடிவத்தில் இருந்தாலும் சரிதான். பல வீடுகளில் மாமியாரும் மருமகளும் ஒருவருக்கொருவர் தொடர்ந்து சண்டையிட்டுக் கொண்டேயிருக்கின்றனர். அந்தப் பாவப்பட்ட மனிதனான மகன் அல்லது கணவனிடம் ஒருவரைப் பற்றி மற்றொருவர் தொடர்ந்து புகார் கூறிக்கொண்டேயிருக்கின்றனர். ஆனால்,' அந்த இருவரில் ஒருவர் சில நாட்களுக்கு ஊரை விட்டு வெளியே சென்றுவிட்டால் என்ன நிகழ்கிறது? மற்றவர் அவரை இழந்ததாக உணரத் தொடங்குகிறார்! அவர்கள் எப்பொழுதும் சண்டையிட்டுக்கொண்டாலும் இருவரும் சேர்ந்திராத பொழுது ஒருவரை மற்றவர் இழந்ததாக உணர்கிறார்கள்.

பரமஹம்ஸ சுவாமி

(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# சிறுவர் அரங்கம்

929


18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து மற்றும் பிரான்ஸ் நாடுகளில் ஜன்னல்களுக்கும் வரி விதிக்கப்பட்டது.



பலாப்பழம் வங்கதேசத்தின் தேசியப் பழமாகும்.




## அட அப்படியா?




ஐரோப்பியாவின் மிகச்சிறிய பறவை கோல்டுக்ரெஸ்ட். இதன் எடை 4முதல் 7கிராம் வரை இருக்கும்.



சுட்டி



பூமியில் மெழுகுவர்த்தி எப்படி எரியும் என்று தெரியும். விண்வெளியில் நீல நிறத்தில் அரைக்கோளவடிவில் எரியும்.




போட்ஸ்வானா நாட்டின் ரூபாயின் பெயர், புலா. அந்த நாட்டு மொழியில் மழை என்று அர்த்தம்.

09.2014
21

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1792 - பிரான்சில் முடியாட்சி அகற்றப்பட்டு குடியரசு நிறுவப்பட்டது.
- 1860 - இரண்டாம் ஒப்பியம் போர்: ஆங்கிலேய, பிரெஞ்சுப் படைகள் சீனப் படைகளைத் தோற்கடித்தன்னர்.
- 1896 - பிரித்தானியப் படைகள் சூடானின் டொங்கோலா நகரைக் கைப்பற்றினர்.
- 1964 - மோல்டா, ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1972 - பிலிப்பீன்ஸ் அதிபர் பேர்டினண்ட் மார்க்கொஸ் முழு நாட்டிலும் இராணுவ ஆட்சியைப் பிறப்பித்தார்.
- 1981 - பெலீஸ், ஐக்கிய இராச்சியத்திடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1991 - ஆர்மேனியா, சோவியத் ஒன்றியத்திடம் இருந்து விடுதலை அடைந்தது.
- 1995 - விநாயகரின் சிலைகள் பால் குடிக்கும் அதிசயம் உலகின் பல இடங்களில் இடம்பெற்றது.
- 2001 - நாசாவின் டீப் ஸ்பேஸ் 1 விண்கலம் பொரெல்லி வால்வெள்ளிக்குக் கிட்டவாக 2,200 கிமீ தூரத்திற்குள் சென்றது.
- 2003- கலிலியோ விண்கலத் திட்டம் இடைநிறுத்தப்பட்டு அது ஜுப்பிட்டர் கோளின் வளிமண்டலத்தினுள் அனுப்பப்பட்டு அதனுடன் மோதவிடப்பட்டது.
- 2004 - பூர்ஜ் துபாய் கட்டிட அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.


**பிறப்புக்கள்**

- 1866 - எச். ஜி. வெல்ஸ், ஆங்கில எழுத்தாளர், (இ. 1946)
- 1909 - குவாமே நிக்ரூமா, கானா பிரதமர் (இ. 1972)
- 1954 - சின்சோ அபே ஜப்பானிய அரசியல்வாதி
- 1957 - கெவின் ரட், ஆஸ்திரேலியாவின் 26வது பிரதமர்
- 1963 - கேட்லி அம்ப்ரோஸ், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் பந்தாளர்

**இறப்புகள்**

- 1971 - பெர்னார்டோ ஹுசே, நோபல் பரிசு பெற்றவர் (பி. 1887)
- 1989- ராஜினி திரணகம, இலங்கையின் மனித உரிமை மற்றும் பெண் உரிமை செயற்பாட்டாளர் (1954)
- 2007 - விஜயன், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 2008 - டி. பி. விஜயதுங்க, இலங்கையின் 4ஆவது ஜனாதிபதி (பி. 1922)

நன்கு வளர்ந்த ஆசிய யானைத்தந்தத்தின் எடை, சுமார் 39 கிலோ கிராம் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

# 17.09.2014-15.10.2014



## சிம்மம்

**மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்**

**மற்றவர்களால் முடிக்க முடியாத காரியத்தை எளிதில் முடித்துக் காட்டும் சிம்ம இராசி நேயர்களே!**
**வருமானம் திருப்தி தரும் நேரம்!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய ந்து பார்க்கும் பொழுது ராசிநாதன் சூரியுன் தனாதிபதி புதனுடன் இணைந்து சஞ்சரிப்ப தால் பொருளாதார நிலை மேலோங்கும். திட்டமிட்ட காரியத்தை திட்டமிட்டபடியே செய்து முடிப்பீர்கள். வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும். வெளிவட்டாரப் பழக்க வழக்கம் விரிவடையும். எதிரிகள்கூட உங்கள் முன் னேற்றம் கண்டு வியப்படைவார்கள்.

உங்கள் ராசியிலேயே தொழில் ஸ்தானா திபதி சுக்ரன் சஞ்சரிக்கிறார். அவர் சகாய ஸ்தானத்திற்கும் அதிபதியாக இருப்பதால் புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடருவீர்கள். உதிரி வருமானங்கள் பெருகும். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசியவர்கள் உங்களை விட்டு விலகுவர். தெள்ளத்தெளிவாக முடிவெடுத்து திறமை மிக்கவர்களின் ஒத் துழைப்போடு தொழில் முன்னேற்றம் காண் பீர்கள்.

செவ்வாய் பலம் நன்றாக இருப்பதால் செயற் பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள். உடல் நலம் சிறப்பாக அமையும். இதுவரை பார்த்த வைத் தியங்களால் பலன் இல்லையே என்று கவலைப பட்டவர்கள் இப்பொழுது சாதாரண வைத்தியத் திலேயே உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணிபுரியத் தொடங்குவர். சகோதர ஒற்றுமை பலப்படும். அரசுவழி அனுகூலங்களை எதிர் பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு அது கிடைப் பதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

பெற்றோர் வழி ஆதரவோடு பிரச்சினைகள் பலவற்றைத் தீர்த்துக் கொள்வீர்கள். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்பு களும், பதவிகளும் வந்து சேரும். துணிந்த வனுக்கு துக்கமில்லை என்ற பழமொழிக்கு ஏற்ப துணிந்து சில காரியங்களைச் செய்ய முன்வருவீர்கள். அதில் வெற்றி கண்டு உற் றார், உறவினர்களாலும், மற்ற மனிதர்களா லும் பாராட்டப்படுவீர்கள்.

என்ன இருந்தாலும் மாதத்தொடக்கத்திலிரு ந்தே 2இல் ராகுவும், 8இல் கேதுவும் சஞ்சரிக் கிறார்கள் அல்லவா? எனவே, சர்ப்ப கிரக ஆதிக்கம் மேலோங்கி இருப்பதால் ஒரு சில சமயங்களில் சந்தோஷத்திற்கு மத்தியில் சங்க டங்களையும் சந்திக்க நேரிடும். எனவே சக்தி வழிபாட்டை நவராத்திரியில் மேற்கொள்ளுங் கள்.

**சுக்ரன் நீச்சம் பெறும் நேரம்!**

செப்டம்பர் 26ஆம் திகதி சுக்ரன் நீச்சம் பெறப்போகிறார். 3, 10 இறகு அதிபதி நீச்சம் பெறு வது அவ்வளவு நல்லதல்ல. தொழிலில் பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் மீண்டும் உங் களிடமே வந்து சேரலாம். நண்பர்களால் ஏமா ற்றமடைய நேரிடும். பங்குதாரர்களிடம் கூடு தல் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. ஒருசிலருக்கு, உடன்பிறப்புகளுக்காக ஒரு பெரும் தொகையைச் செலவிடும் சூழ்நிலை யும், கடன் சுமையும் ஏற்படலாம்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**


அக்டோபர் 13ஆம் திகதி 4, 9 இற்கு அதிபதியான செவ்வாய் தனுசு ராசியில் சஞ்ச ரிக்கப் போகிறார். இதன் விளைவாக பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்குவரும். புதிய வாய்ப்புகள் வந்து சேரும். பிள்ளை களின் உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். வாங்கிய சொத்தை விற்று விட்டு புதிய சொத்துக்கள் வாங்கலாமா? என்ற எண்ணம் மேலோங்கும். தொழிலில் வருமா னம் இருமடங்காக உயரும். பிள்ளைகளா லும் உதிரி வருமானங்கள் பெருகும். வாகன யோகம் உண்டு. புதிய வாகனங்கள் வாங்கு வதில் ஆர்வம் காட்டுவீர்கள். இம்மாதம் பெண் தெய்வ வழிபாடு பெருமை சேர்க்கும். குறிப்பாக விஜயதசமியன்று வெற்றி பெற்ற சக்தியை வழிபாடு செய்வது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் பண வரவு திருப்தி தரும் மாத மாகவே அமைகிறது. எந்தக் காரியத்தை யும் எடுத்தோம், முடித்தோம் என்று செய்து முடிப்பீர் கள். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். கணவன்-மனைவிக்குள் பாசமும், நேசமும் கூடும். உல்லாசப் பயணங்களால் மகிழ்ச்சி காண்பீர்கள். நீண்ட நாளைய ஆசை நிறை வேறும். மருத்துவச் செலவுகள் குறையும். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். குழந் தைகளுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்கும். புதனின் வக்ர காலத்தில் உறவினர் பகை ஏற் படாமல் பார்த்துக்கொள்வது நல்லது. செவ்வாய் தோறும் முருகப் பெருமான் வழிபாட்டையும், அம்பிகை வழிபாட்டையும் மேற்கொள்வது நல்லது.

## வருமானத்தில் திருப்தி அடையும் நேரம் இது!

## சிவல்புரி சிங்காரம்



## கன்னி

**உத்தரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

**கனிவாகப் பேசிக் காரியங்களைச் சாதிப்பதில் வல்லவர்களாக விளங்கும் கன்னி இராசி நேயர்களே!**
**இடமாற்றத்தால் இனிய மாற்றம் ஏற்படும் நேரம்!**

புரட்டாசி மாதக் கிரக நிலைகளை ஆராய் ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதனான புதன் உச்சம் பெற்று விளங்குவதால் உன்னத நிலையை உருவாக்குமென்று சொல்லலாம். ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணி யாக இருந்து போற்றும்படியான காரியங்களை முடித்துக் கொடுப்பர்.

வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். விரும் பிய காரியங்களை விரும்பிய நேரத்தில் செய்து முடிப்பீர்கள். புத ஆதித்ய யோகம் இருப்பதால் கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். திடீர் இடமாற்றம், ஊர்மாற்றம், வீடு மாற்றங்கள் ஒருசிலருக்கு வந்து சேரலாம். உத்தியோக மாற்றங்களை எதிர்பார்த்து காத்திருப்பவர்களு க்கு உன்னதமான மாற்றம் வந்து சேரும் நேரமிது.

7 இறகு அதிபதி குரு பதினொன்றில் உச்சம் பெற்றிருக்கும் பொழுது வெளிநாட்டு யோகம்கூட ஒருசிலருக்கு ஏற்படும். நண்பர் கள் அங்கிருந்து அழைப்பு விடுப்பர். நாடு மாற் றச் சிந்தனைகள் மேலோங்கும். அரசியல்வாதி களால் அனுகூலம் கிடைக்கும். உச்சம் பெற்ற குருவின் பார்வை சகாய ஸ்தானத்தில் பதிவ தால் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். துணையாக இருந்து தொழிலுக்கு உறுதுணை புரிய உடன்பிறப்புகள் ஒத்து வருவர்.

சுக்ரன் விரய ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டு வரும் வாய்ப்புக் கிட்டும். கல்யாணப் பேச்சு வார்த்தை கள் கைகூடலாம். பெண் குழந்தைகளின் சடங்கு நிகழ்ச்சிகள், பெற்றோர்களின் பிறந்த நாள் நிகழ்ச்சிகளைக் கொண்டாடி மகிழ வாய்ப்பு கிட்டும்.

ஏழரைச் சனியின் ஆதிக்கம் இன்னும் இருப்பதால் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். மேலும் சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்தால் நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும். பொதுவாக இம்மாதம் நவராத்திரி விழா நடைபெறுவதால் ஒன்பது நாட்களும் அம்பிகை வழிபாட்டில் கலந்து கொள்ளுங்கள். துர்க்கை யையும், பிறகு இலக்குமியையும் அதன்பிறகு சரஸ்வதியையும் தொடர்ந்து மூன்று நாட்கள் வீதம் வழிபட்டு விஜய தசமியன்று வெற்றி பெற்ற அம்பிகைக்கு அர்ச்சனைகள் செய்து வந்தால் வெற்றி வாய்ப்புகளும் வீடு தேடி வந்து சேரும்.

**நீச்ச சுக்ரனின் சஞ்சாரம்!**

செப்டம்பர் 26ஆம் திகதி கன்னி ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். அந்த வீடு சுக்ரனுக்கு நீச்ச வீடாகும். நீச்சம் பெற்ற சுக்ரன் உச்சம் பெற்ற புதனோடு இணைந்து நீச்ச பங்க ராஜ யோகத்தை உருவாக்குவதால், உங்க ளைப் பொறுத்தவரை எந்தக் கவலையும் இல்லை. இக்காலம் உங்களுக்கு ஓர் இனிய காலமாகும். பாக்கிகள் வசூலாகிப் பரவசப்படுத் தும். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடி விற்கு வரும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு. வசதி வாய்ப்புகள் பெருகும். இல்லத் திற்கு தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**தனுசு செவ்வாயின் சஞ்சாரம்!**

அக்டோபர் 13ஆம் திகதி தனுசு ராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இது அவ் வளவு நல்லதல்ல. அஷ்டமாதிபதி 4இல் சஞ் சரிக்கும் பொழுது இழப்புகளையும், விரயாங் களையும் ஒரு சிலர் சந்திக்க நேரிடும். வாங்கிய சொத்தை விற்பதில் தாமதம் ஏற்படலாம். விற்பனையான சொத்துக்களில் வரவேண்டிய பாக்கிகள் வராமல் தாமதம் வரும். உடன்பிறப்பு களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேர மிது. துணிவும், தன்னம்பிக்கையும் குறை யாமல் பார்த்துக் கொள்வது நல்லது. இம்மாதம் சனிக்கிழமை தோறும் அனுமன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சஞ்சலங்கள் தீரும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

ராசிநாதன் பலம் பெற்றிருக்கும் இம்மாதத் தில் உடல்நலம் சீராகும். உள்ளத்தில் உற் சாகம் குடிகொள்ளும். கடன் சுமை குறைந்து, கவலைகள் தீரும். தடம் புரண்டு பேசியவர் கள் தானாக வந்திணைவர். மாதத்தின் மையப்பகுதியில் மங்கல நிகழ்வுகள் நடை பெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. சோதனைக் காலம் முடிந்து சாதனை நடத்தும் விதத்தில் சனி சஞ்சரிக்கின்றார். விலகிப் போகும் சனியை இப்பொழுதிலிருந்தே வழிபாடு செய்யுங்கள். கணவன்- மனைவிக் குள் ஒற்றுமை பலப்படும். விலகிச் சென்றவர் கள் விரும்பி வந்து சேருவர். குழந்தைகளால் வருமானம் கிட்டும். நவராத்திரி வழிபாடு நலம் சேர்க்கும்.

(தொடரும்)

## இடமாற்றத்தால் இனிய மாற்றம் ஏற்படும் நேரம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய உச்சநீதிமன்றம் காப்பாற்றும் மனித உரிமை!

இந்திய சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று உச்சநீதி மன்ற நீதிபதி ஆர்.எம்.லோதா தலைமையிலான பெஞ்ச் உத்தரவு பிறப்பித திருப்பது மனித உரிமை ஆர்வலர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. இந்தியாவில் 1,382 சிறைச்சாலைகள் இருக்கின்றன. அவற்றுள் மத்திய சிறைச்சாலைகள்



123.

மற்ற சிறைச்சாலைகளில் மாவட்ட அளவிலான சிறைசசாலைகள், கிளை சிறைச்சாலைகள், பெண்கள் சிறைச்சாலைகள், சிறுவர் சிறைச்சாலைகள் என்று பலவேறு வகையான சிறைச்சாலைகள் உள்ளன. இவற்றில் ஒன்று தான் டெல்லியில் உள்ள திகார் சிறைச்சாலை. முக்கிய அரசியல் கைதிகள் இந்த சிறைச் சாலைகளில் இருந்தது உண்டு.

இந்திய சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கக்கூடிய கைதிகளின் எண்ணிக்கை சுமார் 3.23 லட்சம் பேரதான். ஆனால் இப்போது இந்தியாவில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளிலும் 3.81 லட்சம் கைதிகள் இருப்பதாக தேசிய குற்ற ஆவண காப்பகம் வெளியிட்டுள்ள ஆண்டு அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக இந்த 3.81 லட்சம் கைதிகளில் 2.54 லட்சம் கைதிகள் அனைவரும் விசாரணை கைதிகள் என்ற விவரமும் வெளியிடபபட்டுள்ளது. சிறைச சாலைக்குள் மூன்று வகை விசாரணை கைதிகள் இருக்கிறார்கள். ஜாமினில் வெளிவர முடியாத குற்றங்களைச் செய்து நீதிமன்றத்தால் ஜாமின் மறுக்கப்பட்டவர்கள் ஒரு வகை.

ஜாமினில் வெளிவரமுடியாத குற்றத்தைப் புரிந்து கைதுசெய்யப்பட்டு, ஜாமின் கிடைத்தும் நீதிமன்றம் விதித்த ஜாமின் தொகையையோ அல்லது உத்தரவாதத் தையோ (Surety) நிறைவேற்ற முடியாதவர்கள் இரண்டாவது வகை. ஜாமினில் வெளிவரும் குற்றங்களைப் புரிந்திருந்தாலும் ஜாமின் தொகை கட்ட முடியாததால் ஜாமினில் வரமறுத்து சிறைச்சாலைகளில் இருக்கும் கைதிகள் மூன்றாவது வகை. இப்படி சிறைச்சாலைகளுக்குள் இருக்கும் கைதிகளின் மனித உரிமை பற்றி அக்கறை காட்டியுள்ள உச்சநீதிமன்றம், அவர்களை விடுதலை செய்ய சில விதிமுறைகளை வகுத்துக்கொடுத்து உத்தரவைப் பிறப்பித்திருக்கிறது.

பொதுவாக விசாரணைக் கைதிகளின் பிரச்சினை இந்தியாவில் 1973 வாக்கில் ஒரு தனிக்குழுவே வைத்து விவாதிக்கப்பட்டது. "இந்திய சிறைச்சாலைகள் ஏன் கைதிகள் நிரம்பி வழியும் இடமாக இருக்கிறது" என்பது பற்றி அப்படியொரு ஆய்வு நடந்தது. பிறகு 1979 இல் முன்னாள் உச்சநீதிமன்ற நீதிபதி எச்.ஆர். கன்னா என்பவர் இநதிய சடடக்க மிஷனின் தலைவராக இருந்த போது சிறைகளில் இருக்கும் "வசாரணைக் கைதிகளின் நிலைமை" குறித்து ஆய்வு மேற்கொண்டு அது பற்றி விரிவான பரிந்துரைகளை அப போது சட்ட அமைச்சராக இருந்த சாந்தி பூஷணிடம் கொடுத்தது. (இவர் இந்தியாவைக் கலக்கும் பிரபல 2ஜி ஊழல், நிலக்கரிப்பேர ஊழல், சி.பி.ஐ. டைரக்டர் மீது புகார் என்று சுப்ரீம் கோர்ட்டில் மனுக்களைத் தாக்கல் செய்து வரும் பிரசாந்த் பூஷனின் தந்தையாவார்) அதில் "வழக்குகளை நான்கே மாதத்தில் விசாரித்து முடிக்க வேணடும்" என்பது ஒரு முக்கியப் பரிந்துரை.

வழக்குகளை விரைந்து விசாரித்து முடித்து விட்டால், விசாரணைக் கைதிகள் பெரும் அளவில் சிறைகளில் இருக்க மாட்டார்கள் என்று நீதியரசர் கன்னா கருதினார்.

இதன்பிறகு 1996 வாக்கில் "காமன்காஸ்" வழக்கு ஒன்று சுபரீம் கோர்ட்டில் வந்தது. அவ்வழககில் உச்சநீதிமன்ற நீதிபதிகள் வசாரணைக் கைதிகள் விடுதலை செய்ய 9 கட்டளைகளைப் பிறப்பித்தார்கள். அவர்கள் செய்த குற்றத்திற்கு தகுந தாற்போல் இந்திய தண்டனைச் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ள தண்டனை அடிப்படையில் அந்த விடுதலை இருந்தது. ஆனாலும் விசாரணைக் கைதிகள் சிறைச்சாலைகளில் குவிந்து கிடப்பதை குறைக்க முடியவில்லை. இதனடிப்படையில் 1999 வாக்கில் தேசிய மனித உரிமைகள் ஆணையம் அனைத்து மாநில உயர்நீதிமன்றங்களுக்கும் விசாரணை கைதிகள் விடுதலை பற்றி விரிவாக ஒரு கடிதமே எழுதியது. ஆனாலும் நிலைமையில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏதுமில்லை.

இந்நிலையில் 2000ஆம் வாக்கில் இந்திய சுப்ரீம் கோர்ட் அனைத்து மாநிலங்களுக்கும் வேறு மாதிரி ஒரு உத்தரவைப் போட்டது. தங்கள் மாநில சிறைச்சாலைகளில் இருக்கும் விசாரணைக் கைதிகளின் எண்ணிக்கையை சுப்ரீம் கோர்ட்டிற்கு தெரிவிக்க வேண்டும் என்று கட்டளை பிறபபித்தது. அதில் தகவல் கொடுக்காத மாநிலங்களுக்கு சுப்ரீம் கோர்ட் அபராதமே விதித்து மனித உரிமைகள் விஷயத்தில் கடுமையாக நடந்து கொண்டது.

இது போன்ற காலகட்டத்தில் 1973 ஆம் வருடத்தில் இந்திய குற்ற விசாரணை நடைமுறைசசட்டத் திருத்த 2005ஆம் ஆண்டு ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டது. குற்ற வழக்குகளை விசாரிப்பது, குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு ஜாமின் வழங்குவது, வழக்கில் தீர்ப்பளிப்பது உள்ளிட்ட பல்வேறு குற்ற வழக்கு வசாரணை நடைமுறை இந்த சட்டத்தின் படிதான் இந்திய நீதிமன்றங்களில் நடைபெறுகிறது. ஜாமின் பெறும் அத்தியாசத்தில் இந்த திருததத்தின் மூலம் புதிய பிரிவு ஒன்றை ஏற்படுத்தினார்கள். அப்பிரிவு 436A.

இந்தப் பிரிவு என்ன சொல்கிறது?

குற்றவழக்கில் கைது செயயப்பட்டு சிறைச்சாலையில் இருக்கும் விசாரணை கைதி அந்த குறறத்திற்கான சிறைத்தணடனையில் பாதி வருடஙகளை கழித்து விட்டால், அவரை சொந்த ஜாமினில் விடுதலை செய்யலாம் என்பது தான் இந்த பிரிவின் முக்கிய அமசம். மனித உரிமைகளை மதிக்கும் மகத்தான பிரிவு இந்திய குற்றவியல் நடைமுறைச்சட்டத்திலேயே சேர்க்கப்பட்டது. அதாவது ஏழுவருடங்கள் சிறைத்தணடனை கிடைக்கும் குற்றத்தைப் புரிந்து விட்டு, கைது செய்யப்பட்டு, ஜாமின கிடைக்காமல், விசாரணைக் கைதியாக சிறையில் இருக்கும் ஒருவர் மூனறரை வருடங்கள் சிறையில் கழித்து விட்டால் அவரை ஜாமினில் விடுதலை செய்யலாம்.

சிறைச்சாலை இருக்கும் மாவட்ட பொலீஸ் அதிகாரியும், மாவட்ட நீதிபதியும் சம்பந்தப்பட்ட சிறைச் சாலைக்குச் சென்று இது போன்ற உத்தரவைப் பிறப்பிக்கலாம் என்று இருக்கிறது. இந்த குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டததில் உள்ள 436A பிரிவை ஞாபகப்படுத்தி, விசாரணைக் கைதிகளை விடுதலை செய்யும் உத்தரவை பிறபபித்துள்ளது உச்சநீதிமன்றம்.

இந்தப்பிரிவிலேயே இப்படி விடுதலை செய்யப்படுவோருக்கு இனனொரு பாதுகாப்பும் கொடுக்கப்பட்டுள்ளது. விடுதலை செய்யப்பட்ட பிறகு அவரை பொலீஸ் விசாரணைக்கு அழைக்கக்கூடாது என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் விசாரணைக் கைதி ஜாமினில் விடுவிக்க மட்டுமே சலுகை.

அந்த கிரிமினல் வழக்கு ரத்து செய்யப்படமாட்டாது. இதை விட முக்கியமாக விசாரணைக் கைதி வேண்டுமென்றே தன் வழக்கை இழுத்தடித்து அதன் காரணமாக அவர் சிறையில் இருந்திருக்க நேர்ந்தால், அந்த இழுக்கடிக்கப்பட்ட காலத்தை பாதித்தண்டனை அனுபவித்த காலத்தில் கணக்கிடக் கூடாது என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த பிரிவின் மூலம் "மனித உரிமைகளை" மதிக்க கைதி விடுதலை. விடுதலை செய்யப்பட்ட பிறகு பொலீஸ் தொந்தரவு இல்லாமல் இருக்க, பாதுகாப்பு அதே நேரத்தில் வழக்கை குற்றம் சாட்டபபடவோ "இழுத்தடிபபதை" தடுத்து, வழக்குகள் விரைந்து முடிப்பதற்கான சூழ்நிலை என்று மூன்று முக்கிய அம்சங்கள் நிலை நாட்டப்பட்டுள்ளது. இந்தப்பிரிவின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள சுப்ரீம் கோர்ட் உத்தரவால் இந்தியா முழுவதிலும் உள்ள அனைத்து மாநிலங்களிலும் விசாரணைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டுக் கொணடிருக்கிறார்கள். ஒக்டோபர் மாதத்தில் எவ்வளவு பேர் விடுதலையானார்கள் என்பது பற்றிய அறிக்கையை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் சுப்ரீம் கோர்ட் உத்தரவிட்டுள்ளது.

இந்திய சுப்ரீம் கோர்ட்டில் ஒவ்வொரு தலைமை நீதிபதிகளும் சாதாரண மனிதனின் உரிமைகளைக் காப்பாற்ற அரிய தீர்ப்புகளை வழங்கியிருக்கிறார்கள். சமீபகாலமாக மனித உரிமைகள், தனி மனித சுதந்திரம், பேச்சுரிமை, ஊழல் வழக்குகள் போன்றவற்றில் உச்சநீதி மனறம் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்புகளை வழங்கி வருகிறது. தலைமை நீதிபதியாக இருந்த எஸ். கே. கபாடியா மத்திய ஊழல் கணகாணிப்பு ஆணையகததின் தலைவர் நியமனமே செலலாது என்று தீர்பபுக் கூறினார்.

நீதிமன்றத்தின் ஊழல் ஒழிப்புப் போராட்டத்தில் அது ஒரு முக்கியத் தீர்ப்பு. தலைமை நீதிபதியாக பதவியேற்ற தமிழகத்தைச் சேர்ந்த சதாசிவம 15 பேரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றி அதிரடித் தீர்ப்பை வழங்கினார். "சத்ருகன் சவுகான்" என்பவரது வழக்கில் தூக்குத் தண்டனை கைதிகளுக்கு உள்ள உரிமைகளை விரிவாகப் பட்டியலிட்டு 12 கட்டளைகளை பிறப்பித்தார். இது மனித உரிமைகள் மற்றும் வாழும் உரிமை போன்றவறறில் வழஙகப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பு.

தூக்குத்தணடனை விவகாரததில் புதியதொரு அத்தியாயத்தை துவக்கி வைக்க இந்த மனித நேயத் தீர்ப்பு உதவியது. அதன் விளைவாகத்தான் ராஜீவ் வழக்கில் தண்டிக்கப்பட்டவர்களின தூக்குத்தண்டனையும் ஆயுள் தண்டனையாக குறைககப்பட்டது.

இப்போது உச்சநீதிமன்ற நீதிபதியாக இருக்கும் ஆர்.எம்.லோதா வருகின்ற செப்டெம்பர் 27ஆம் திகதி ஓய்வு பெறுகிறார். அவர் அளித்த இந்த "விசாரணைக் கைதகள்" விடுதலை பற்றிய உத்தரவு மனித உரிமைகளைக் காப்பாறறும் நீதிமன்றங்களின் முயற்சியில் மேலும் ஒரு மைல்கல்! இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் நீதித்துறை இப்படி மனித உரிமைகளின் பக்கம் ஸ்திர மிக்க தூண் போல் நிற்பது மற்ற நாடுகளுக்கு ஒரு வழி காட்டி!

*-எம்.காசிநாதன்-*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசு அவமதிக்கிறது

## பாண்டியன் கண்டனம்

### இலங்கைக்கு வருகை தந்துள்ள பா.ஜ.க. நிர்வாகிகளை மீள அழைக்கவும் கோரிக்கை

இலங்கையில் நடைபெறும் ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டில் பா.ஜ.க. நிர்வாகிகள் பங்கேற்பதற்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலர் தா.பாண்டியன் கண்டனம் தெரிவித்தார்.

ஈரோட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் 11 ஆவது மாநில மாநாடு நிறைவு விழாவில் பங்கேற்ற அவர், செய்தியாளர்களுக்கு அளித்த செவ்வியிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் இன அழிப்புக் கொள்கையை அங்குள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும், ஆட்சியாளர்களும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றனர்.

இலங்கையில் உள்ள தமிழர்களுக்கு முழு அரசியல் உரிமை, விடுதலை கிடைக்க வேண்டும் என்பது தான் தாய் தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள், பொது மக்களின் எண்ணம். அதற்காக தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகிறோம்.

ஆனால், தமிழர்களின் உணர்வுகளை மத்தியில் ஏற்கனவே ஆண்ட காங்கிரஸ் அரசும், இப்போதுள்ள மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசும் தொடர்ந்து அவமதித்து வருகின்றன.

இலங்கை நட்பு நாடு, அந்த நாட்டின் உள் விவகாரத்தில் இந்தியா தலையிட முடியாது



என தனது பொறுப்பை மத்திய அரசு தட்டிக் கழித்து வருகிறது.

இலங்கைக்கு ஏற்கனவே சென்ற மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சுஷ்மா, சுவராஜ் இலங்கை அரசுக்கு பாராட்டுச் சான்றிதழ் அளித்து வந்தார்.

இன அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட இலங்கை அரசு மீது ஐ.நா. மேற்பார்வையில் விசாரணை நடத்த அனைத்து நாடுகளும் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இந்த விசாரணைக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க மறுக்கிறது.

இந்த நிலையில், இலங்கை தலைநகர் கொழும்பில் ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டை இலங்கை அரசு நடத்துகிறது. இதில், பங்கேற்க இந்தியாவில் இருந்து தமிழக பா.ஜ.க. பொறுப்பாளர் முரளிதர் ராவ் உட்பட 2 நிர்வாகிகள் கொழும்புக்கு சென்றிருப்பது தமிழர்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் செயலாகும். இது கண்டனத்துக்குரியது.

இலங்கைக்கு அனுப்பிய தங்களது பிரதிநிதிகளை பா.ஜ.க. திரும்பப்பெற வேண்டும். சர்வதேச அழுத்தத்தில் இருந்து தப்பிக்க முயற்சி செய்யும் இலங்கையின் இராஜதந்திர நடவடிக்கைக்கு, மத்திய அரசும், பா.ஜ.கவும் துணைபோகக் கூடாது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வண்ணாத்துமுல்ல வீடு இடிப்பு வழக்கு நாளையதினம் விசாரணைக்கு வருகிறது

பொரளை, வண்ணாத்துமுல்ல பகுதியில் உள்ள 34 வட்ட வீடுகளை நகர அபிவிருத்தி சபையினர் உடைத்தமை தொடர்பிலான வழக்கு விசாரணையை அவசர விசாரணையாக கருதி முன்னெடுக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

தம்மை குறித்த இடத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு எதிராக 35 வட்ட மக்கள் ஏற்கனவே வழக்கு ஒன்றை தாக்கல் செய்திருந்தனர். அந்த வழக்கு தற்போதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

இந் நிலையில் நேற்று முன்தினம் அங்கு சென்ற நகர அபிவிருத்தி சபையின் திட்ட பணிப்பாளர் பிரிகேடியர் சமரசிங்க உள்ளிட்டோர் மக்களின் குடியிருப்புகளை தகர்த்துள்ளனர்.

இதனை ஆட்சேபித்து குறித்த மக்களால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டை நேற்று ஆராய்ந்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அவசரம் எனக்கருதி இந்த மனுவை நாளை திங்கட்கிழமை விசாரணைக்கு எடுக்க தீர்மானித்துள்ளது.

இதன்போது வழக்காளிகளுக்கு ஆதரவாக மாற்றுக்கொள்கை நிறுவனம் செயற்படுகிறது.

இந்தநிலையில் பொது மகன் ஒருவருக்கு தமது சொந்த வீட்டைக்காட்டிலும் அரசாங்கம் தரும் மாடிவீடோ அல்லது குறைந்த நட்டஈட்டு தொகையோ பெரியதல்ல என்று அந்த நிறுவனம் தமது மனுவில் குறிப்பிட்டுள்ளது. (இ)

## தேர்தல் முடிபு அரசிற்கு மகிழ்ச்சியளிக்காது

**அத்துரலிய ரத்ன தேரர்**

அரசாங்கம் மகிழ்ச்சியடையக் கூடிய தேர்தல் முடிவுகள் ஊவாவில் கிடைக்காது என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தமது கட்சியின் கொள்கை குறித்து சரியாக செவிகொடுத்து அறிந்து கொள்ளவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்திடம் ஜாதிக ஹெல உறுமய முன்வைத்த யோசனைகள் தொடர்பில் எந்த முனைப்புகளையும் காணமுடியவில்லை.

தேர்தல் பிரசாரங்களில் இருந்து நாங்கள் ஒதுங்கியிருந்த போதிலும் அரசாங்கத்தின் செயற்பாடுகளில் இருந்து ஒதுங்க போவதில்லை.

தேவையான விடயங்கள் பற்றி நாம் பேசுவோம். அதற்காக குரல் கொடுப்போம்.

ஊவா தேர்தல் முடிவுகள் பற்றி இப்போதே எம்மால் எதிர்வுகூறமுடியாது. அது ரகசியமான தேர்தல். மக்கள் தமது பொறுப்பை நிறைவேற்றுவார்கள் எனவும் அத்துரலிய ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார். (இ)

## அதிக கடன் சுமையினை நாட்டின் மீது சுமத்தியவர்களுக்கு எதிராக நடவடிக்கை

**லக்ஸ்மன் கிரியெல்ல**

(கொழும்பு)

நாட்டை கடன் சுமையில் சிக்க வைத்தவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டை கடன் சுமையில் சிக்க வைத்தவர்களுக்கு எதிராக எடுக்கப்படக் கூடிய சட்ட நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படும்.

நாட்டை கடனில் சிக்க வைத்து தோல்வியடையும் தலைவர்கள் நாட்டுக்கு ஏற்படுத்திய அனர்த்தம் தொடர்பில் வழக்குத் தொடர வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்கம் பாரியளவில் வெளிநாடுகளிடமிருந்து கடன் பெற்றுக்கொண்டுள்ளது.

இதனால் பெருந்தொகைப் பணத்தை வட்டியாக செலுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் மற்றும் வட்டியை செலுத்த அரசாங்கம் மக்கள் மீது வரிச் சுமையை திணிக்கின்றது.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களில் மக்களுக்கு நன்மை ஏற்படவில்லை என அமைச்சர் சம்பிக்க ரணவக்கவே ஒப்புக் கொண்டுள்ளார்.

மெய்யான அபிவிருத்தி ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் மேற்கொள்ளப்பட்டது என லக்ஸ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## வாரம் ஒரு தகவல்

### இளமை இதோ!

"தாத்தா உங்களுக்கு என்ன வேண்டும்?"

"இளமை திரும்ப வேண்டும்! அதற்கு ஏதாவது மருந்து உங்களது கடையில் இருக்கிறதா?"

"அதற்கு டெக்சாஸ் பல்கலைக்கழகத்தில் ஒரு மருந்து கண்டு பிடித்திருக் கிறார்களாம் தாத்தா" அப்படியா? அது என்ன மருந்து?

"கற்றாழையிலிருந்து தான் அந்த மருந்தை உருவாக்கியிருக் கிறார்கள்"

"ஏற்கனவே காய்ச்சலைக் கட்டுப்படுத்த கற்றாழைச்சாறு கொடுப்பது வழக்கம்"

" ஆமாம் தாத்தா. அதேபோல் அல்சரையும் குணப்படுத்தும். கற்றாழையைத் தொடர்ந்து சாப்பிடுபவர்களுக்கு இரத்த அழுத்தம் வருவதில்லையாம். கொலஸ்ரோலும் இருப்பதில்லையாம். அதனால் இப்பொழுதெல்லாம் கற்றாழை டொனிக்கே கடைகளுக்கு வந்துவிட்டது"

"அதைச் சாப்பிட்டால் நல்லது என்கிறாயா?"

"முதலில் எலிகளுக்கு இதைக் கொடுத்துத்தான் சோதனை செய்து பார்த்தார்களாம். அவற்றுக்கெல்லாம் இளமை தள்ளிப் போகிறது என்பதை கண்டு பிடித்திருக்கிறார்கள்" "அப்படியா!"

"இப்பொழுதெல்லாம் அமெரிக்காவில் கற்றாளை சாலட் கிடைக் கிறதாம்"

" நல்ல செய்தி கூறினாய் தம்பி அது இருக்கட்டும். இப்பொழுது ரெடிமெட்டா உன்னிடம் ஏதாவது மருந்து இருக்கிறதா?"

"இந்த வயதில் இப்படி ஒரு ஆசை தேவையா தாத்தா உங்களுக்கு?"

"இது எனக்கில்லையப்பா. என்னுடைய அப்பாவுக்கு"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டிஷ் மருத்துவக் கம்பனிக்கு சீனா நீதிமன்றம் அதிக அபராதம்

## அதிகாரிகளுக்கும் சிறைத்தண்டனை

(பீஜிங்)

சீன நீதிமன்றம் ஒன்று பிரிட்டிஷ் மருந்துக் கம்பனி ஒன்றுக்கு, முன் னெப்போதும் இல்லாத அளவுக்கு, சுமார் அரை பில்லியன் டொலர் அபராதம் விதித்துள்ளது.

மருத்துவர்களுக்கும் மருத் துவமனை அதிகாரிகளுக்கும் இல ஞ்சம் கொடுத்த குற்றச்சாட்டில் க்ளாஸ்கோஸ்மைத்கிளைன் (Glaxo Smith Kline) நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகள் சிலரும் சிறையில் அடைக்கப்பட்டுள்ள னர்.

ஒருநாள் வழக்கு விசாரணை ஒன்றின் முடிவில், க்ளாஸ்கோஸ் மைத்கிளைன் மருந்துக் கம்பனி யின் முன்னாள் சீன தலைமை அதிகாரி மார்க் ரீய்லி மற்றும் சில அதிகாரிகளுக்கு 2 ஆண்டுகள் முதல் 4 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை அளிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் நடக்கும் தமது வர்த் தக நடவடிக்கைகளில் உள்ள பிரச் சினைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக க்ளாஸ்கோஸ்மைத்கிளைன் நிறு வனம் கூறியுள்ளது.

க்ளாஸ்கோஸ்மைத்கிளைன் தயாரிப்புகளை வாங்குவதை தூண் டுவதற்காக பணமும் சொத்துக் களும் இலஞ்சமாக வழங்க முன் வந் ததாக அந்த நிறுவனத்தின் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது குறிப்பிட த்தக்கது. (இ)




# ஸ்கொட்லாந்து பிரிவினை தோல்வி முதல்வர் அலெக்ஸ் இராஜினாமா



ஸ்கொட்லாந்து முதலமைச்சர் அலெக்ஸ் சால்மண்ட், ஸ்கொட் லாந்து தேசியக் கட்சியின் தலைவர் பதவியிலிருந்தும் முதலமைச்சர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்யவுள்ளதாக அறிவித்துள்ளார்.

அலெக்ஸ் சால்மண்ட் தலை மையில் முன்னெடுக்கப்பட்ட ஸ்கொ ட்லாந்து சுதந்திரக் கோரிக்கை தோல்வியடைந்தது.

"ஒரு தலைவராக எனது காலம் கிட்டத்தட்ட முடிந்துவிட்டது. ஆனால், ஸ்கொட்லாந்தின் சுதந்திரத்துக் கான பிரசாரம் தொடரும், அந்தக் கனவு மரணித்துவிடாது"என்று கூறினார் அலெக்ஸ் சால்மண்ட்.

"ஸ்கொட்லாந்துக்கு சுதந்திரம் கோரிய "யெஸ்"(ஆம்) பிரசாரப் போராட்டத்தை இட்டும் எங்களின் கோரிக்கைக்கு வாக்களித்த 1.6 மில்லியன் வாக்காளர்கள் தொடர் பிலும் நான் பெருமையடைகின் றேன்" என்று எடின்பரோவில் உள்ள தனது அதிகாரபூர்வ இல் லத்தில் வைத்து முதலமைச்சர் சால்மண்ட் செய்தியாளர்களிடம் கூறினார்.

எதிர்வரும் நவம்பரில் நடக்கவு ள்ள ஸ்கொட்லாந்து தேசியக் கட்சி யின் மாநாட்டின்போது கட்சியின் தலைமைப் பதவியில் இருந்தும், அக் கட்சியின் உறுப்பினர்களி டையே நடத்தப்படும் வாக்கெடுப் பைத் தொடர்ந்து புதிய தலைவர் ஒருவர் தெரிவானதும் முதல் அமை ச்சர் பதவியிலிருந்தும் விலகவுள்ள தாக அலெக்ஸ் சால்மண்ட் தெரிவி த்துள்ளார். (இ)

# 4 நிமிடத்தில் ஒருமைல் தூரம் பறக்கும் ஜெட்பேக் கருவி அமெ.கண்டுபிடிப்பு

4 நிமிடத்தில் ஒரு மைல் தூரம் பறக்கும் 'ஜெட் பேக்' கருவி தயாரிக் கப்பட்டுள்ளது.

ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு ரொக்கெட் வேகத்தில் பறந்து செல்லும் ஜெட் பேக் எனும் அதிநவீன கருவியை அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித் துள்ளனர்.

ரோபோ' முறையில் இது வடிவ மைக்கப்பட்டுள்ளது. இதை முது கில் கட்டிக் கொண்டு இயக்கினால் ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு மிக விரைவாக பறந்து



செல்லும். இந்த ஜெட் பேக் கரு வியை அமெரிக்காவின் அரிசோனா மாகாண பல்கலைக்கழக ஆராய்ச் சியாளர்கள் வடிவமைத்துள்ளனர். இவர்களுக்கு இராணுவ ஆராய்ச்சி திட்ட முகவாண்மை நிறுவனமும் உதவி புரிந்துள்ளது.

இந்த ஜெட்பேக் கருவி மூலம் 4 நிமிடத்தில் ஒரு மைல் தூரம் பறக்க முடியும். இதுபோர்க் காலங்களில் இராணுவ வீரர்களுக்கு உதவியாக இருக்கும். அவர்கள் விரும்பும் இடங் களுக்கு மிக விரைவாக பறந்து செல்ல முடியும். (இ)

# இரசாயன ஆயுதங்கள் ஐ.எஸ்.ஐ.எஸ்ஸின் வசம்

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தியதாக வெளியான தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஈராக்கின் துலுயியா (Tuluya) நகரம் கடந்த 2 மாதங்களாக ஐ.எஸ். ஐ.எஸ் தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. இந்த நகரத்தை மீட்பதற்காக அந்நாட்டு இராணுவம் நேற்று முன்தினம் ஐ.எஸ்.ஐ.எஸ உடன் தாக்குதலை நடத்தியுள்ளது.

இந்த மோதலின் போது தீவிரவாதிகள் இரசாயன ஆயுதங்கள் மூல மாக ஈராக் இராணுவத்தைத் தாக்கியதாக உள்நாட்டு ஊடகங்கள் செய்தி களை வெளியிட்டுள்ளன. மேலும் மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் சோடியம் சயனைடு (Sodium Cynide) ரொக்கெட்டுகளைத்தான் தீவிரவாதிகள் ஏவியிருக்கக் கூடும் என கூறப்படுகிறது. (இ)

### நபியை அவமதித்தவருக்கு மரண தண்டனை விதிப்பு

ஈரானில் இஸ்லாமிய மதத்தின் இறைதூதரான நபிகள் நாயகத்தை அவமதித்த நபர் ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஈரானை சேர்ந்த சொஹைல் அரபி (Soheil Arabi age-30) என்ற நபர் சமூக வலைத்தளங்களில் பல கணக்குகளை வைத்துள்ளார்.

இவற்றில் அவர் இஸ்லாமிய இறைதூதரான முகமது நபியை இழிவுபடுத்தும் வசனங்களைக் கொண்ட கட்டுரைகளை வெளியிட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்று முன்தினம் நீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, வழக்கை விசாரித்த நீதிபதி அவர் மீதான குற்றச்சாட்டு க்கு ஆதாரம் இருப்பதாக கருதி மரண தண்டனை விதித்து உத்தர விட்டு ள்ளார். (இ)

# ஈழத்தமிழருக்கும் வாய்ப்பு வழங்குங்கள்

## நாடு கடந்த தமிழீழ அரசு

ஐக்கிய இராச்சியத்திடம் இரு ந்து பிரிந்து செல்வதா? அல்லது ஒன்றுபட்டிருப்பதா? என்பதனை தீர்மானிப்பதற்கு ஸ்கொட்லாந்து மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பே ஈழத்தமிழர் அரசியல் நிலைப் பாட்டின் எதிர்பார்ப்பன்றி, அந்த மக்களின் முடிவுகள் பற்றியதல்ல என நாடு கடந்த தமிழீழ அரசாங் கத்தின் அமைச்சர் சுதன்ராஜ் தெரிவித்துள்ளார்.

வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொரு நிகழ்வாக அமைந்த ஸ்கொட்லாந்து மக்களின் கருத்தறியும் பொதுவாக்கெடுப்பின் முடிவு, ஈழத் தமிழர் அரசியலுக்கு ஏமாற்றமா என கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் பொழுதே இககருத்தினை அமைச்சர் சுதன்ராஜ் தெரிவித்துள்ளார்.

இப் பொதுவாக்கெடுப்பின் முடிவு என்னவாக அமைய வேண்டும் என்பதல்ல எமது எதிர்பார்ப்பு.

அது அந்த மக்கள் எடுக்கின்ற முடிவு. ஆனால் அந்த மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பினைப் போல், ஈழத்தமிழ் மக்கள் தங்க ளின் அரசியல் அபிலாசையினை வெளிப்படுத்துவதற்கான வாய்ப் பினையே ஸ்கொட்லாந்து விவ காரத்தில் நாம் அனைத்துலக சமூகத்திடம் இருந்து எதிர்பார்க் கின்றோம்.

அரசியற் படிமுறையில் ஸ்கொட் லாந்து விவகாரத்தில் வழங்கப்பட்ட அந்த வாய்ப்பினை, ஈழத்தமிழர் விவகாரத்தில் நாமும் எட்டுவதற்கு ரிய செயன்முறையே இங்கு அவ சியமே அன்றி, அதன்முடிவுகள் பற்றியதாக அமையக்கூடாது.

அன்றிலிருந்து இடைவிடாத கொடும் இன அழிப்புக்கு இன்றும் தமிழர் ஆளாகி வருகின்றனர். அவ்வகையான தொடரும் இன அழிப்பிலிருந்து தமிழர் விடுபட வேண்டுமாயின், அவர்களது சுய நிர்ணய உரிமை நிலை நாட்டப் படவேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

தனி நாட்டின் கீழா அல்லது ஒன்றுபட்ட இலங்கையின் கீழா தாம் வாழ விரும்புகிறார்கள் என்ப தனை அவர்கள் பொது வாக் கெடுப்பின் மூலம் நிறுவும் வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண் டும் என நாடுகடந்த தமிழீழ அர சாங்கத்தின் பிரதமர் வி. உருத்திர குமாரன், அத்தனை மேம்பட்ட தேசங்களுக்கும் ஐக்கிய நாடுகள் சபை அங்கத்துவ நாடுகள் நோக் கியும் அறைகூவல் விடுத்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# ஐ.எஸ்.ஐ.எஸ் இலக்கின் மீது பிரான்ஸ் விமானத் தாக்குதல்

ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ் பயங் கரவாதிகளுக்கு எதிராக பிரான்ஸ் நாட்டுப் போர் விமானங்கள் முதல் தாக்குதலை நடத்தியிருப்பதாக ஜனாதிபதி பிரான்ஸ்வா ஒல்லாந் தின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

ஈராக்கின் வட கிழக்குப் பகுதி யில் இருந்த ஐ.எஸ்.ஐ.எஸ் பாசறை ஒன்றின் மீது விமானங்கள் தாக் குலை நடத்தியதாகவும் வரும் நாட் களில் மேலும் பல தாக்குதல்கள் நடத்தப்படும் எனவும் ஜனாதிபதி அலுவலகம் விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஓகஸ்ட் மாத மத்தியில் அமெ ரிக்கா ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தினர் மீது 170க்கும் மேற்பட்ட தடவைகள்



விமானத் தாக்குதல்களை நடத்தியது.

ஈராக் மற்றும் சிரியாவில் ஐ.எஸ். ஐ.எஸ் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் பல நகரங்களும் சிறுநகரங்களும் இருக்கின்றன.

விமானத் தாக்குதல் நடத்தும்படி ஈராக் அரசு கோரியதற்கு தான் ஒப்புக்கொண்டிருப்பதாக ஜனாதிபதி ஒல்லாந்த் நேற்று தெரிவித்திருந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழ மையன்று இந்தத் தாக்குதல் நட த்தப்பட்டிருக்கிறது.

இருந்தபோதும் ஈராக்கில் இரு க்கும் ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கத்தினர் மீது மட்டுமே தாக்குதல் நடத்தப்ப டும் எனவும் சிரியா மீது தாக்குதல் நடத்தப்படாது எனவும் ஒல்லாந்த் தெரிவித்துள்ளார்.

தரைப்படையினரை அங்கு அனுப்பப்போவதில்லை என்றும் ஒல்லாந்த் தெரிவித்துள்ளார்.

ஈராக் மீது பிரான்ஸ் ஏற்கனவே கண்காணிப்பு விமானங்களை அனுப்பி உளவு பார்த்திருந்தது. வடபகுதியிலிருக்கும் குர்திஷ் போராளிகளுக்கு ஆயுதங்களை யும் வழங்கியது.

பிரான்ஸ் நாட்டின் ரபேல் விமானங்கள் இந்தத் தாக்குதலை நடத்தியதாகவும் "இலக்கு சரியாகத் தாக்கப்பட்டு, முழுமையாக அழிக் கப்பட்டதாகவும்" ஜனாதிபதி அலு வலகம் தெரிவித்துள்ளது.

தாக்கப்பட்ட பாசறை சரியாக எந்த இடத்தில் இருந்தது, அதில் என்ன வைக்கப்பட்டிருந்த்து என்ற விபரங்கள் வெளியிடப்படவில்லை.

இருந்தபோதும், ஜுமர் நகர த்தின் மீது நான்கு பிரெஞ்சு விமா னங்கள் தாக்குதலை நடத்தியதாக. வும் பத்துக்கும் மேற்பட்ட பயங் கரவாதிகள் கொல்லப்பட்டதாகவும் ஈராக்கிய இராணுவத்தின் செய்தித் தொடர்பாளர் காசிம் அல் மௌ ஸவி தெரிவித்துள்ளார் என ஏபி செய்தி நிறுவனம் கூறியுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## மீண்டும் நிமிர்வோம்

உடல் நசுங்கி
உயிர் இழந்து
உதிரம் சிந்திய போதும்
உருக்குலையவில்லை
எம் கற்பனைகள்
வாழ்வாங்கு வாழ்வோம் என்று
வந்தோம் இப்பூமிக்கு
வந்தது பேரடி
அதுவே எம்
வாழ்வில் முதலடி
கற்பனைகள் கலைந்து வெறும்
காகிதங்கள் ஆக்கப்பட்டது
எம் வாழ்வு
ஆனபோதும் கலங்கவில்லை
ஏனெனில் நாம் வெறும்
ஆலை மரங்கள் அல்ல
வீழ்ந்து போக
நாணற்புற்கள்
மீண்டும் நிமிர்வோம்

பி.சங்கவி
கரவெட்டி

## பிஞ்சு மனசு

பள்ளி செல்லும் குழந்தையை
பிச்சை ஏந்தும் பாத்திரமாக்கி- அவன்
பிஞ்சு மேனியை வெயில்
பிய்த்து எறிவது கூட தெரியாத
கருணையற்ற பெண்ணே உனக்கு
கண்கள்தான் இல்லையா...?
உன் வயிற்றை நிரப்ப வழி தெரியாமல்
அவன் வாழ்வில் குழி தோண்டுகிறாயே...
ஆறு வயது குழந்தைய்ய கண்ணீர் சிந்த
ஆட்கள் செல்லும் வீதியில் இருத்தி
கருணை உள்ள உறவுகளே பிச்சை போடுங்கள்..:.
என்று அவன் குரல் ஒலித்துக்கூட- உன்
கருணையின்மை உனக்கு புரியவில்லையா...
அவன் கண்களில் தெரியும் ஏக்கம்
அவன் போன்ற சிறார்க்குப்புரியும்...
வீதியால் சென்ற ஒருவன்- அவன் கைகளில்
அரிச்சுவடியை கொடுக்கிறான்...
அதுவரை அழுத குழந்தை...?
அரிச்சுவடியைப் பார்த்து சிரிக்கின்றான்- அவன்
ந்ன்றியுடன் பார்க்கிறான் அந்த பெரியவரை

பா.கௌரீசன்
அல்வாய்

## வலி செய்த வடிவம்

உளி கொண்டு எனை
வலிக்கச் செய்த ஒவ்வொரு கணமும்
வலிகொண்டு துடித்த
வாய்பேசாக் கல் நான்...!
உளி வலி
செய்த இடமெலாம்
வருபவர்களிடம் இன்று
வரலாறு பேசுகின்றன...
வாய்கள் நூறால்
வாய் பிளந்து உலகம்
வியந்து பார்க்கையில்
வலிபெற்ற நாட்கள்
காணாமற் போயின
ஆனாலும் ஒரு வேதனை...
என்னை வடிக்க
சிதைக்கப்பட்ட சிதிலங்கள்
சிதறி எங்கே
கிடக்கின்றனவோ... நானறியேன்...?

அம்மு

## இமயம் தொட...

சூரிய அஸ்தமனமென்பது
முழுவதும் இருளல்ல
ஒருபகுதி இருளாகி
மறுபகுதி ஒளிபெறும்
ஒளிவர இருள் ஒழியும்
இருளை ஒழித்திட
உன்னால் முடியும்
ஏனெனில் நீ சூரியன்
எழு ... சுட்டெரிக்க

மாவை, நா.கஜேந்திரன்

## சுயநல மாளிகை

நடு வீதியில் ஒரு விபத்து
செந்நீர் மேடையிலே
வெந்நீரிலிட்ட புழுவாய்
உயிருக்கு போராடும் ஒரு உயிர்
வாகன ஓட்டமோ ஸ்தம்பிதம்
உந்துருளியுள்ளே
விருந்து புசிக்க
காத்திருக்கும் உதடுகள்
சலித்துக்கொண்டன
உயிருக்கு போராடும் அவ் உடலை
இன்னும் அகற்றவில்லையோ- என
அது தம் உறவில்
ஒன்று என அறியும் வரை
நாம் சுயநலக் கூரையே
வேயத் தொடங்கி
பலகாலம் ஆகிவிட்டதல்லவா?

தமிழ்த்தோழி
இரா.ஜெயறூ



# மௌனத்தின் தேடல்- 221

## இரண்டு முகம்

நெஞ்சில் வஞ்சம்
கபடச் சிரிப்பு
நஞ்சு முகம் இங்கு
நல்லமுகம் அங்கு
படிப்படியாய் தமிழின அழிப்பு
பாருக்கு நல்லவர் போல் நடிப்பு
புரிந்தது உலகம்
உறவைத் தவிர்ப்பு

ம.திருவரசுராசா
வவுனியா

## ஏன் மனிதா?

சிரித்திடும் மனிதா
பரிவில்லா உன் புன்னகையில்
எரிந்திடும் பிறர் கனவுகளை
புரிந்துகொள்
அறிந்துவிடு
நரிமுகம் காட்டும் உன்
உரிக்கப்படாத மறுபக்கத்தை
சரி விட்டு விடு
எல்லோரும் வாழட்டும்

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## வேசக்கரம்

ஒருபுறம் புகை முகம்
மறுபுறம் நகை முகம்
இது என்ன நேசக்கரமா?
அல்லது வேசக்கரமா?

சி.கருணாகரன்
அரியாலை

## பொய்முக மனிதன்

தன்னினத்துக்கோர் முகமும்
மாற்றினத்துக்கின்னோர் முகமும்
எத்தனை காலம் காட்டி
ஏமாற்ற முடியும் உலகை
ஊரறிந்த உண்மைகளை
உலகுக்கு மூடி மறைப்பது
இராசதந்திரமல்ல அவதந்திரம்
பொய்முகத்தை ஒருநாள்
தகர்த்தெறியும் உண்மை முகம்

துரை
தென்மட்டுவில்

## இப்படியும் நட்பு

இதய வீதிகளில்
உன் பெயர்
சிவப்பு எழுத்துக்களில்
பொறிக்கப்பட்டு இருக்கின்றது
நீ நட்பின் துரோகி என்று

இ.தர்சிகா
பண்டத்தரிப்பு

## மட்டுமே...

சிரிப்பு உதட்டில் மட்டும்
பாராட்டு... கரங்களில் மட்டும்
மனிதம்... பேச்சில் மட்டும்
ஆனால் மனம் பூராகவும்
வேசம் மட்டுமே...
பச்சோந்தி வாழ்வில்
மிச்சமாய் இருப்பது- அடங்கா
இச்சைகள் மட்டுமே...

த.மோகனரூபன்
சுழிபுரம்

## உரிமைக்காக

வேடம் மாறுவதில்லை
இருதலை இருமுகம்
இருநாக்கும் கலந்த இரட்டைவேடம்
ஆளப்படுபவர் தமிழர் என்பதால்
ஆள்பவரின் அசல் தோற்றம் இது
புறமுதுகு காட்டாத் தமிழனிடம்
இருமுதுகுடன் அரசியல் நாடகம்
ஒன்றுக்குள் வடகிழக்கு என்றதால்
மன்றுக்குள் பிரித்தே விட்டனர்
உரிமைக்காக எவர் வந்து
எது சொன்னாலும்
வெறுமையே மிஞ்சும்- ஏனெனில்
ஆள் மாறலாம் வேடம் மாறுவதில்லை

உடுவிலூர்
சண்கனக சரவணன்

## மனவருத்தம்

இருமுக அபயக் கண்கள்
வல்லநல்ல வாக்குறுதி வழங்க
வளைந்து நெளிந்த நாக்குகள்
நீண்டு நீண்டு செல்லும்
உடன்படிக்கைகள்...
மாண்டு மாண்டு போவதை
மீண்டும் மீண்டும் பேசவரும்
மேதைகள் இன்னுமேன்
உணரவில்லை?

வீ.வினிஸ்
பண்டத்தரிப்பு

## உள்ளொன்று

முரண்பாடுகளுக்கு...
முன்னுக்குப் பின்னான
முரணான செயல்களே
மூலகாரணமாகின்றது
உள்ளத்திலிருப்பதுதான்
உதட்டிலும் வருமென்பது
இங்கு பொய்யாகின்றது
இங்கிதமாய் இதையேயன்று
வள்ளலார் பெருமகனார்
உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்
என்று கூறிய சீரிய கூற்றும்
கூர்ந்து கவனிக்கத்தக்கது

க.நாகராசா, நுணாவில்

# மௌனத்தின் தேடல் -222



அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுன்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.09.2014 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியல், சினிமா பொழுதுபோக்கு கேள்விகளை சுருக்கமாக பெயர், முகவரி குறிப்பிட்டு அனுப்பி வையுங்கள்.




வியாசர் பதில்கள்
இல. 3, 2 ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

குறுந்தகவல் (SMS)
021 567 1532

Email
vijasarpathil@gmail.com



## உங்களுடைய அபிமான நடிகர் யார்?

**Hi வியா Friend!**

✉ த.மோகனரூபன், சுழிபுரம்

**காய்த்த மரத்திற்கு கல்லெறிதான விழும்.But காய்க்காத மரத்திற்கு கோடரியால் தறிதான் விழும்... இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

✎ தற்காலத்தில் காய்த்து அடிக்கடி கல்லெறி வாங்குவதை விட காய்க்காமல் ஒரேடியாக கீழே விழுவது எவ்வளவோ மேல.

**அன்பின் வியாசர் அவர்களே!**

✉ ம.மணியம், மானிப்பாய்

**தமிழ் திரைப்பட நடிகை த்ரிஷா நடித்த முதல் ஹிந்திப் படம் எது?**

✎ 2010 ஆம் ஆண்டு ஹிந்தியில் Khatta Meetha திரைப் படத்தில் அறிமுகமாகி சிறந்த அறிமுக நாயகிக்கான விருதினைப் பெற்றார். த்ரிஷாவின் முதல் திரைப்படம் ஜோடி 1999 ஆம் ஆண்டு துணை நடிகையாக. சூர்யாவுடன் நாயகியாக மௌனம் பேசியதே 2002 ஆம் ஆண்டு.

**Hi வியாசர்!**

✉ முத்துலிங்கம், கரணவாய்

**வியாசர் அவர்களே! உங்கள் கேள்வி எனும் இன்ப வெள்ளத்தில் மூழ்கவந்த என்னை ஏமாற்றி விடாதீர்கள்?**

✎ இந்தக் கதையெல்லாம் இங்கு விடாதே அப்பனே. இதையெல்லாம் 40 வருடங்களுக்கு முன்பே பார்த்து விட்டேன் நான்.

**வியாசர் அவர்களே!**

✉ க.இந்துசா, மட்டுவில்

**உங்களுடைய அபிமான நடிகர் யார்?**

✎ அபிமானம் என்பது ஒன்றும் இல்லை. ஆனால் மக்களால் அதிகம் விரும்பப்படும் நடிகர்கள் எம்.ஜி.ஆர்., ரஜினி போன்றவர்களை ரொம்பவே பிடிக்கும். ஏனென்றால் உழைப்பால் உயர்ந்த உன்னத மனிதர்கள். மனிதரை மனிதராக மனிதாபிமானத்துடன் பார்ப்பவர்களும். அதனால்தான் இன்றும் இந்த இரண்டு நடிகர்களும் ரசிகர்களின் உயிராய்த் திகழ்கிறார்கள.

**Hi வியா அண்ணா வணக்கம்!**

✉ ந.தமிழ்ப்பியா, பொலிகண்டி

**இன்றைய ஆண்களின் வெளிப்படையற்ற கருத்துக்களுக்கு காரணம் தான் என்ன?**

✎ ஆயிரம் வருடங்களுக்கு முன் ஔவையார் அறஞ் செய்ய விரும்பு... என கூறியிருக்கின்றார் என்றால் அப்போதே அறம செய்ய விரும்பாதவர்கள் இருந்திருக்கிறார்கள் என்று தானே பொருள. வெளிப்படை என்பது அடுத்தவர்கள் சார்ந்தது. இங்கே அடுத்தவர்கள் என்பது பெண்களைக் கூறுவ்தாகும். அப்படியென்றால் அடிப்படையில் ஏதோ பிழை இருக்கிறது.

**Hello அண்ணா!**

✉ ரா.தமிழினி, திருநெல்வேலி

**மகாபாரதபோரில் அதர்மம் செய்த எல்லோருக்கும் தண்டனை கிடைத்தது. ஆனால் குற்றமற்ற அபிமன்யுவுக்கும் தண்டனை கிடைத்தது. அது ஏன் என்று விளக்கமுடியுமா?**

✎ ஆயிரம் நல்லவர்கள் வாழ்வதற்காக ஒரு கெட்டவன் அழிக்கப்படுவதும். ஆயிரம் கெட்டவர்களை அழிக்க ஒரு நல்லவனை இழப்பதும் பாரதத்தின் சொல்லாப் பொருள்.

## தமிழ் திரைப்பட நடிகை த்ரிஷா நடித்த முதல் ஹிந்திப் படம் எது?

**அன்பின் வியாசரே!**

✉ சு.ஜெயரூபன், பருத்தித்துறை

**ஜோதிடத்தை நம்பி அதிலேயே மூழ்கிக் கிடக்கும் மனிதர்களைப் பற்றி தாங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

✎ ஜோதிடம் என்பது மனிதனின் நம்பிக்கை சார்ந்த விடயம் உனக்கு பலகோடி அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பு விழப் போகிறது என ஜோதிடர் கூறியதைக் கேட்டு அதிகமாக சீட்டை வாங்குவது. ஒரு சீட்டைக் கூட வாங்காமல் இருப்பது இரண்டுமே தவறு. ஜோதிடத்திற்கு அப்பால் கொஞ்சம் முயற்சியும் தேவை.

**வணக்கம் வியா!**

✉ க.தங்கலீலா, கரவெட்டி

**கற்பெனப்படுவது சொற்திறன்பாவை இம் முதுமொழி இக்காலப் பெண்களுக்கு பொருந்துமா?**

✎ *கற்பு நிலையென்று சொல்லவந்தார்*
*அஃது இரு கட்சிக்கும பொதுவில் வைப்போம்*

என்று பாரதி சொல்லியிருக்கிறாரே. கற்பு ஆண், பெண் உடல் சார்ந்தல்ல. உளம் சார்ந்தது. தயவு செய்து அதைப் பெண்ணுக்கு மட்டும் திணித்திடாதீர்.

**வணக்கம் வியா!**

✉ வே.வே. அகிலேஸ்வரன், மருதங்கேணி

**இரவுக் கவிதைகளை இளவட்டம் அதிகம் இரசிப்பது உண்மைதானே?**

✎ கிளுகிளுப்பு அதிகம் இருப்பது அப்போதுதானே! நீங்கள் இளவயதினராய் இருந்தால் புரியும்.

# சீனா,ஜப்பானுடனான ஒப்பந்தங்களை அரசு பகிரங்கப்படுத்தியாக வேண்டும்

## ஹெல உறுமய கோரிக்கை



(கொழும்பு)

சீனாவுடனும் ஜப்பானுடனும் அரசாங்கம் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

உடன்படிக்கைகளின் மூலம் எந்தெந்த துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது என்பது பற்றி தெளிவுபடுத்தப்பட வேண்டுமென ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் நிசாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்துள்ளார்.

சீனா, ஜப்பான் தலைவர்கள் இலங்கையில் கைச்சாத்திட்ட உடன்படிக்கைகள் பற்றி கட்சிக்கு தெரியாது. இந்த உடன்படிக்கைகளின் மூலம் நாட்டின் பொருளாதாரத்திற்கு கிடைக்கும் நன்மை என்ன என்பது தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

தொடர்பாடல் துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் ஒருவருக்கு இரண்டு செல்லி டப்பேசிகள் காணப்படுகின்ற நிலையில் தாமரைத் தடாக அரங்கங்கள் எதற்காக அமைக்கப்பட்டன? இதனை விடவும் பாரிய பிரச் சினைகளுக்கு இன்னமும் தீர்வு வழாங்கப்படவில்லை.

நாட்டின் பொருளாதாரக் கொள்கைகள் சுயாதீனமானதாக இருக்க வேண்டும். சீனி, தேங்காய் அமைச்சர்கள் இருக்கின்றார்கள்.

நாட்டின் மொத்த சீனித் தேவையில் 5 வீதம் கூட உற்பத்தி செய்யப்படுவதில்லை என தெரிவித்துள்ளர். சிங்கள ஊடகமொன்றுக்கு அளித்த நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (இ)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532
021 221 7603

After A/L..
75% நேரடி கட்டணக் கழிவு
கணினி ஆங்கில கல்விக்கு
DMI COMPUTER EDUCATION




அனைத்து கிளைகளிலும்
புதிய பிரிவுகள் ஆரம்பம்
22/9/2014 காலை
24/9/2014 9.30
(சி-8534)
தரமானதும் முழுமையானதுமான கல்விக்கு
DMI COMPUTER EDUCATION

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் | No.113, கஸ்தூரியார் வீதி, Tel. 021-222 4403 |
| நெல்லியடி | M.M.V. வீதி, Tel. 021-226 2470 |
| சாவகச்சேரி | No.174, கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 |
| சுன்னாகம் | No.130, கே.கே.எஸ் வீதி, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

காணி விற்பனை
சங்கானை நகரத்தை அண்மித்த பகுதியில் 3 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு:
021 3204701,
077 1346799
(7614)


தேவை
கட்டட நிர்மாணத்துறையில் தேர்ச்சி பெற்றவராயின் (கொழும்பு, தெஹிவளை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, களனி, கண்டி) மேசன், பெயின்டர், தச்சு, இலக்ரீசன், வெல்டர் (1200/=1500/=) கையுதவியாளர் (900/= 1100/=) தேவை. வயது (18-48) வருகை தரும் நாளிலே வேலைவாய்ப்பு. (சி-8539)
தொடர்பு:- 0776838231

வேலைவாய்ப்பு
உங்களின் கனவு எங்களின் பொறுப்பு. கல்வி தகைமை சிங்களம் அவசியமில்லை. பிரதான 195 தொழிற்சாலைகளில் 500 இற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புக்கள். (உற்பத்தி/ லேபல்/ பொதியிடல்/ தரம்பிரித்தல்) வயது 18-50 ஆண்/ பெண் சம்பளம் 24000/= 35000/= வரை. விவாகமானவர், குழுக்கள், நண்பர்கள் ஒரே தொழிற்சாலைகளில் வருகை. அன்றே வேலை மேலதிக தகவல்களுக்கு இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.
முல்லைத்தீவு- 077 4430166 யாழ்ப்பாணம்- 077 1116770
கிளிநொச்சி-077 4567082 வவுனியா- 077 8304018 (சி-8537)

நிரந்தர தொழில் வாய்ப்பு
உங்கள் கனவு நனவாக வேண்டுமா? நம்பிக்கையோடு தொடர்பு கொள்ளுங்கள். மொழி பிரச்சினையில்லை, கல்வி கற்ற அற்ற அனைவருக்கும் நல்லதோர் தொழிலை ஏற்படுத்தி கொடுப்பதே எமது நோக்கம். கொழும்பை அண்மித்த அதி நவீன தொழிற்சாலைகளான ஜேம்/டொபி/பால்மா/கிளவுஸ்/பிறிண்டிங்/பிளாஸ்டிக்.. போன்றவற்றில் உற்பத்தி/ பொதியிடல்/ தரம்பிரித்தல்/ களஞ்சிய பிரிவுகளுக்கு உடனடியாக 17-50 வயது ஆண், பெண் தேவை. சம்பளம் 18000/= 38000/= (தொழில் அடிப்படையில்) உணவு+ பாதுகாப்பான தங்குமிடம் குறைந்த விலைகளில் (நண்பர்கள்/ குழுக்கள்/ தம்பதியினர் ஒரே தொழிற்சா லையில் ஒரே இடம்) வருகை அன்றே வேலைக்கு செல்லலாம். தவற விடாதீர்கள் உடன் தொடர்பு கொள்ளுங்கள். 077 1116770/077 6838231 (சி-8538)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சார்க் அமைப்பைப் பலப்படுத்துவது குறித்து இலங்கை-மாலைதீவு ஜனாதிபதிகள் பேச்சு



(கொழும்பு)

சார்க் அமைப்பைத் தென்னாசிய மக்களுக்கு உகந்ததாக மாற்றுவது குறித்து இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் மாலைதீவு ஜனாதிபதி அப்துல்லா யமீன் கயூமும் ஆராய்ந்துள்ளனர். கொழும்பில் நேற்று முன்தினம் ஆரம்பமான ஆசிய அரசியல் கட்சிகளின் மாநாட்டின் தொடர்ச்சியாக இருதலைவர்களும் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போது இரு தரப்பு உறவுகளை மேலும் விஸ்தரிப்பது, வலுப்படுத்துவது குறித்தும் ஆராய்ந்தனர் என்று அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை- மாலைதீவு கூட்டு ஆணைக்குழுவில் இணக்கம் காணப்பட்ட விடயங்களைத் துரிதமாக நடைமுறைப்படுத்துவதெனவும் இரு தலைவர்களும் இணங்கியுள்ளனர். காத்மண்டுவில் நடைபெறவுள்ள 18 ஆவது சார்க் உச்சி மாநாடு குறித்து கருத்து தெரிவித்துள்ள இரு தலைவர்களும், அந்த அமைப்பை பலப்படுத்துவதற்கான வழிவகைகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் ஆராய்ந்துள்ளனர். மாலைதீவுக்கு சகல சாத்தியமான வழிகளிலும் உதவ இலங்கை தயாராக இருக்கிறது என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த சந்திப்பின்போது மாலைதீவு ஜனாதிபதியிடம் உறுதியளித்துள்ளார். (இ)

# இராணுவ ஆட்சியை நோக்கி நாட்டை நகர்த்துகிறது அரசு

## முன்னாள் ஜனாதிபதி அச்சம்

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் ஐக்கியமான கூட்டணியே, நாடு தற்போது எதிர்நோக்கி வரும் நெருக்கடிகளில் இருந்து நாட்டை விடுவிக்க ஒரே வழியாகும் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் உள்ள சகல முற்போக்காளர்களும், மக்கள் நலனில் அக்கறை கொண்டவர்களும் அதில் இணைந்து கொள்ள வேண்டும என அவர் தெரிவித்தார்.

இந்த இரண்டு தரப்பினரும் இணைந்து ஏற்படுத்தும் பொதுக் கூட்டணியினாலேயே இது சாத்தியமாகும்.

கட்சி பேதங்களை ஏற்படுத்திக் கொண்டு வேலிகள்ளை அமைத்து கொள்வதற்கு பொருத்தமான நேரம் காணப்படவில்லை.

வேலிகளை உடைத்தெறிந்து நாடு வீழ்ந்திருக்கும் பாதாளத்தில் இருந்து நாட்டை மீட்க நாட்டை நேசிக்கும் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

நாட்டில் இராணுவ ஆட்சி ஏற்பட்டு விடுமோ என்ற அச்சம் காணப்படுகிறது.

நாட்டில் இன்று வீதி நிர்மாணிப்பு பணிகளில் இராணுவத்தினர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனது வீடடுக்கு முன்னால் இருக்கும் கால்வாய்களை சுத்தம் செய்வதும் இராணுவத்தினரே.

நாட்டு மக்கள் மாற்றம் ஒன்றை ஏற்படுத்த முயற்சிக்கும் நேரத்தில் இவர்கள் தும்பு தடியை தூக்கி வீசி விட்டு, துப்பாக்கியை தூக்கிக் கொண்டு வீடுகளுக்குள் சென்று பாரிய அழிவை ஏற்படுத்தி விடுவார்களே என்ற பெரும் அச்சம் எனக்கு இருக்கிறது.

எமது வீடுகளில் நடப்பவற்றை கண்காணிக்கின்றனர். தொலைபேசிகளை இடைமறித்து கேட்கின்றனர். ஈமெயில்களை பார்க்கின்றனர். எனது ஈமெயிலை இரத்துச் செய்கின்றனர்.

யார் வந்து செல்கின்றனர் என்பதை கண்காணிக்க பெரிய ஹோட்டல்களில் அரச புலனாய்வு பிரிவினரை பணியில் ஈடுபடுத்தியுள்ளனர்.

எனது வீட்டுக்கு நண்பர் ஒருவர் வந்து சென்றால், மறுநாள் புலனாய்வு பிரிவினர் அவர்களிடம் விசாரணை நடத்துகின்றனர். இது குறித்து பாலசூரிய பொலிஸ்மா அதிபராக இருக்கும் போது கடிதம் எழுதினேன்.

நான் மாத்திரமல்ல, ஆட்சியில் இருப்பவர்களுடன் இணங்காதவர்கள் அனைவரும் இந்த நிலைமையை எதிர்நோக்கி வருகின்றனர். இன்று காணக் கூடிய இந்த அனைத்து செயற்பாடுகளும் இராணுவ ஆட்சியின் அடையாளங்கள் எனவும் சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# இரண்டு பிள்ளைகளுடன் கடலில் குதித்தார் தாய்!

## பிள்ளைகள் மரணம்



(திருகோணமலை)

தனது இரண்டு பிள்ளைகளுடன தாயொருவர் கடலில் குதித் துள்ளதாகவும் அதில் பிள்ளைகள் இரண்டும் மரணமடைந்துவிட்டனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையில் இடம் பெற்ற இந்த சம்பவத்தில் தாய் காப்பாற்றப்பட்டுள்ளார் என்று தெரிவித்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் ஒரு மணியளவிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது. சம்பவத்தில் 9 வயதான மகனும் 12 வயது மதிக்கத்தக்க மகளுமே பலியாகியுள்ளனர்.

கடலில் குதித்தவர்களை அருகிலிருந்த கடற்படையினர் காப்பாற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோதே இரண்டு பிள்ளைகளும் மரணமடைந்துள்ளனர். பாதிக்கப்பட்ட அந்த பெண் திருகோணமலை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

## பசு மாடுகள் பலி

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூா ஆறுமுகத்தான் குடியிருப்பு பகுதியில் புகையிரதத்தில் மோதுண்டு இரண்டு பசு மாடுகள் உயிரிழந்துள்ளன.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பை நோக்கிக் நேற்று முன்தினம் மாலை புறப்பட்ட சாதாரண புகைவண்டி ஏறாவூர் ஆறுமுகத்தான் குடியிருப்பைக் கடக்கும் போது அநதப் பகுதியில் அலைந்து திரிந்த கட்டாக்காலி மாடுகள் மீது மோதி யுள்ளது. இதன்போதே மேற்படி இரண்டு பசு மாடுகளும் ஸ்தலதத்தில் இறந்துள்ளன.

.இருப்பினும் புகையிரதப் பயண[illegible] ஏற்படவில்லை என்று புகையித பகுதியினர் தெரிவித்துள்ளனர். (இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பிரிவுத்துயர் பகிர்வு

### திருமதி நடராஜா கிமபதிதேவி



மலேசியாவைப் பிறப்பிடமாகவும் யாழ். கருகம்பனை, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா கிமபதிதேவி கடந்த 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பின்னர் பூதவுடல் பிற்பகல் 3.30 மணிக்கு கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி நடராசா தங்கமுத்து



4 ஆம் வட்டாரம் புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் 5 ஆம் வட்டாரம் நயினாதீவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தங்கமுத்து கடந்த 17 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்திலுள்ள அவரது சகோத ரத்தின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கமலநாதன் சியாமளா



சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கமலநாதன் சியாமளா கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 7 மணிக்கு Brampton Crematorium & Visitation Center Inc, 30 Bramwin Ct, Brampton, ON L6T 5A9, Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி விசுவலிங்கம் பர்வதம்



கட்டுவன் ஊரங்குனையைப் பிறப்பிடமாகவும் கனடா North Yorkஐ வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் பர்வதம் கடந்த 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 8 மணிக்கு Elgin Mills Crematorium 1591 Elgin Mills E, Richmond Hills, On, L4S 1M9 Canada என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### பத்மாசினி ஆறுமுகம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மாசினி ஆறுமுகம் (அதிபர்) கடந்த 18 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 5 மணிக்கு தகனம் செய்யப்படும்.


### மயில்வாகனம் கதிரிப்பிள்ளை



கரணவாய் மேற்கு சோளங்கனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கதிரிப்பிள்ளை கடந்த 18 ஆம் திகதி வியாழக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.

### கிருஸ்ணபிள்ளை இராமநாதன்



யாழ். ஈச்சமோட்டையைச் சேர்ந்த கிருஸ்ணபிள்ளை இராமநாதன்(முன்னாள் இலங்கை வங்கி உத்தியோகத்தர்) நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் துண்டி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### தம்பிப்பிள்ளை நவரத்தினம்



காரைநகர் தங்கோடையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிப்பிள்ளை நவரத்தினம் கடந்த 17ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி நல்லதம்பி நாகம்மா



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நாகம்மா கடந்த 17ஆம் திகதி புதன் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 3 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# காஷ்மீரிலும் வாக்கெடுப்பு தேவையா?



ஐக்கிய இராச்சியத்திலிருந்து பிரிந்து போவதா வேண்டாமா என்பது குறித்து ஸ்கொட்லாந்தில் நடத்தப்பட்ட பொதுமக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு போல இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் இடையே பிரச்சினையாக இருக்கக் கூடிய காஷ்மீர் மாநிலத்திலும் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற குரல்கள்தற்போது இந்தியாவில் எழுந்துள்ளன.

ஸ்கொட்லாந்துக்கும் அதன் மக்களுக்கும் ஜனநாயக முறையில் வாக்களிக்க பிரிட்டன் அனுமதி வழங்கியது போல, இந்தியாவும் காஷ்மீர் பிரச்சினையில் ஜனநாயக ரீதியில் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று காஷ்மீர் பிரிவினைவாத தலைவர்கள் குரல் எழுப்பியுள்ளனர்.

ஐக்கிய இராச்சியத்தின் நடவடிக்கை வரவேற்கத்தக்கது என்றும், மக்களுக்கு ஜனநாயக உரிமை அளிப்பது தொடர்பில் இந்தியா ஐக்கிய இராச்சியத்திடமிருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும் காஷ்மீர் பிரிவினைவாத தலைவர் சையத் அலிஷா கிலானி தெரிவித்துள்ளார்.

ஆனால், காஷ்மீரில் பொது மக்கள் வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று குரல் கொடுப்பவர்கள், தங்களின் சொந்த நலன்களுக்காகவே குரல் கொடுப்பதாகவும் தங்களின் அரசியல் நோக்கங்களுக்கு ஏற்ப மக்களின் உணர்வுகளை தவறாக திசை திருப்ப முயல்வதாகவும் ஜம்மு காஷ்மீர் மாநிலத்தின் பாரதிய ஜனதா கட்சி தலைவர் பயஸ் அகமது பட் தெரிவித்துள்ளார்.

காஷ்மீர் மக்களுக்கு இப்படியான வாக்கெடுப்பில் நம்பிக்கை இல்லை என்றும், பெரும் பான்மையானவர்கள் தேசியவாதிகள் தான் என்றும் காஷ்மீர் மாநிலத்தின் பாஜக தலைவர் பயஸ் அகமது பட் கூறியுள்ளார்.

காஷ்மீரின் நிலைமையும் ஸ்கொட லாந்தின் நிலைமையும் முற்றிலும் வேறுபட்டவை என்றும், காஷ்மீர் சொந்த விருப்பத்தின் பேரிலேயே 1947 இல் இந்தியாவுடன் இணைந்ததாகவும் பாரதிய ஜனதாக் கட்சியின் வெளிவிவகாரத் துறைத் தலைவர் சேஷாத்ரி சாரி தெரிவித்துள்ளார்.

'எந்த ஒரு மாநிலமும் எப்பொழுது வேண்டுமானாலும் இந்திய யூனியனில் இருந்து பிரிந்து சென்று தனித்து இயங்கும் உரிமையை பெறும் அரசியல் அமைப்பு திருத்தம் வேண்டும்' என்று நாடு சுதந்திரம் அடைந்த புதிதில் கோரிய தமிழகக் கட்சியான, திராவிட முன்னேற்றக் கழகம் தற்போது காஷ்மீர் பிரச்சினையில் வேறு நிலைப்பாட்டை கொண்டுள்ளது.

காஷ்மீர மாநிலத்துக்கு ஏற்கனவே இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 370-இன் கீழ் தனி அந்தஸ்து அளிக்கப்பட்டுள்ளது என்றும் பொது மக்கள் வாக்கெடுப்புக்கு அவசியம் இல்லை என்றும் திமுக தலைவர்களில் ஒருவரான கே.எஸ. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஜனநாயகக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக உள்ள காஷ்மீரில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றமும் இந்தியாவுடன் ஒன்றி இருக்கும் முடிவையே ஏற்றுக கொண்டு இயங்கி வருகிறது என்றும் அங்கு பொதுமக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பு தேவையில்லை என்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டி.ராஜா தெரிவித்தார். (இ)

## இந்தியாவுக்கான புதிய அமெ. தூதுவர் நியமனம்

(புதுடில்லி)

இந்தியாவுக்கான புதிய அமெரிக்கத் தூதராக ரிச்சர்ட் வர்மாவின் பெயரை ஜனாதிபதி பராக் ஒபாமா முன்மொழிந்துள்ளார்.

செபடெம்பர் 29ஆம் திகதி இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்கத் தலைநகர் வோஷிங்டனுக்கு விஜயம் செய்யவிருக்கும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த நியமனத்திற்கு அமெரிக்க நாடாளுமன்றம் ஒப்புதல் அளிக்கும் நிலையில், கடந்த மார்ச் மாதம் தனது தூதர் பதவியை இராஜினாமா செய்த நான்சி பாவெலுக்குப் பதிலாக அவர் பதவியேற்பார்.

அமெரிக்க செனட்டின் பாதுகாப்பு ஆலோசகராக வர்மா ஏற்கனவே பணியாற்றியுள்ளார்.

2008ஆம் ஆண்டில் இலினாய்ஸ் மாகாணத்தின் செனட்டராக ஒபாமா இருந்தபோது, ஜனாதிபதி தேர்தலுக்கான விவாதங்களில் பேசுவதற்கு வர்மா அவருக்கு உதவி புரிந்திருக்கிறார் என ஊட கங்கள் கூறுகின்றன.

இவருடைய பெற்றோர் 1960 களில் இந்தியாவிலிருந்து அமெரிக்கா வந்தனர்.

இந்தியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான உறவு "21ஆம் நூற்றாண்டை வரையறுக்கும் உறவுகளில் ஒன்றாக இருக்கும்" என 2010ஆம் ஆண்டில் ஜனாதிபதி ஒபாமா குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவு எதிர்பார்த்த அளவு முன்னேறவில்லை. கடந்த ஆண்டு நியூயோர்க்கில் இருந்த இந்தியத் தூதரகத்தில் பணியாற்றிய தேவயானி கோப்ரகேட் என்ற அதிகாரி, விசா மோசடி வழக்கில் கைதுசெய்யப்பட்டு சில நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டதையடுத்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவு மிகவும் மோசமடைந்தது.

அப்போதைய இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் நான்சி பாவல் தனது பதவியை இராஜினாமா செய்தார். சில நாட்களாகவே அவர் இதற்குத் திட்டமிட்டிருந்ததாக அதிகாரிகள் கூறினாலும், தேவயானி விவகாரத்தின் காரணமாகவே அவர் இராஜினாமா செய்ததாக யூகங்கள் எழுந்தன. (இ)

## இந்தியாவின் பிரபல இசைக்கலைஞர் மெண்டலின் சீனிவாஸ் காலமானார்

(சென்னை)

இந்தியாவின் பிரபல இசைக் கலைஞர் மெண்டலின் சீனிவாஸ் கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை தோல்வியடைந்ததை அடுத்து, தனது 45ஆவது வயதில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை காலமானார்.



1969ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி பிறந்த உப்பலப்பு சீனிவாஸ் என்ற இவர் ஆந்திர பிரதேசம் மாநிலம் பாலக்கோல் பகுதியைச் சேர்ந்தவர்.

இளம் வயதிலேயே தனது தந்தை சத்திய நாராயணாவின் மெண்டலினில் ஒரு விசித்திரமான ஆர்வத்தை இவர் வெளிப்படுத் தியதை அடுத்து, அவரது தந்தை இவருக்கு மெண்டலின் இசைக் கருவியை வாசிக்க கற்றுக்கொடுத்தார்.

1978ஆம் ஆண்டில் முதல் முறையாக பொது மேடையில் தனது இசைக் கச்சேரியை ஆரம்பித்த இவர் பத்மசிறி விருது, சங்கீத நாடக அகடமி விருது போன்ற மதிப்புமிக்க விருதுகளை பெற்றுள்ளார்.

மேற்கத்தேய இசைக்கருவியை ஒரு கர்நாடக இசை மேடையில் அற்புதமாக வாசித்து பண்டிதர்களையும் பொது மக்களையும் பிரமிப்பில் ஆழ்த்தும் இவர், இங்கிலாந்து மற்றும் கனடா ஆகிய நாடுகளின் முன்னணி இசைக் கலைஞர்களுடன் இணைந்து பல்வேறு இசை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார்.

இவரது மறைவுக்கு பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் உள்ளிட்ட பிரபலம் வாய்ந்த பலர் அஞ்சலி செலுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

## திகில் நகரம் 24 மணி நேரத்தில் 5 கொலை

மதுரையில் 24 மணிநேரத்தில் 5 கொலை சம்பவம் நடந்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மதுரையில் கடந்த வியாழக் கிழமை இரவு 10.30 மணியளவில் புதூர் பகுதியை சேர்ந்த முத்துப்பாண்டி (வயது 31) என்பவர், 4 பேர் கொண்ட கும்பலால் சரமாரி யாக வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

இவர் திமுக இளைஞரணி நிர்வாகி என்பது குறிப்பிடத்தக்கது. தல்லாகுளம் பகுதியில் வியாழன் இரவு 10 மணியளவில் பந்தல் அமைப்பாளர் கருப்பையா (வயது32) என்பவரை 2 ஆட்டோக்களில் வந்த 10 பேர் கொண்ட கும்பல் வெட்டி கொலை செய்தது.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் நேற்றுமுன்தினம் மதியம் மதுரை ஜெய்ஹிந்துபுரம் பகுதியில் பழிக்குப் பழியாக நடந்த சம்பவத்தில் மேலும் 3 பேரை, 10 பேர் கொண்ட கும்பல் அரிவாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்களால் பட்டப்பகலில் வீடு புகுந்து வெட்டியது.

இதில் பாம்பு நாகராஜா (வயது19), அவரது தம்பி கருப்புராஜா(வயது[illegible]) மற்றும் இவர்களது நண்பர் கார்த்திக்(வயது22) ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

வீடுகள் நெருக்கமாக உள்ள பகுதியில், குறுகலான தெருவில் சர்வ சாதாரணமாக அரிவாள், கத்தி, உருட்டுக்கட்டை உள்ளிட்ட ஆயுதங்களுடன் ஊர்வலமாக வந்து இந்த கும்பல் 3 பேரையும் வெட்டி சாய்த்துள்ளது.

கொலை செய்த பின்னர் சாதாரணமாக நடந்து சென்று விட்டனர். இது மதுரை மக்களுக்கும், பொலிசாருக்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. 24 மணி நேரத்திற்குள் அடுத்தடுத்து நடந்துள்ள 5 கொலைகள் மதுரை மக்களையும் அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. (இ)

பாரதச் செய்தி

## ஏர் இந்திய விமான பயணம் திடீர் ரத்து கொந்தளித்த பயணிகள்

(சென்னை)

இந்தூரிலிருந்து மும்பை செல்லும் ஏர் இந்தியா விமானம் ஏ.ஐ. 636 இல் நேற்றுமுன்தினம் மாலை தொழில் நுட்ப கோளாறு ஏற்பட்டது. இதன் காரணமாக விமானத்தில் பயணம் செய்ய வந்த பயணிகள் அனைவரும் இந்தூர், தேவி அகில்ய பாய் ஹோல்கர் விமான நிலையத்திலேயே மூன்று மணி நேரம் காக்க வைக்கப்பட்டனர்.



அப்போதும் கோளாறு சரி செய்யப்படாததால் விமானத்தின் பயணம் இரத்து செய்யப்பட்டதாக ஏர் இந்தியா நிறுவனம் அறிவித்தது. விமானத்தின் முதற் பக்க சக்கரத்தில் கோளாறு ஏற்பட்டுள்ளதாகவும் 20 நிமிடம் தாமதமாக விமானம் புறப்படும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. 20 நிமிடம் சென்ற பின்பும் விமானம் கிளம்பிய பாடில்லை. பின்னர் ஒரு மணி நேரம் கழித்து விமானம் புறப்படும் என்று மீண்டும் ஒரு அறிவிப்பு வந்தது.

இப்படி பல மணி நேரம் பயணிகளின் பொறுமையை சோதித்த ஏர்-இந்தியா நிர்வாகம் இறுதியாக அவர்கள் அனைவரும் இன்று மும்பைக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்று அறிவித்தது. இதனால் கோபமடைந்தனர். விமான நிறுவனத்தின் பொறுப்பற்ற செயலை கண்டித்து அவர்கள் வாக்குவாதத்திலும் ஈடுபட்டனர்.

அப்போது பெண் பயணி ஒருவரை மத்திய தொழிற்பாதுகாப்பு படை காவலர் தாக்கிய சம்பவமும் நடந்துள்ளது. இரவு 8.05 மணிக்கு புறப்படும் இந்த விமானத்தில் பயணம் செய்யும் பயணிகள் மும்பை சென்ற உடன் அங்கிருந்து பாங்கொக் மற்றும் கோவா செல்லும் இணைப்பு விமானத்தில் பயணம் செய்ய டிக்கெட் பதிவு செய்திருந்தனர். இந்நிலையில் இந்த விமானத்தின் பயணம் இரத்து செய்யப்பட்டதால் அப்பயணிகள் இணைப்பு விமானத்தில் பயணம் செய்ய முடியாமல் பெரும் அவதிக்குள்ளானது குறிப்பிடத்தக்கது. (இ)

## விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் அழிக்கப்பட்டதாக இந்தியா அறிவிப்பு

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் அழிக்கப்பட்டதாக இந்தியா அறிவித்துள்ளது.

தமிழகத்தின் நாகப்பட்டினம் பொலிஸார் இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயு தங்களை அழித்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

கடந்த 1985 ஆம் ஆண்டு மீட்கப்பட்ட ஆயுதங்களே இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத்தின் வேதாரணியம் மற்றும் கோடிக்கரை ஆகிய பகுதிகளின் கரையோரங்களிலிருந்து இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டிருந்தன.

250 கைக்குண்டுகளும், 166 டெட்டனேட்டர்களும் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட வெடிபொருட்கள் நீண்ட நாட்களாக பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இவை அழிக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் உண்மையைக் கண்டுபிடித்து உலகிற்கு வெளிப்படுத்திவிடும்
~ இலத்தீன் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## வேலணையில் எடுத்த மனித எலும்புகள் யாருடையவை? இதோ! முதற்பரிசு பெறும் சரியான விடை

மண்ணைத் தோண்டி பொன்னை எடுப்பார்கள். ஆனால் இங்கோ மண்ணைத் தோண்டி பொன்னைப் புதைக்கிறார்கள்.

தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த பொன்மனச் செம்மல் எம்.ஜி. இராமச்சந்திரனின் இறுதி நிகழ்வில் அவரின் உடலை அடக்கம் செய்த போது அந்த நிகழ்வை நேரடியாக வர்ணனை செய்தவர் கூறிய வார்த்தை தான் இது.

எம்.ஜி.ஆரின் உடலை மண்ணில் புதைக்கும் போது கூறப்பட்ட அந்த வார்த்தை கலங்கா நெஞ்சையும் கலங்க வைத்தது.

மண்ணைத் தோண்டி பொன்னை எடுக்கும் நாடுகள், எண்ணெய் எடுக்கும் நாடுகள் எனப் பல வகை உண்டு. ஆனால் எங்கள் நாட்டின் வடபகுதியில் மண்ணைத் தோண்டினால் மனித எலும்புக் கூடுகளே வெளிவரும். அந்த அளவிற்கு எங்கும் மனிதப் புதைகுழிகள்.

இவ்வாறு மண்ணைத் தோண்டும் போது வெளிப்படும் மனித எலும்புக் கூடுகள் யாருடையவை? இவை யாரால் புதைக்கப்பட்டவை? என்ற ஆய்வுகள்; அவற்றின் முடிவுகள் என்று எதுவும் கிடையாது.

மனிதப் புதைகுழி என்றால் போதும் அதற்கு ஏதோ ஒரு விடயத்தை அரசாளும் வர்க்கம் கூறிக் கொள்ளும்.

மன்னாரின் திருக்கேதீஸ்வரப் பகுதியில் மிகப் பெரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டது; இது தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிசோதனை என்பவற்றின் முடிவுகள் என்ன? என்பது இதுவரை தெரியாத விடயம்.

ஆயினும் ஒரு காலத்தில் மலேரியா நோயினால் அள்ளுகொள்ளையாக இறந்து போனவர்களின் எலும்புக் கூடுகள் தான் அவை என்றும், சில வேளைகளில் இந்த இடம் சடலங்களை அடக்கம் செய்யும் சுடலையாக இருந்திருக்கலாம் என்று படைத்தரப்பால் கூறப்பட்டது.

இப்படியாக தமிழர்கள் வாழும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் எங்கெங்கெல்லாம் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்படுகின்றனவோ அவற்றுக்கெல்லாம் ஏதோ ஒரு பதில் படைத்தரப்பால் அல்லது ஆளுந்தரப்பால் கூறப்படுகிறது.

அப்படியானால் வேலணைப் பிரதேச சபை வளாகத்தில் வெட்டப்பட்ட குழியில் இருந்து மனித எச்சங்கள் மீட்கப்பட்டனவல்லவா? அதற்குக் கூறப்படும் பதில் என்னவாக இருக்கும் என்று ஒரு கேள்வி எழுப்பப்பட்டது.

ஓர் அன்பர் அளித்த பதிலுக்கு பரிசு கொடுக்கலாம் என்று நோக்கர்கள் தீர்மானித்தனர். அந்தப்பதில் என்னவாக இருக்கும் என்பதே இப்போது உங்களுடைய அவா.

ஆம்! வேலணையில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் இந்தக் காலத்துக்குரியவையல்ல. அவை சீதையை மீட்பதற்காக இராமர் இலங்கைக்கு வந்தபோது அவருடன் வந்த சிலர் வேலணையில் இறந்து போயினர். அவ்வாறு இறந்தவர்களுடைய சடலங்கள் இப்போது வேலணைப் பிரதேசசபையிருக்கும் இடம் அப்போது சுடலையாக இருந்தமையால் அங்கு அந்தச் சடலங்கள் புதைக்கப்பட்டன. அவற்றின் எச்சங்களே இவை.

சிலவேளை இராமரோடு கூட வந்த அனுமர்களின் எலும்புக் கூடாகவும் இவை இருக்கலாம் என்பதே அந்தப் பதில்.

அட! நல்ல பதில். படைத்தரப்பு சொல்லக்கூடிய இந்தப் பதிலை முன்கூட்டியே கூறிய நம் அன்பருக்கு முதல் பரிசு கொடுப்பது நியாயம் என்பதை இப்போது நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என்று நம்புகிறோம்.

## இலஞ்சம்பெற்ற உத்தியோகத்தருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை

(கொழும்பு)

பத்தாயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றுக கொண்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சட்ட விரோத மதுபானங்களை கைப்பற்றி நீதிமன்றிற்கு குறைந்தளவு மதுபான போத்தல்களை முன்னிலைப் படுத்துவதற்காக கான்ஸ்டபிள் 10 ஆயிரம் ரூபாய் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25ஆம் திகதி இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

மாரவில பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிக் கொண்டிருந்த போது குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் இவ்வாறு இலஞ்சம் பெற்றுக்கொண்டுள்ளார்.

கடமையை உரிய முறையில் மேற்கொள்ளத் தவறியமைக்காக நீதிமன்றம் தண்டனை விதித்துள்ளது.

இலஞ்சம் பெற்றுக் கொண்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தருக்கு பத்தாண்டுகளுக்கு ஒத்தி வைக்கப்பட்ட எட்டாண்டு கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு உயர் நீதிமன்ற நீதவான் குமுதினி விக்ரமசிங்க இந்த தண்டனையை நேற்று முன்தினம் விதித்துள்ளார்.

தண்டனைக்கு மேலதிகமாக 20 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப் பட்டுள்ளது. (இ)

## வாக்களிப்பில் முரண்பாடு தம்பி மீது அண்ணன் கத்திக்குத்து

பதுளை சென்.ஜேம்ஸ் தோட்டத்தில் வசிக்கின்ற குடும்பமொன்றில் மூத்த சகோதரன், தன்னுடைய இளைய சகோதரன் மீது கத்தியால் குத்தியுள்ளதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

மூத்த சகோதரர் விரும்பாத கட்சியொன்றுக்கு இளைய சகோதரர் வாக்களித்துள்ளதை அடுத்தே இந்த கத்திக் குத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அவரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (இ)

## ஒரு இலட்சத்து 40,319 பேர் ஓகஸ்ட் மாதம் இலங்கை வருகை

கடந்த ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு வந்து சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 40 ஆயிரத்த 319 பேராகும் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கை கூறுகின்றது.


கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இலங்கைக்கு வருகை தந்த சற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை விட இது 47.06 வீதம் அதிகமாகும். 2013 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் சுற்றுலாப் பயணிகள் ஒரு இலட்சத்து 23 ஆயிரத்து 269 பேர் இலங்கைக்கு வருகை தந்திருந்தனர்.

இந்தியா, ஐக்கிய இராச்சியம், சீனா, ஜேர்மன், பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்தே பெரும் எண்ணிக் கையான சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வரகை தந்துள்ளனர்.

சுற்றுலாப்பயணிகளின் வருகையால் இலங்கைக்கான வருமானம் அதிகரித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் அறிக்கையில் சுட்டிக்காடடப் பட்டுள்ளது. (இ)

## தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்



தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன்.

## கடவுளின் பார்வையில் நீதியை நீதியாகவும் மனிதர்களை மனிதர்களாகவும் காண கற்றுக்கொள்வோம்

இன்றைய சிந்தனைக்கு, பணியாளர்களை வேலைக்கு அமர்த்திய எஜமானன் பற்றி இயேசு கூறிய ஒரு உவமையை எடுத்துக்கொள்வோம். நிலக்கிழார் ஒருவர் வேலையாட்களை தனது வேலைக்கு அமர்த்த விடியற் காலையில் அவர்களைத் தேடி வெளியே சென்றார். அவர் நாளொன்றுக்கு ஒரு தெனாரியம் கூலி என வேலையாட்களுடன் ஒத்துககொண்டு அவர்களைத் தம் திராட்சைத் தோட்டத்துக்கு அனுப்பினார். ஏறக்குறைய காலை ஒன்பது மணிக்கு அவர் வெளியே சென்ற பொழுது சந்தை வெளியில் வேறு சிலர் வேலையின்றி நிற்பதைக் கண்டார். அவர்களிடம், நீங்களும் என் திராட்சைத் தோடடத்துக்குப் போங்கள் நேர்மையான கூலியை உங்களுக்குக் கொடுப்பேன் என்றார். அவர்களும் சென்றார்கள். மீண்டும் ஏறக்குறைய பன்னிரண்டு மணிக்கும் பிற்பகல் மூன்று மணிக்கும் வெளியே

### பரமபிதா காட்டிய பாதை

சென்று அப்படியே செய்தார். ஏறக்குறைய ஐந்து மணிக்கும் வெளியே சென்று வேறு சிலர் நிற்பதைக் கண்டார். அவர்களிடமும் நாள் முழுவதும் வேலை செய்யாமல் ஏன் இங்கே நின்றுகொண்டிருக்கிறீர்கள்? என்று கேட்டார். அவர்கள் அவரைப் பார்த்து, எங்களை எவரும் வேலைக்கு அமர்த்தவில்லை என்றார்கள். அவர் அவர்களிடம், நீங்களும் என் திராட்சைத் தோட்டத்துக்குப் போங்கள் என்றார். பின்பு அனைவருக்கும் சமமாக சம்பளம் கொடுக்கின்றார். அந்நிலக்கிழாரின் செயலுக்கு எதிராக முணுமுணுத்தவர்களை பார்த்து எனக்குரியதை நான் என் விருப்பப்படி கொடுக்கக் கூடாதா? அல்லது நான் நல்லவனாய் இருப்பதால் உங்களுக்கு பொறாமையா? என கேட்கின்றார்.

இங்கு இயேசு கூறும் உவமைக்கதையில் வரும் வேலையாட்கள், வேலைக்காகக் காத்துக கொண்டிருந்தவர்கள், சோம்பேறிகள் அல்ல. காலையிலிருந்து அவர்கள் யாராவது தங்களை வேலைக்கு அழைத்துச் செல்வார்கள் என்று காத்திருக்கிறார்கள். இவர்கள் அன்றைய [illegible] சமுதாயத்தின் அடி மட்டத்து மக்களே இவர்கள். அடிமைகளைவிட இவர்களின் நிலைமை மிக மோசமாக இருந்தது. உழைத்தால் தான் உண்ண முடியும் என்ற நிலைமை. கடுமையாக நாள் முழுவதும் உழைத்தாலும், அரை வயிற்று உணவு தான் அவர்களுக்கு கிடைக்கும். ஒருநாள் வேலையில்லை என்றாலும், அவர்களின் குடும்பமே பட்டினி கிடக்க வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட தொழிலாளர்களைத்தான் இன்று நாம் பார்க்கிறோம்.

நீதி என்பது என்ன? என்று இன்றைய உவமைக்கதையின் பின்னணியில் பார்த்தால். ஒருவருக்குரியதை அவருக்கு வழங்குவதுதான் நீதி. இந்த நீதியும் மனிதரின் பார்வையில் ஒன்றாகவும், இறைவனின் பார்வையில் வேறொன்றாகவும் இருப்பதை இன்றைய உவமைக் கதை சுட்டிக்காட்டுகிறது. அத்துடன், மனித நீதியை விட்டு விலகி, இறைநீதியின் பக்கம் நாம் நடைபோட அறைகூவல் விடுக்கிறது. மனித நீதியின்படி முதலில் பணியில் சேர்ந்து, அதிக நேரம் உழைத்தவர்களுக்கு அதிக ஊதியம் வழங்கப்பட்டிருக்க வேண்டும். தாமதமாக வந்து, குறைந்த நேரம் உழைத்தவர்கள் குறைவாக வழங்கப்பட்டிருக்க வேண்டும். இதுதான் சரி. அப்போதுதான் அனைவரும் நேர்மையாக உழைப்பர்.

ஆனால், இறைவனின் பார்வை அப்படி இல்லை. அது பரிவின் பார்வையாக, பாசத்தின் பார்வையாக இருக்கிறது. ஏதோ ஒரு காரணத்தால், சில வேளைகளில் மனித, சமூக காரணங்களால் எல்லா மனிதர்களுக்கும் சமமான வாய்ப்புகளும், திறமைகளும் அமைந்து விடுவதில்லை. ஒரு சிலர் பிறரை விட பிற்பட்டவர்களாக, அல்லது பிற்படுத்தப் பட்டவர்களாக இருந்து விடுகின்றனர். அவர்கள் மீது சிறப்பான ஒரு பரிவைப் பொழிந்து அவர்களுக்கும் அதிக ஆற்றலும், வாய்ப்புகளும் கிடைத்தவர்களுக்கு இணையான ஊதியத்தை நிலக்கிழார் வழங்குகிறார். இதுதான் இறைநீதி. கடவுளின் நீதி மனித நீதியைப் போன்றதல்ல. மனிதர் வழங்கும் நீதி வரையறைக்கு உட்பட்டது. ஆனால் கடவுள் வழங்கும் நீதி தாராள அன்பின் அடிப்படையில் அமைந்தது. கடவுளின் அன்பு தான் அவருடைய நீதிக்கு அடிப்படை. எனவே, கடவுள் அநீதியாகச் செயறபடுகிறார் என்பதைவிட, தாராள உள்ளத்தோடு நடந்துகொள்கிறார் என்பதே உண்மை.



கடவுளின் நீதி மனித கணிப்புகளுக்கு அப்பாற்பட்டது என நாம் உணர வேண்டும். கடவுள் மக்களை வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. அதே நேரத்தில் அவருடைய கொடை எப்போதுமே தாராளமாக நமக்கு வழங்கப்படுகிறது. எனவே, கடவுளின் தாராளத்தைக் கண்டு நாம் பொறாமைப்படுதல்

ம.பிரான்சிஸ்க்
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்

பொருத்தமாகாது. கடவுளின் நீதி இரக்கமும் பரிவும் தோய்ந்த அன்பு இதயத்திலிருந்து பிறக்கும் ஒன்று. கடவுளின் இரக்கத்திற்கு எல்லை கிடையாது. கடவுளின் இரக்கத்திற்கு நாம் மனித கணிப்புப்படி வேலி கட்ட முடியாது. முதலில் வந்தவர்களுக்கு முன்னுரிமை என்னும் தத்துவம் கடவுளைப் பொறுத்த மட்டில் உண்மை ஆகாது.

முதலில் வந்தாலும் சரி, கடைசியில் வந்தாலும் சரி எல்லாருக்கும் சம உரிமையே என்பதே கடவுளின் நீதி. கடவுள் தாராள உள்ளத்தோடு பிறருக்கு நன்மை செய்கிறாரே என நினைத்து நாம் பொறாமைப்படுவதும் முறையாகாது. மாறாக, எல்லா மக்களையும் சமமாக நடத்துகின்ற நம் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராய் இருப்பது போல நாமும் நிறைவுள்ளவர்களாய் இருக்க வேண்டும். நமது மனித பார்வையில் நீதியைப்பாராமல், இறைவனின் பார்வையில் நீதியை, நீதியாகவும் மனதர்களை மனிதர்களாகவும் காணக் கற்றுக் கொள்வோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய போட்டி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கத்தினால் நடத்தப்படும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் இறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது. இப்போட்டிக்கு பிரதம விருந்தினராக யாழ். கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண் தயாளன் கலந்து கொள்ளவுள்ளார். (க)

# எல்.பி.எல்.கிரிக்கெட் யாழில் ஆரம்பம்



எல்.பி .எல் கிரிக்கெட் சுற்றுப்போட்டி யாழ்ப்பாணத்தில் விரைவில் நடைபெறவுள்ளது. அணிக்கு 8 பேர் 8 ஓவர்கள் கொண்டதாக இப்போட்டி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக்கழகங்கள் 0773 655261 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். போட்டியில் வெற்றி பெறும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படவுள்ளது. (க)

# மன்னார் கிரிக்கெட் போட்டி
# ஸ்ரார் ஈகிழ் வி.கழகம் வெற்றி



மன்னார் மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட கிரிக்கெட் விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் 10 ஓவர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி வெள்ளிக்கிழமை காலை 9 மணியளவில் மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமாகியது.

குறித்த போட்டியினை, தமிழ் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வினோ நோகராதலிங்கம் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார். 9 அணிகள் கலந்து கொளளும் இச்சுற்றுப்போட்டி 3 பிரிவுகளாக இடம் பெறவுள்ளது. முதல் சுற்று லீக் முறையிலும் அதிலிருந்து 06 அணிகள் தெரிவு செய்யப்பட்டு நொக்கோட் முறையில் போட்டிகள் இடம்பெறும்.

இந்நிலையில் முதல் போட்டி ஸ்ரார் ஈகிழ் விளையாட்டுக்கழகத்துக்கும் மன்னார் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகத்துக்கும் இடையில் இடம்பெற்றது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம், முதலில் துடுப்பாட்டத்தை தெரிவு செய்தனர்.

இதன்போது சித்திவிநாயகர் விளையாட்டுக்கழகம் 10 ஓவர்கள் முடிவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களை பெற்றுக்கொண்டனர்.

எதிர்த்து துடுப்பாடிய ஸ்ரார் ஈகிழ் விளையாட்டுக்கழகம் 6.1 ஓவர்களில் விக்கெட்டுக்கள் எவையும் இழக்காத நிலையில் 101 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றனர்.

இப்போட்டி தொடர்ந்து எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (28) வரை இடம் பெறவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# அரசியல் சாயம் பூசி கனவை சிதைக்காதீர்கள்- ஹபீஸ்



தயவுசெய்து கிரிக்கெட் விளையாட்டை அரசியலாக்காதீர்கள் என்று பாகிஸ்தான் அணித் தலைவர் முகமது ஹபீஸ் கூறியுள்ளார்.

பாகிஸ்தான் அணியின் சகலதுறை ஆட்டக்காரர் முகமது ஹபீஸ் இதுகுறித்து கூறியதாவது, நாங்கள் இந்தியாவில் வசிக்கவில்லை. கிரிக்கெட் விளையாடுவதற்காகவே இங்கு வந்திருக்கிறோம்.

நாங்கள் தாயகம் திரும்புகிற போது எங்களின் கிரிக்கெட் ஆட்டத்தாலும், செயல்களாலும் இங்குள்ள மக்களின் மனங்களை கவர்ந்து செல்வோம். இங்கே எங்களுடைய வீரர்களுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கும் நல்ல வரவேற்பு இருக்கிறது, அதை அழிக்க நாங்கள் விரும்பவில்லை.

விளையாட்டில் அரசியலை கலக்காதீர்கள், பிரச்சினை என்பது இரு நாடுகளின் அரசியல் வாதிகளுக்கு இடையில்தான். வீரர்களாகிய எங்களுக்கு இடையே இல்லை.

எங்களை இணைந்து விளையாட அனுமதியுங்கள், உங்களின் ஆதாயத்துக்காக அரசியல் சாயம் பூசி எங்களின் கனவுகளை சிதைக்காதீர்கள். விளையாட்டிலும் விரோதத்தை நுழைக்காதீர்கள் என்று கூறியுள்ளார். (க)

# மலிங்கவுக்கு கணுக்காலில் காயம்
# சிகிச்சைக்காக அவுஸ்திரேலியா பயணம்



அடுத்தாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டியில் பங்கேற்கும் இலங்கை கிரிக்கெட் அணிக்கு பின்னடைவு ஒன்று ஏற்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளர் லலித் மலிங்க தமது இடது கணுக்காலில் ஏற்பட்டுள்ள உபாதைக்காக சத்திரசிகிச்சை ஒன்றின் நிமித்தம் அவுஸ்திரேலியாவுக்கு பயணமாகிறார்.இந்நிலையில் 16 வாரங்களுக்கு அவரால் போட்டிகளில் பங்கேற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன்காரணமாக 2015 உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் ஆரம்பிப்பதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே அவரால் பயிற்சிகளில் ஈடுபட முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. உலக கிண்ண கிரிக்கெட் போட்டிகள் 2015 பெப்ரவரி 14ஆம் திகதி அவுஸ்திரேலியாவிலும், நியூஸிலாந்திலும் ஆரம்பமாகின்றன. எனவே உலக கிண்ணப்போட்டிகளில் மலிங்கவின் பங்களிப்பு குறித்து சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (க)

# பிரியாணிக்காக சண்டையிட்ட டோனி!



வீட்டில் செய்த பிரியாணியை சாப்பிட அனுமதிக்காததால் நட்சத்திர ஹோட்டலை டோனி தன் அணியுடன் காலி செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சம்பியன்ஸ் லீக் இருபது-20 போட்டியில் கடந்த புதன்கிழமை ஐதராபாத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும், சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் பங்கேற்க வந்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு "கிராண்ட் ககாடியா" என்ற ஐந்து நட்சத்திர ஹொட்டலில் அறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் ஐதராபாத்தின் பேமஸான பிரியாணியை, ஐதராபாத்தை சேர்ந்த இந்திய வீரர் அம்பத்தி ராயுடு, தனது வீட்டில் இருந்து தயாரித்து சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்களுக்கு அளிக்க ஏற்பாடு செய்துள்ளார்.

எனவே, அவரது வீட்டில் இருந்து பிரியாணி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்களுக்கு சப்ளையாகியுள்ளது.

கிராண்ட் ககாடியா ஹோட்டல் விதிமுறைப்படி வெளியில் இருந்து கொண்டுவரப்படும் உணவுகளை ஹோட்டலுக்குள் வைத்து சாப்பிட அனுமதி கிடையாதாம்.

ஆனால் இந்திய அணியின் அணித்தலைவர் டோனிக்கு தங்களது விதிமுறையை சற்றே தளர்த்தி பிரியாணி சாப்பிட அனுமதி கொடுத்துள்ளது ஹோட்டல் நிர்வாகம். மேலும் [illegible] அறைகளில் பிரியாணியை சாப்பிட்டுக் கொள்ளலாம் என்றும், வேறு எங்கும் வைத்து சாப்பிட கூடாது என்றும் ஹோட்டல் நிர்வாகம் நிபந்தனை விதித்துள்ளது.

ஆனால் சென்னை சூப்பர் கிங்ஸ் அணியினர் அதிலும் குறிப்பாக டோனி, சாப்பாட்டுக்காக ஒதுக்கப்படும் பகுதியில் தங்களை சாப்பிட அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுள்ளார்.

இந்த கோரிக்கையை ஏற்க ஹோட்டல் நிர்வாகம் மறுப்பு தெரிவித்துவிட்டதாக கூறப்படுகிறது. இதையடுத்து உடனடியாக ஹோட்டலை காலி செய்த சென்னை சூப்பர் கிங்ஸ் அணி வீரர்கள், "தாஜ் கிருஷ்ணா" என்ற மற்றொரு நட்சத்திர ஹோட்டலுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

இதுகுறித்து கிரிக்கெட் வாரிய நிர்வாகி ஒருவர் கூறுகையில், ஹோட்டலை காலி செய்ய பிரியாணி ஒரு காரணம் கிடையாது. அந்த ஹோட்டலின் சேவையில் எங்களுக்கு திருப்தியில்லை என்று கூறியுள்ளார். (க)

# தேசிய மல்யுத்தப் போட்டி
# சிவானந்த மாணவர்கள் வெற்றி



அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மல்யுத்தப் போட்டியில் கல்லடி சிவானந்த தேசிய பாடசாலை மாணவர்கள் இருவர் இரண்டாம் இடத்தை பெற்றுள்ளனர். அகில இலங்கை பாடசாலைகள் தேசிய விளையாட்டு விழா - 2014 கடந்த 14,15,16ஆம் திகதிகளில் கொழும்பு அசோகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

இதில்17 வயதுக்குட்பட்ட மல்யுத்தப்போட்டியில் 58 கிலோ கடேற் பிரிவில் என்.பிரகாஸ் மற்றும் 19 வயதுக்குட்பட்ட 55 கிலோ கடேற் பிரிவில் என்.நிசோத் ஆகியோர் வெள்ளிப்பதக்கங்களை பெற்று பாடசாலைக்கும் மற்றும் மாவட்டத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின்...

பிரச்சினைக்கு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு காணப்படவேண்டும் என்பதையே இந்தியாவிரும்புகிறது என்றும் அவர்கள் கூறினர். கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை விடுவித்தமைக்கு பாராட்டுத் தெரிவித்த அவர்கள், படகுகளை விடுவிக்குமாறும் கோரியுள்ளனர். இந்திய - இலங்கை மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காக இலங்கை -இந்திய நாடுகளுக்கிடையில் புதிய கடல்கொள்கை அவசியம் எனவும் அவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். மீனவர் விவகாரம் ஒரு வாழ்வாதார பிரச்சினையாகக் கருதப்பட வேண்டும்.

இலங்கை இந்த விடயத்தை உணர்பூர்வமாக அணுகுவதுடன் நெகிழ்ச்சித் தன்மையுடன் நடந்து கொள்ளவேண்டும் என்றும் அவர்கள ஜனாதிபதியைக் கோரினர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. பா.ஜ.க.வின் இரண்டு தலைவர்களும் ஆசிய அரசியல் கட்சிகள் மாநாட்டில் பங்கேற்க கொழும்பு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11)








# Mega ஸ்கொலர்ஷிப்

**Win 75%**

இன்று (ஞாயிறு) மெகா புலமைப்பரிசில் பரீட்சை. இதுவரை இலவச பரீட்சை அனுமதிகளை பெற்றுக்கொள்ளாதவர்கள் இன்று காலை 9.00 மணிமுதல் மாலை 4.00 மணிவரை எமது யாழ்.நகர் பயிற்சி மையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

CSC-ASIAN COMPUTER EDUCATION
AN ISO 9001 : 2008 CERTIFIED TRAINING INSTITUTION

யாழ்.நகரில்
2G ஸ்ரான்லி வீதி,
021-2225677


# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தருமநாயகம் (ஆனந்தம்)

(மண்டைதீவு 7-ம் வட்டாரம்)

மண்டைதீவு 7 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் ஆடியம்பிட்டி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தருமநாயகம் நேற்று (20.09.2014) சனிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் தில்லையம்மா தம்பதியினரின் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பியப்பா கோமளம் தம்பதியினரின் மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருஸ்ணராஜா, கிருஸ்ணகுமார், சஞ்சீவன் காலஞ்சென்ற திவ்யா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற மகேஸ்வரி, தணிகாசலம், தையல்நாயகி (தேம்பா), நல்லம்மா மற்றும் பேரின்பநாயகம் (குணம்), கலாமணி (குஞ்சுமணி), பரமேஸ்வரி (கிளி) ஆகியோரின் சகோதரனும், கனகலிங்கம், தியாகலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் வினோதினி, பேரின்பநாயகி ஆகியோரின் மாமனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஆடியம்பிட்டி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

தகவல் :
குடும்பத்தினர்.
(0772487172)

(7645)

# இந்தியாவுக்கு முதற் தங்கம்



7வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்தியா முதல் தங்கப் பதக்கத்தை வென்றுள்ளது.

50 மீற்றர் துப்பாக்கி சுடுதல் பிரிவில் இந்தியாவின் ஜீத்து ராய் முதலிடம் பிடித்துள்ளார்.

பதக்கத்துக்கான போட்டியில் வியட்நாம் வீரரை தோற்கடித்து தங்கம் வென்றார்.

தங்கத்தை தீர்மானிக்கும் இறுதிச் சுற்றில் 8.4 புள்ளிகள் சேர்த்து ஜீத்து ராய் சாதனை படைத்தார்.

மொத்தத்தில் 184.2 புள்ளிகள் சேர்த்து தங்கப் பதக்கத்தை வென்று சாதனை படைத்துள்ளார்.

# நூல் வெளியீடு

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜாவின்**
**யாழ்ப்பாணப் பண்பாடு :**
**மறந்தவையும் மறைந்தவையும்**

இடம் : நாவலர் கலாசார மண்டபம்
காலம் : 21.09.2014 (ஞாயிற்றுக்கிழமை)
பிற்பகல் 3.00 மணி
தலைமை : செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்

**நிகழ்வுகள்**

- தமிழ் வாழ்த்து
- வாழ்த்துரை - திரு. குழந்தை ம.சண்முகலிங்கம்
- தலைமையுரை
- வெளியீட்டுரை - பேராசிரியர் நா.சண்முகலிங்கன் *(முன்னாள் துணைவேந்தர், தலைவர், சமூகவியல்துறை)*
- முதற்பிரதி வழங்கல்
- நயப்புரை - திரு.ந.விஜயசுந்தரம் *(வலம்புரி பிரதம ஆசிரியர்)*
- சிறப்புப்பிரதிகள் வழங்கல்
- ஏற்புரை
- நன்றியுரை - திரு.சி.பத்மராஜா

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

- விழாக்குழுவினர்


உறவுகளுடன் கைகோர்க்கும் இனிய தருணத்தில்

**உங்களுடன் நாம்...**

➡ உங்கள் வீட்டில் விசேட வைபவமா?
எல்லா ஏற்பாடுகளும் நாமே உங்களுக்காக
✱Hall Booking, Makeup, Decorations, Photo&Video Cakes Etc..

➡ திருமணத்தின் பின் உங்கள் தேனிலவை எம்மூடாக பயணியுங்கள்...
✱Thailand, India Honeymoon Packages

➡ இந்தியாவில் திருமணத்ினை நடத்த விரும்புபவர்களுக்கான அனைத்து ஒழுங்குகளும் செய்து தரப்படும்.

➡ உங்கள் கணவன்/ மனைவி வெளிநாட்டிலா? நீங்கள் அவர்களிடம் விரைவாக செல்வதற்கான ஆலோசனைகள்

➡ கடவுள் பக்தி நிறைந்தவர்களுக்கான இந்தியாவின் நவக்கிரக கோவில் யாத்திரை. தென்னிந்திய திருத்தல யாத்திரைகள்.

'உங்கள் மனநிறைவு எங்கள் மகிழ்ச்சி'

(7644)

**WINSTAR FUNCTION COORDINATORS**
106, Palaly Road, Thirunelveli, Jaffna. 0770776979



THE FIRST TIME யாழ்ப்பாணத்தில் முதல் முதலாக



Gongzheng Thunderjet Digital Printer
(World Color Digital Technology)

NEW Photo Quality Printing

Photo Quality 40/=
Normal Quality 35/=

Jana Digital 0770731654

- பந்தல் பிறிண்டிங்
- பனர் பிறிண்டிங்
- விளம்பரப் பதாகைகள்
- ஸ்ரிக்கர்கள்
- லைட் பதாகைகள்

ஜனா டிஜிற்றல் பிறிண்டிங்
மானிப்பாய் வீதி, ஆறுகால் மடம்.
021 221 3233, 077 073 1654

(ச-8550)


# வற்றாத வரலாறாய் எம் வரதன் ஆசான்



வீழ்வது எல்லாம் எழுவதற்குத்தான்
நீங்கள் எமக்கு விதைத்த அறிவு
என்றுமே வீழ்வது இல்லை
வாழ்க்கையை வாழ்ந்து காட்டிய
வளமான ஆசான் நீங்கள்
தமிழன் சாதிக்க வேண்டும் என்றும்
தாராளமாய் சொல்வீர்கள்
கல்வியை களமாக்கி – உங்கள்
கனவுகளை நனவாக்க
நிச்சயம் தேசியத்தில் நாம்
புதுமை செய்வோம்

உங்கள் கற்பித்தலால் கவரப்பட்டு
இன்று உம் பிரிவால் கண்ணீரைச் சுமக்கும்
**A\L 2013, 2015 மாணவர்கள் D.C.M**

(ச-8549)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்சி...

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"ஆரம்பத்திலிருந்தே பல தவறுகள் இடம்பெற்றுள்ளன. புதுடில்லிக்கென ஒரு கொள்கை காணப்பட்ட அதேவேளை, முன்னாள் தமிழக முதலமைச்சர் எம்.ஜி.இராமச் சந்திரன் வட இலங்கை தமிழ்நாட்டின் ஒரு பகுதி என்ற கொள்கையை பின்பற்றினார்.

இந்த நிலையில் ஆட்சிக் கவிழ்ப்பு இடம் பெறலாம் என்ற அச்சத்திலேயே இந்தியாவின உதவியை அப்போதைய இலங்கையின்ஜனாதிபதி ஜே.ஆர் ஜெயவர்த்தன கோரினார்.

இதன் காரணமாக நாங்கள் குழப்பத்துக்குள் சிக்குண்டோம். பிரபாகரன் எங்களது ஒவ்வொரு தகவலையும் இடைமறித்துக் கேட்டார்.

அதனால் அவர் எங்களுக்கு முன்னரே செயற்பட்டார். ராஜிவ் காந்தி நல்லவர். 1991 ஆம் ஆண்டு அளவிலேயே அவருக்கு தான் செய்த தவறுகள் தெரிந்திருந்தன" என்று நட்வர் சிங் மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)


# கண்ணீர் அஞ்சலி



**செல்வி பத்மாசினி ஆறுமுகம்**

முன்னாள் அதிபர் யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை (1971-1981)
மன்னார் மாவட்ட கல்விப் பணிப்பாளர் (1982-1988)

எமது பாடசாலையின் புகழ்பூத்த முன்னாள் அதிபர் 18.09.2014-ல் கொழும்பில் இறைபத மடைந்ததையிட்டு துயர் அடைகின்றோம். அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், மாணவிகள், பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்.
யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.

(சி-8546)


## புலி...

ற்றுவிப்பாளரே கைது செய்ய ப்பட்டுள்ளார்.

நிகழ்வில் கலந்து கொண்டிருந்த குறித்த ஆசிரியரின் கழுத்துப் பட்டியில் தமிழீழம் என்ற எழுத்தும் சின்னமும் இருந்துள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (செ-11)


**Personal Class-கணினி**

*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.

Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design, DTP (Photoshop CS6, CorelDraw X6, PageMaker, Adobe Illustrator, Adobe Indesign)

*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்

TP:0779672038 ஆசிரியர்: KRC


## சர்வ...

சுட்டிக்காட்டியுள்ளது.

ஜெனிவாவில் நடைபெறும் ஐ.நா மனித உரிமை பேரவையின் கூட்டத்தில் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்துள்ள அமெரிக்க பிரதிநிதிகள் இதனை கூறியுள்ளனர்.

இலங்கை, ருவாண்டா, சிரியா உள்ளிட்ட சில நாடுகளில இந்த நிலைமை யை கண்காணிக்க முடியும்எனவும்அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேசம் தாமதமாக கவனம் செலுத்தியதால், சம்பந்தப்பட்ட நாடுகள் மனித உரிமை மீறல்கள் சம்பவங்களை எதிர் நோக்க நேரிட்டுள்ளதாகவும் அவர்கள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (செ-11)


# Study in Latvia

(Schengen Visa valid for 27 countries)

ஐரோப்பிய நாடான Latvia வில் குறைந்த செலவில் படிக்க ,உழைக்க

- No IELTS
- G.C.E A/L 3 Pass only
- Very low Course fee
- High Visa Success rate
- English Medium
- 20 Hours Part time Allowed

Spot Admission on 11th Oct 2014

அங்கீகரிக்கப்பட்ட இலங்கைக்கான முகவர்

ICS Study Overseas
107 B 1/1 ,Galle Road, Colombo - 06
77, மணிக்கூட்டு கோபுரவீதி, யாழ்ப்பாணம் (பெருமாள் கோவில் அருகாமையில்)
021 4926222 , 077 3013060



SPEED LANKA EXPRESS

# வெளிநாடுகளுக்கான

தபால் பொதி விநியோக சேவை



- உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
- உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
- சர்வதேச விமான பயண சீட்டுகளை பெற்றுக்கொள்ளலாம்

(சி-8535)

**Speed Lanka Express (Pvt) Ltd.**

135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 0772931062, 0776217926
www.speedlanka.net



மிஸ் பண்ணிடாதீங்க! அப்புறம் வருத்தப்படுவீங்க!

பதிவுகளுக்கு முந்துங்கள்...

சிவமயம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்

# தென்னிந்திய தெய்வ தரிசனம்

(கோயில்கள் சுற்றுலாத்தலங்கள் உள்ளடக்கம்)

மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி அம்மன், அழகர் கோயில், ஆயிரம்கால் மண்டபம், சுசீந்திரம், கன்னியாகுமரி, பகவதியம்மன், திருச்செந்தூர், இராமேஸ்வரம், இராமநாதசுவாமி கோயில், அக்னிதீர்த்தம், 22 புனிதகிணறுகளில் நீராடல், பிள்ளையார்பட்டி விநாயகர், திருச்சி, ஸ்ரீரங்கம், சமயபுரம்மாரியம்மன், ஆடிகும்பேஸ்வரர், சாரங்கபாணி கோயில், தஞ்சை பெரியகோயில், திருவாரூர், கும்பகோணம், சீர்காழி, சிதம்பர நடராஜர், காஞ்சிகாமாட்சி, ஏகாபரேஸ்வர் கோயில், வரதராஜபெருமாள்கோயில், திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர், மாங்காடு மாரியம்மன், திருவேற்காடுகருமாரியம்மன், திருக்கடையூர் அபிராமி, திருப்பதி, பெங்களூர் சிவன்கோயில், மைசூர்மகாராஜஅரண்மனை, பொருட்காட்சியகம், பிருந்தாவனத்தோட்டம், நந்திக்கோயில், சாமுண்டேஸ்வரி கோயில், ஊட்டி தாவரவியல் பூங்கா, ஊட்டிஏரி, ஐம்பூத ஸ்தலங்கள், ஆறுபடைவீடுகள், நவக்கிரக கோயில்கள், சென்னை சீரடிபாபா, அண்ணா, எம்.ஜீ.ஆர்.நினைவு சதுக்கங்கள், மெரினா கடற்கரை

சென்னையில் ஒரு நாள் பொருட்கள் கொள்வனவு செய்ய ஒதுக்கப்படும்.

**உள்ளடக்கப்பட்டவைகள்:**

1. இரு வழி விமானக்கட்டணம் (Return Air Ticket all taxes).
2. உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு,காலை,மாலை தேநீர் மற்றும் குளிர்பானம்
3. சுத்தமான குடிநீர்.(Mineral Water)
4. குளியலறை இணைந்த தங்குமிட வசதி. (Attached Bathroom, Colour TV).
5. முழு சுற்றுலாவிற்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து.
6. திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும்.
7. இருவழி விமான நிலையத்திற்கான கட்டணம்(Airport Transport Up and Down)



மற்றும் சுற்றுலாத்தலங்கள்.

**தரிசனம்: 15 நாட்கள்**
**புறப்படும் திகதி: 19.10.2014**

மட்டுப்படுத்தப்பட்ட யாத்திரிகர்கள் மட்டுமே 28.09.2014 இற்கு முன்பு பதிவு செய்யவும்.

IK TOURISM கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி, (இளந்தாரி கோவிலடி) இணுவில்கிழக்கு, இணுவில் 0771010104
(7640)



# அந்தியேட்டி கிரியை அழைப்பு



திருமதி
**குலேந்திரன் சிவகெங்காதேவி**
(கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு)

தோற்றம் 27.05.1962 மறைவு 25.06.2014

கடந்த 25.06.2014 புதன்கிழமை அன்று அகால மரணமடைந்த எங்கள் குடும்ப விளக்கு அமரர் திருமதி சிவகெங்காதேவி குலேந்திரன் (கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் - முல்லைத்தீவு) அவர்களின் வீட்டுக்கிரியைகள் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (22.09.2014) திங்கட்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

\- அன்புடன் குடும்பத்தினர்
கணவர்: திரு.இ.குலேந்திரன்,
பிள்ளைகள்: கீர்த்தனா, நிதர்சனா, நிகுந்தனா

தண்ணீருற்று மேற்கு, முள்ளியவளை.
தொ.பே: 0774397658
(சி-8540)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.